Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 30.00
நவம்பர் 22-28, 2012

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 989

## கையாலாகாத ஐ.நா. சபையும்



## நம்பிக் கெட்ட தமிழர்களும்



## அதிகாரப் பகிர்வும் அபிவிருத்தியும்

எதிரும் புதிருமா?

## கணக்கில் எடுக்கப்படாத அங்கவீனர்கள்

ஆன்மீகம்

## ஏற்றத் தாழ்வற்ற இறைவன்

இறைவனின் சந்நிதியில் ஏற்றத்தாழ்வுகள் என்பது இருக்கக் கூடாது. இறைவன்பால் அன்பு கொண்டவர்கள் அந்த இறைவன் முன்பாக எல்லோரும் எவ்விதத்திலும் குறைந்தவர்கள் அல்ல; அவர்கள் எல்லோரும் சமமானவர்களே என்று நினைப்பார்கள்.

வாழ்க்கையில் ஏற்றத்தையும் இறக்கத்தையும் அவனே ஏற்படுத்துவதால், மனிதன் அவற்றைத் தன் சுயவிருப்பத்திற்காக, சுயநலன்களுக்காக ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது.

திருநாவுக்கரசு நாயனார் உழவாரம் சகிதம் கோவிலைச் சுற்றியுள்ள புல் பூண்டுகளைச் செருக்கி ஒதுக்கியது போன்று, மனிதராகிய நம்மிடத்தில் தோன்றும் ஏற்றத்தாழ்வுகளை இறைவனிடத்தில் பயபக்தி கொள்வதன்மூலம் செருக்கி ஒதுக்கிவிட முடியும்.

பிட்டுக்கு மண் சுமந்த நிலையும் பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்த கதையும் நமக்கு முன்பே நாம் வணங்கும் முழு முதற்கடவுள் ஏற்றத்தாழ்வு அற்றவன் என்பதை வெளிப்படுத்தி நிற்கையில், மனிதர்களாகிய நாமும் அதுபோல் வாழ வேண்டியது உயர்ந்த பண்பு அல்லவா!

-அனந்த நாராயணன், கைவேலி.

## தீயோரின் தீவினை

மனித சமுதாயத்தில் சில சமயங்களில் பொல்லாங்கு செய்யும் மனிதர்கள் மகிழ்ச்சிகரமான வாழ்வை நோக்கியும், கர்த்தருக்குப் பயந்து ஆவிக்குரிய ஜீவியத்தினூடாக வழி நடப்பவர்கள் துன்பியலைச் சுமந்த வண்ணமும் பயணிப்பதான ஒரு தோற்றம் கொள்கிறது.

இந்நிலையில் கர்த்தர்மேல் கொண்டிருக்கும் நம்பிக்கை, விசுவாசம், அன்புணர்வு போன்றவற்றைச் சிதறடிக்காமல் ஒரு நிலைக் கொள்கையோடு பயணிக்குமிடத்து, அதற்குரிய பலனை அறுவடை செய்ய முடியும் எனக் கூறப்படுகிறது.

"ஏனெனில், 'கர்த்தர் நீதிமானைத் தள்ளவொட்டார்..." என வேதம் தெரிவிப்பதிலிருந்து, தீயோரிடமிருந்து நல்லோர்கள் காக்கப்படுவதையும், இரட்சிக்கப்படுவதையும் அறியமுடிகின்றது. அத்தோடு தீயோரானவர்கள் என்னென்ன தீவினைகளை இங்கு மனிதர் முன்பு விதைக்கிறார்களோ அத்தீவினைகளே அவர்களை நியாயம் தீர்க்கும் என்பதை சங்கீத ஆகமமானது "தீயோரைத் தீவினையே சாகடிக்கும் (சங்கீதம் -34:21)என்று வெளிப்படுத்துகிறது.

சாமுவேல், புதுக்குடியிருப்பு.

## மறை கூறும் மனித வாழ்வு

மனிதன் மேன்மையுடையவன். ஆற்றலுடையவன், அரிய சாதனைகளைச் சாதிக்கும் வல்லமையுடையவன் படைப்பினங்களில் இவனைத்தவிர சிறப்புடையது எது? என்ற வினாவுக்கு விடை பூச்சியமே.

ஆம், 'தவக்கல்து அலல்லாஹி' - அல்லாஹ்வின் துணை மட்டுமே போதுமானது என்று உறுதி பூண்டுவிட்டேன் என்று வீறு கொண்டெழும் ஓர் முஸ்லிம் எத்தகைய அரிய சாதனைகளையும் சாதிக்க முடியும். ஆனால் தனக்குள்ளே பேதங்கள் கற்பித்து உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன் என்று வேற்றுமை காட்டக் கூடாது. அல்குர் ஆன் அடிமை தளைகளைத் தகர்த்தெறிந்து வேற்றுமை உணர்வுகளை வேரறுத்து ஒரு சகோரத்துவ சமுதாயத்தை உருவாக்க உலகிற்கு அனுப்பப்பட்டது.

நிச்சயமாக நாம் மனிதனை மிக்க அழகிய அமைப்பிலே படைத்திருக்கின்றோம்.

அல்குர் 95:4

அல்லாஹ்வின் அல்குர் ஆன் வசனம் அது. இதில் அவன் மனிதனின் ஆற்றலையும், மேன்மையையும், சிறப்பையும் பற்றித்தான் குறிப்பிடுகிறான். ஆகவே நாம் இறையுணர்வின் நிறையுருவாய், மறையுரையின் நெறியுருவாய் விளங்க வேண்டும். இதுதான் மறை கூறும் மனிதவாழ்வு. எம்.சீ. கலீல், கல்முனை - 05.

## கவிதைப்போட்டி இல 986



### ஈரம்

உடுக்கடித்து
உடன் பிறந்தவனை
ஆட வைத்து
உடல் வளர்க்கும்
தொழிலுக்குப் புறப்பட்டாலும்
உடன்பிறப்பை
நோகாது காவிச் செல்வது
நெஞ்சத்தின் ஈரம்.

அ. சந்தியாகோ,
கண்டி.

பாராட்டுக்குரியது

### சுமைச் சொகுசு...

எமதூரில்
காவுதடிக் கூடை
வியாபாரங்
காணாமல்
மாற்றூரில்...
பிழைப்புப்
பொருளும் - தன்
பிள்ளையுஞ்
சேர்த்து...
பெற்றவனுக்குச்
சுமை - பிள்ளைக்குச்
சொகுசு!

பாண்டியூர்
பொன் நவநீதன்.

## கவிதைப் போட்டி இல 989



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 04.12.2012

கவிதைப் போட்டி இல. 989 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### ஏழை

ஏழைக்குடிகள்
நாம் தினமும் இப்படி
கூடையில் சொந்தங்களை
சுமந்தவாறு ஊர் விட்டு ஊர்
போய் எம் வயிற்றுப்
பிழைப்புக்கு
வழி தேடுகிறோம்.

சு. ஜெயரூபன்,
பருத்தித்துறை.



### சுமையல்ல சுகம்!

பணக்கார வர்க்கமல்ல
இப்பாரில் நாம்
காரில் செல்வதற்கு.
குழந்தாய்!
எனக்கு நீ பாரமல்ல!
எந்நாளும் உனை
தூக்கி நடப்பதற்கு!

பிரியா பரந்தாமன்,
கைவேலி.

### விலை மதிப்பு!

ஒரு பக்கம் உடுக்கு
மறு பக்கம் பிள்ளை
சரிசம பங்காய்
விலைபேச எங்கே
கொண்டு செல்கிறான்
இந்த இளைஞன்.

ஆர்.ஷாம்,
அக்கரைப்பற்று.



### எடுத்துக்காட்டு!

அம்மா இல்லாப்
பிள்ளையாய்
வளர்ந்த இவனுக்கு
தந்தையின்
அரவணைப்புத்தான்
எல்லாம் போலும்!

ம.பைரவி,
யாழ்ப்பாணம்.

## உங்கள் பக்கம்

### போக்குவரத்து சீராகுவது எப்போது?

வடமராட்சிக் கிழக்குப் பகுதியில் மக்கள் குடியேறிய பின்னர் கிளிநொச்சியில் இருந்து ஆழியவளை வரையிலான பேரூந்து சேவைகள் ஆரம்பிக்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றது.

அத்துடன், கடலுணவு கொண்டு செல்லும் வாகனங்களின் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் புதுக்காட்டுச் சந்திவரை சென்று ஏ-9 வீதியூடாக வரும் வாகனங்களின் மூலமே கிளிநொச்சிக்குச் செல்லவேண்டியுள்ளது.

கிளிநொச்சிக்குத் தமது உற்பத்திப் பொருட்களைக் கொண்டு செல்லும் விவசாயிகளும் கடற்தொழிலாளர்களும் சுமார் இருபது கிலோ மீற்றர் தூரம் வரை நடந்து புதுக்காட்டுச் சந்தியை அடையவேண்டியுள்ளது.

எனினும் அளவுக்கதிகமான பொருட்களுடன் பயணத்திற்காகக் காத்திருக்கும் இம்மக்களை A-9 வீதியூடாக வருகின்ற தூர இட பேரூந்துகள் ஏற்றிச் செல்வதற்குத் தயங்குகின்ற நிலைமை இருக்கின்றது.

எனவே, இம்மக்கள் பல மணி நேரங்கள் காத்திருந்து கிளிநொச்சி நகரைச் சென்றடைய வேண்டியிருக்கின்றது.

கிளிநொச்சி நகருக்குப் பல்வேறு தேவைகளுக்காகத் தினமும் 300 இற்கும் மேற்பட்ட மக்கள் சென்று வருவதனால் கிளிநொச்சிக்கும் ஆழியவளைப் பிரதேசத்திற்குமிடையில் போக்குவரத்து வசதியைச் செய்து கொடுக்குமாறு பல்வேறு அதிகாரிகளிடமும் வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் இதுவரை அது நிறைவேற்றப்படவில்லை. இந்நிலையிலேயே குறித்த மக்களின் அவலத்தை தினமுரசின் உங்கள் பக்கத்திற்குச் சமர்ப்பிக்கின்றேன்.

கே. சூரியப்பிரகாஷ்.
ஆழியவள்ளை.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலை நகல்
(Fax): 0212221811
ஈ-மெயில்:
(E-mail):-
thinamurasu@live.com
விளம்பரத் தொடர்புகளுக்கு:-
0212220188





## அருமையிலும் அருமை

வாசக நெஞ்சங்களின் உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறது தினமுரசு. சிறுவர் பகுதி, - பெண்களுக்கான பகுதி, அறிவியல் ரீதியான கட்டுரைகள் என இன்னபிற விடயங்களும் முரசின் வாசகர்களுக்கு தீனி போடுபவையாக இருக்கின்றது. வாசகர்கள் எதை எதிர்பார்க்கின்றார்களென இனங்கண்டு அவற்றை அவர்களிடம் கொண்டு வருகின்றது. எல்லா பக்கங்களும் அருமையிலும் அருமை.

அ.யானு, யாழ்ப்பாணம்.

## வாசகர் சாலை



## உண்மையின் உரைகல்!

நடுநிலை தவறாமல் உனது பணியைத் திறம்பட ஆற்றிவருகிறாய். சென்ற வாரம் வெளிவந்த முரசில். "வெலிக்கடைத் தாக்குதலில் வெடித்தன மர்மங்கள்" எனும் கட்டுரை சபாஷ்! உள்ளதை உள்ளபடியே காட்டும் கண்ணாடிபோன்று. உண்மையை எடுத்துக் கூறியுள்ளார் கட்டுரை ஆசிரியர் மதியூகி.

இன்னும் இதுபோன்ற கட்டுரைகளை எதிர்பார்க்கின்றேன். சு.சரவணன், மட்டக்குளி.

## பணிதொடர பாராட்டுக்கள்

நினைவூட்டும் நிகழ்வுகளாக 'மகிழ்வூட்டும் ஹஜ்' என்னும் தலைப்பில் நான் எழுதிய கவிதையை 985ஆவது முரசின் கடைசிப் பக்கத்தில் கலரில் பிரசுரித்து காட்சிப்படுத்திய முரசே! உன்னைக் காலமெல்லாம் வாசிப்பேன், நேசிப்பேன்.

இதயத்துக்கு இன்பமளிக்கும் தினமுரசு நாளிதழாகவும் வருவது நல்லதொரு செய்தி. பணிதொடர பாராட்டுக்கள்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## பெருமை

முரசு கண்டுவரும் வெற்றிகளினால். நீண்டகால வாசகன் என்ற வகை யில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுகின்றது. அண்மையில் நான் கண்ட காட்சி என்னை மிகவும் கவர்ந்தது. கொழும்பில் சன நெருக்கடி மிக்க வெள்ளவத்தை வீதியோரத்தில் சுட்டெரிக்கும் வெயிலில் இருந்து பாதுகாப்பதற்காய் குடைக்குள் தஞ்சமடைந்திருந்த செருப்புத் தைக்கும் தொழிலாளி ஒருவர் தனது ஓய்வுநேரத்தின் போது முர சின் பக்கங்களை வரிவரியாய்ப் புரட்டிக்கொண்டிருந்தார். செருப்புத் தைத்துக் கிடைக்கும் பணத்தில் 30 ரூபாவைச் செலவழித்து முரசை வாங்கிப் படிக்கின்றார் என்றால் அவருக்கு முரசின் மீது எவ்வளவு மோகம் இருக்கவேண்டும். அந்தக் கணத்தில் முரசின் வாசகனாய் நானும் பெருமை கொண்டேன். செல்.ரமணி, கொழும்பு - 13.

# அடுத்த ஆண்டில் எண்ணெய் அகழ்வு

இலங்கையை சூழவுள்ள கடற்பிரதேசத்தில் எரிபொருள் காணப்படுவதாக அடையாளம்காணப்பட்டுள்ள இடங்களில் அடுத்த வருட முதற் பகுதியில் அகழ்வுப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாக பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்தார்.

யாழ்ப்பாண தென்பகுதிக்கும் கிழக்குப் பிரதேசத்திற்கும் இடைப்பட்ட பகுதிகளிலும் எண்ணெய் வளம் இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது என்று கூறிய அவர், அடுத்த வருடம் மற்றைய எண்ணெய் கிணறு தோண்டவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

22 நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது, பெற்றோலிய வள அபிவிருத்தி தொடர்பான செயலகத்தினூடாகவே எரிபொருள் அகழ்வு குறித்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதுவும் ஜனாதிபதியின் கீழே உள்ளது. கேர்ன் நிறுவனம் மன்னார் கடற்பரப்பில் 3 ஆய்வு கிணறுகள் தோண்டியது. இரண்டில் இயற்கை வாயு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. நான்காவது கிணறு தோண்டும் பணிகள் 2013 பெப்ரவரியில் ஆரம்பிக்கப்படுகிறது. கண்டு பிடிக்கப்பட்ட இடங்களில் உள்ள இயற்கை வாயுவின் பெறுமதியை மதிப்பீடு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# தங்கம் வென்றவரும் 'கம்பி' எண்ணுகிறார்!

தெற்காசிய விளையாட்டுப் போட்டியின் போது தங்கப்பதக்கம் வென்ற ரங்க விமலவன்சவையும் முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சீனப் பெண் ஒருவரிடமிருந்து நான்கு மில்லியன் ரூபா பணத்தை துப்பாக்கி முனையில் கொள்ளையிட்ட சம்பவம் ஒன்றில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்ட நிலையிலேயே அவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொள்ளுப்பிட்டிக் கமெரன் பிளேஸில் இடம்பெற்ற இந்தக் கொளளையின்போது பயன்படுத்திய தாகக் கூறப்படும் துப்பாக்கி ஒன்றையும், கார் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சந்தேக நபர்களான இருவரையும் எதிர்வரும் 29ஆம் திகதி இடம்பெறவுள்ள அடையாள அணிவகுப்பில் நிறுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## நாகரிகத்தின் வருகை எமது

# விழுமியங்களை பாதித்துவிடாது

## எம்.சந்திரகுமார் எம்.பி.



**எந்த நாகரிகத்தின் வருகையும் நவீன தொழில்நுட்பங்களின் வருகையும் எந்தவிதத்திலும் எமது மண்ணின் கலை, கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களை பாதித்துவிடாது என கண்டாவளை பிரதேச கலாசார விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் எம்.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்: நவீன நாகரீகம், உயர் தொழில்நுட்பம் ஆகியவற்றின் வருகையினை நாம் தடுத்துவிடமுடியாது தடுக்க கூடாது அவற்றின் நன்மைகளையும் எமது சமூகம் பெற்றுக் கொள்ளவேண்டும் இல்லையெனில் நாம் நவீன உலகிலிருந்து அன்னியப்பட்டுவிடுவோம் எனவே இவற்றுகளுக்கு மத்தியில் சமூக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி எமது தனித்துவத்தை பாதுகாத்துகொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

மேலும், மக்கள் அபிவிருத்தியில் ஒன்றிணைய வேண்டும் கிளிநொச்சி மாவட்டத்தில் பல பிரதேசங்கள் துரித அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களாக மாறியிருக்கின்றன. இதற்கு காரணம் அந்த பிரதேச மக்கள் அபிவிருத்தியில் பங்காளிகளாக மாறியிருக்கின்றார்கள். அபிவிருத்திச் செயற்பாடுகள் என்பது வெறுமனே அரசியல்வாதிகளினதும் அதிகாரிகளினதும் தலைகளில் சுமத்திவிடுகின்ற விடயமல்ல அபிவிருத்தியில் மக்கள் எப்பொழுது பங்காளிகளாக மாறுகின்றார்களோ அன்று அந்த பிரதேசங்களும் துரித அபிவிருத்தியை நோக்கி பயணிக்க ஆரம்பித்துவிடும் எனவும் தெரிவித்தார்.

# பாலியல் தொழிலுக்கு சட்ட அந்தஸ்து?

இலங்கையின் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக பாலியல் தொழிலை சட்டரீதியான தொழிலாக மாற்றுமாறு தென் மாகாணசபையினால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்கனவே சுமார் 40 ஆயிரம் பேர் பாலியல் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் இந்தக் தொழிலுக்கு உள்நாட்டில் ஆளணி குறைபாடு காணப்படின் வெளிநாடுகளிலிருந்து அதற்காக பணியாளர்களை வருவிக்குமாறும் அந்த யோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், மாகாணசபை நிதியொதுக்கீட்டின் கீழ் தென்கொரியா உள்ளிட்ட சில நாடுகளில் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக இந்தத் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதையும் குறித்த யோசனையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இஸ்லாமிய நூதனசாலை தொடர்பில் ஆராய்வு

காத்தான்குடியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் இஸ்லாமிய நூதனசாலை தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்று காத்தான்குடியிலுள்ள சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார பிரதியமைச்சரின் அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், நூதனசாலைக்குரிய அரும்பொருட்களை ஒப்படைத்தல் தொடர்பாக ஆராயப்பட்டது.

# அதிகாரப் பகிர்வும் அபிவிருத்தியும்

## எதிரும் புதிருமா?

ராஜ்



உண்மையில், இந்த நாட்டில் வளமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கும், இந்த நாட்டை ஆசியாவின் அதிசயமாக மாற்றுவதற்கும் முதலில் அமைதியை நோக்கிய சிந்தனையில் மக்களை வளர்த்தெடுக்க வேண்டும். இனவாதம் என்பது துடைத்தெறியப்படும் வகையில், அடிப்படை உருவாக்கப்பட வேண்டும். மக்கள் மத்தியில் நம்பிக்கைகள் ஊட்டப்படவேண்டும். அந்த நம்பிக்கை என்பது பாரபட்சம் அற்ற ஆட்சி நடப்பதாகவும், அரசியல் விடயத்தில் நியாயமான தீர்வொன்றும், சமத்துவமான உரிமைகளும் இந்த அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றது என்று சகல மக்களும் நம்பும் நிலையை உருவாக்கு தலாகும். அதற்கு அரசாங்கம் செய்ய வேண்டியதெல்லாம் தற்போது குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற தேவையற்ற கருத்தாடல்களுக்கும், உணர்வுபூர்வ பேச்சுக்களுக்கும் கடிவாளமிட்டு ஜனாதிபதியால் அடிக்கடி கூறப்படுவது போன்று மக்கள் பலனடையக் கூடிய வகையில் இருக்கின்ற அரசியலமைப்புக்கூடாக அதிகாரங்களை அந்த மக்களின் கைகளிலேயே ஒப்படைப்பதேயாகும்.

**அண்மைக்** காலமாக இலங்கையை மையப்படுத்தி பல்வேறு சம்பவங்களும் செய்திகளும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, 13ஆவது திருத்தச்சட்ட நீக்கம், திவி நெகும சட்டமூலம், இலங்கை விவகாரத்தில் ஐ.நா.வின் செயற்பாடுகள் பற்றிய சுய விமர்சனம் என்று பட்டியல் நீண்டு கொண்டு செல்கின்றது. இவற்றுக்கு மத்தியிலேயே ஜனாதிபதியினால் 2013 இற்கான வரவு செலவுத்திட்டமும் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

பல்வேறு சாதகபாதங்களை உள்ளடக்கியதாக வந்திருக்கின்ற இந்த வரவு செலவுத்திட்டம் வழமை போன்றே எதிர்மறை விமர்சனங்களை எதிர்த்தரப்புக்களால் முன் வைக்கப் பட்டுக்கொண்டிருக்கின்ற போதிலும் அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட பல்வேறு திட்டங்கள் உள்ளடக்கப் பட்டிருப்பதை மறுத்துவிட முடியாது. ஒப்பீட்டளவில் முன்னேற்றகரமானதாக அமையும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதே.

மூடிய அறைக்குள் பொருளாதார வல்லுனர்களுடன் நடக்கின்ற கருத்துப் பரிமாற்றங்களுக்கூடாக வரவு செலவுத்திட்டத்தை உருவாக்குகின்ற பாரம்பரியம் மாற்றியமைக்கப்பட்டு இந்த வரவு செலவுத் திட்டத்தை உருவாக்குவதற்கு முன்னர் ஜனாதிபதி அவர்கள் நாட்டின் பல பாகங்களுக்குச் சென்று நாட்டு மக்களினுடைய தேவைகள் பற்றி அறிந்திருந்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா போன்ற அபிவிருத்தித் தொடர்பான கூட்டங்களும் நடத்தப்பட்டிருந்தன.

இவ்வாறான கூட்டங்களில் மக்கள் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் மக்கள் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை துறைசார் விற்பன்னர்களினால் முன்மொழியப்பட்ட திட்டங்கள் என்பவையும் இந்த வரவு செலவுத்திட்டஉருவாக்கத்தின் போது கருத்தில் எடுக்கப்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

கல்வி, மருத்துவம், சுற்றுச் சூழல், பொருளாதார மேம்பாடு, கைத்தொழில், வறுமை ஒழிப்பு, பாது காப்பு, அரச நிர்வாக சேவையின் விரிவாக்கம், உட்கட்டுமான விருத்தி, விவசாயம் - கடற்தொழில் மேம்பாடு, கிராம அபிவிருத்தி உட்பட்ட பல முக்கியமான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக, கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் அளவும் இலவசக் கல்வி மீது செலுத்தப்பட்டுள்ள அக்கறையும் பாராட்டப்பட வேண்டியதே. இது அண்மைக் காலங்களில் கல்விசார் சமூகத்தினால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள், முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் என்பற்றைக் கருத்தில் எடுக் கப்பட்டமையை உறுதிப் படுத்துகின்றது.

அதேபோன்று இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குதல், நெல்லினுடைய விலை அதிகரிப்புப் பற்றிய விடயம், கால்நடை வளர்ப்போர் உட்பட சகல உற்பத்தியாளர்களுக்குமான ஊக்குவிப்புத் தொடர்பான கருத்தாடல்கள் உள்ளடக்கப்பட்டிருப்பது பொருளாதார விற்பன்னர்களால் பாராட்டும் வகையில் அமைந்துள்ளது.

இவ்விடத்தில் போரரினால் பாதிக்கப்பட்ட வட-கிழக்குப் பிரதேச மக்களின் அவலங்களைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் காணப்படவில்லை என்று கூட்டமைப்புப் போன்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

வடக்குக் கிழக்குப் பிரதேசங்களைப் பொறுத்தவரையில் அப்பிரதேச மக்கள் தமது வாழ்வை மீளக் கட்டியெழுப்புவதற்கு விசேடமான கரிசனைகளும்,

(22 ஆம் பக்கம் தொடர்ச்சி...)

வாரமலர்
தினமுரசு
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

# யாருக்காக யார் அழுவது?

தமிழ் பெண்களை உதவிப்படையில் சேர்த்துக் கொள்ளும் நிகழ்வு கடந்த வாரம் வன்னியில் இடம் பெற்றது. அந்த நிகழ்வில் 108 தமிழ் யுவதிகள் உதவிப் படையில் சேர்ந்து கொண்டதாகவும் வெளியில் செய்திகள் வெளியாகின.

அந்த நிகழ்வு தொடர்பான புகைப் படங்களைப் பார்த்தவர்களுக்கு புலப்பட்ட செய்தியானது தமிழ் யுவதிகளை பெண் படைச்சிப்பாய்கள் கையைப் பிடித்து இழுத்துச் செல்வது போல் இருப்பதாக அமைந்திருந்தது.

அவர்களுக்கு ஆயுதப் பயிற்சி இல்லை. முப்பத்தி ஐந்தாயிரம் ரூபாய் சம்பளம். அவர்கள் மற்றப் படைகளுக்கு உதவியாக மட்டுமே செயற்படுவார்கள். இந்த உதவிப்படையில் ஐயாயிரம் பேரைச் சேர்த்துக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்.

தமிழ் பெண்கள் பொருளாதாரத் தேவைகளுக்காகவும், பாதுகாப்பான வாழ்வுக்காகவும் பெரும் துன்பப்படுகின்றார்களாம். அந்தச் சவால்களை எதிர்கொள்வதற்கு உதவும் நடவடிக்கையாகவே இந்த நடவடிக்கையாம்.

அப்படியென்றால், வடக்கு-கிழக்கில் சுமார் ஒன்றரை இலட்சம் பெண்கள் விதைவைகளாகவோ அல்லது ஆண் தலைமைத்துவம் அற்றவர்களாகவோ இருக்கின்றனர். அவர்கள் கவனத்தில் எடுக்கப்படவில்லையா?. வன்னியில் என்றால் முன்னாள் பெண்புலிகள்ள மனதில் கொண்டு முன்னெடுக்கப்படும் திட்டமா?

இந்த நாட்டில் சிங்கள மக்களும், முஸ்லிம் மக்களும் இழப்புக்களை, சந்தித்தவர்கள்தான். அவர்கள் மத்தியிலும் இவ்வாறாக பெண்கள் இருக்கின்றார்கள். அவர்களையும் இவ்வாறான உதவிப்படையில் சேர்க்கலாமே. தமிழ் பெண்களின் துன்பங்களில் மட்டும் புதுவிதமான அக்கறையா?

போர் இல்லாத இலங்கையில் இருக்கின்ற படைகளை அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்துகின்ற நிலைமையே தற்போதுள்ளது. இந்த நிலையில், அந்தப் படைக்கு உதவிப்படை அதுவும் தமிழ் பெண்களடங்கிய படையினரின் தேவை என்ன? உண்மையில் இவ்வாறான பெண்களுக்கு பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவ வேண்டுமாக இருந்தால் வேறு மார்க்கமே இல்லையா? இப்படி பல கேள்விகளும், சந்தேகங்களும் தமிழ் மக்களிடையே இன்று எழுந்துள்ளது.

இந்தக் கேள்விகளையும், சந்தேகங்களையும் பகிரங்கமாக கேட்க அரசியல் தலைமைகள் என் போரும், சாதாரண தமிழ் மக்களும் தயாராக இல்லை. ஆகையால்தான் இதுவும் இங்கே நடந்தேறுகின்றதா?.

தமிழ் மக்களுக்கு பாதுகாப்பும், கௌரவமான உரிமைகளும் தேவை என்ற கோரிக்கைகள் இவ்வாறான முன்னெடுப்புக்களால் திட்டமிட்டு சிதைக்கப்படப்போகின்றதா? என்ற கவலைகள் தொடரப்போகின்றது.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

ஐ.நா. நிறுவனங்கள் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும். ஐ.நா. சபையின் இயலாமைக்கும், செயற்திறனற்ற போக்கிற்கும் இரத்தமும், சதையுமாக பலிகொடுக்கப்பட்டவர்கள் என்ற நிலை உலகில் இதுவே இறுதியாக இருக்கவேண்டும். இதுபோன்ற ஒரு துர்ப்பாக்கியம் உலகில் இனிமேல் எந்த இனத்துக்கும் நேர்ந்து விடக்கூடாது.

உலகில் உரிமைகளுக்காகவும், பாதுகாப்பான வாழ்வுக்காகவும் போராடும் இனங்களுக்காகத் தமிழ் மக்கள் செய்த தியாகமாக அந்த இழப்புக்களை ஏற்றுக் கொள்ள தமிழ் மக்கள் உறுதியெடுத்துக்கொள்வார்கள்.



## கையலாகாத ஐ.நா.சபையும்

# நம்பிக்கெட்ட தமிழர்களும்!

இலங்கையில் அரசியல் உரிமைகளுடனும், அச்சமற்ற பாதுகாப்புடனும் வாழ்வதற்கு தமிழர்கள் விரும்பியதற்கு மிகப்பெரும் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

தமிழர்கள் தரப்பிலிருந்து சரியான முறையில் தமது பிரச்சினையை இலங்கையிலுள்ள மற்றைய இன மக்களுக்கு தெளிவுபடுத்த முயற்சிக்கப்படவில்லை. அதே வேளை தீர்வொன்றைப் பெறுவதற்காக பரஸ்பர ஒற்றுமை-யோடு போராடவும் இல்லை.

போராட்ட வடிவம் மாற்றமொன்றைச் சந்தித்தபோது அதைத் தமிழர்கள் புரிந்து கொண்டு வியூகத்தை மாற்றவில்லை. சர்வதேச தளத்துக்கு பிரச்சினை மெல்ல நகர்வதைப் புரிந்து கொண்டு சர்வதேச தளத்தில் தமது பிரச்சினையை எடுத்துச் செல்லவும், அதற்கான ஆதரவைத் திரட்டவும் தமிழர்கள் தவறியிருக்கின்றார்கள்.

தமிழர்கள் என்ற இனம் ஆயுதம் ஏந்திய தமது சண்டியர்களின் வீரப்பிரதாபங்களில் பெருமிதமடைவதிலும், அதற்கு துதி பாடுவதிலும் பூரிப்படைந்ததா? அல்லது துப்பாக்கிகள் தீர்வைப் பறித்தெடுத்துக் கொண்டுவந்து தமது காலடியில் போடும் என்று கோமா நிலையில் இருந்ததா? என்பதைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

சர்வதேசங்களின் அத்தனை பக்கங்களிலும், இருந்த தமிழர்கள், இலங்கையில் மனிதப்படுகொலைகள் அதிகரிக்கவும், பயங்கரவாதம் பலமடையவும் உதவி செய்தார்கள். பொழுதுபோக்காக அவற்றை ரசித்தார்கள். இலங்கையில் நடந்து கொண்டிருப்பது தமிழருக்கும், சிங்களவருக்குமான பிரச்சினை என்று உணர்ச்சிவசப்பட்டார்களே தவிர, உலக நாடுகளின் நாகரிகத்துக்கு ஏற்ப தமிழர் பிரச்சினையை சர்வதேசமயப்படுத்தவில்லை.

சர்வதேசங்களிலும் தமிழர்கள் என்ற இனம் பயங்கரவாதிகள் என்று கருதத்தொடங்கியதை தமது வீரம் என்று பூரித்துக் கொண்டார்களே தவிர, தமது போக்கின் தவறுகளை சுட்டிக்காட்டவும், திருத்திக் கொள்ளவும் ஒருபோதும் முற்படவில்லை.

இப்படி உரிமைக்காக போராடிய தமிழர்கள் செய்த தவறுகளும், வரலாற்றுப் பிழைகளும் மிக மிக அதிகமாகும். இதனாலேயே 'அனுபவித்த இழப்புக்களும் அதிகமாகும்.

ஆகவே தற்போது ஏற்பட்டிருக்கும் பின்னடைவுகளுக்கும், அநாதரவான நிலைக்கும் பிழையான போராட்ட முன்னெடுப்பும், சரிபிழைகளை துணிந்து பேசவும், பரிகாரம் காணவும் துணியாத தமிழ் மக்களின் கோமா நிலை தந்திரோபாயமும் பிரதான காரணமென்பதை ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இந்தியாவும், சர்வதேசமும் ஏமாற்றி விட்டன என்பதும் இலங்கை அரசு மனிதப் படுகொலைகள் செய்து அழித்துவிட்டது என்பது முதன்மைக் காரணிகள் இல்லை.

இவ்வாறான சுய விமர்சனத்தைச் செய்யாமல் இப்போதும் சர்வதேசம்தான் தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்றும், இனி தமிழ் மக்கள் செய்வதற்கு ஒன்றுமில்லை சர்வதேசத்துக்கு சிங்கள அரசு பதில் சொல்லவேண்டியிருக்கும் என்றும் உளறுவது அடி முட்டாள்தனமும் பிற்போக்குத்தனமுமாகும்.

சர்வதேச நாடுகளின் ஒருமித்த சபையாக பார்க்கப்படும் ஐ.நா. சபையின் யோக்கியதையும் அச்சபை தமிழ் மக்களின் அவலத்தை, நியாயத்தை எந்தளவில் கணக்கில் எடுத்திருக்கின்றது என்பதையும் தற்போது மிகத் தெளிவாக புரிந்து கொள்ளமுடிந்துள்ளது.

வன்னியில் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது ஐ.நா. சபையின் செயற்பாடு தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் குழுவொன்றை நியமித்திருந்ததும், அந்தக் குழுவினரின் அறிக்கை தற்போது பகிரங்கமாக வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஐ.நாவின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சித்துள்ளது. இலங்கையில் ஐ.நா. ஆற்றிய பணியின் நோக்கம் யுத்தத்தைத் தடுப்பதல்ல, மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதுதான்.

ஆனால், இலங்கையில் பணியாற்றிய ஐ.நாவின் பணியாளர்களுக்கு அவ்வாறான உதவிகளைச் செய்வதற்கான தகுதிகளோ,அனுபவமோ இல்லை. இலங்கையில் நடைபெற்ற கொடூரமான யுத்தச் சவால்களை ஐ.நா. பணியாளர்களால் சமாளிக்கமுடியவில்லை. அதேவேளை, ஐ.நாவின் தலைமையகத்திலிருந்து இவர்களுக்கு ஒழுங்கான உதவிகளும் கிடைக்கவில்லை. பயங்கரவாதத்தை நசுக்குவதாக கூளுரைத்துவிட்டு, இலங்கை அரசாங்கம் முன்னெடுத்த விசயங்களை சர்வதேச நாடுகள் பெருமளவில் கண்டும் காணாமல் இருந்துவிட்டன. இதனால் கட்டமைப்பு ரீதியாகக்கூட பெரும் தவறுகள் நடந்து முடிந்துள்ளன. இப்படியான தவறு எதிர்காலத்தில் நடந்துவிடக்கூடாது.

யுத்தப்பிரதேசத்துக்குள்ளிருந்து வெளியேற முடியாமல் ஒரு சிறு இடத்தில் அப்பாவி மக்கள் மாட்டுப்பட்டிருந்தனர். அந்த நேரத்தில் அதாவது செப்டெம்பர் 2008 ஆண்டில் ஐ.நா. பணியாளர்களை இலங்கையின் வடக்கிலுள்ள யுத்த பகுதிகளிலிருந்து அரசு விலகிக் கொண்டிருந்தது.

ஐ.நா. பணியாளர்களின் பாதுகாப்புக்கு தாங்கள் உத்தரவாதம் வழங்க முடியாது என்று இலங்கை அரசாங்கம் எச்சரித்ததைத் தொடர்ந்து, ஐ.நா. இந்த முடிவை எடுத்தது. இலங்கை அரசாங்கத்தின் எச்சரிக்கையை ஐ.நா. எப்போதும் எதிர்த்துக் கேள்வி கேட்கவே இல்லை. ஐ.நா. வெளியேறியதால் யுத்தப்பிரதேசத்தில் அவலப்பட்ட மக்களுக்கு உதவிகள் கிடைக்கவில்லை. அவர்களுடைய உயிர்கள் பாதுகாக்கப்படுவதிலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

யுத்தப் பாதிப்புக்குள் இலட்சக்கணக்கான மக்களை விட்டுவிட்டு ஐ.நா. பணியாளர்கள் வெளியேறிய பின்னர், அம்மக்கள் தேவைக்கேற்ப பயன்படுத்தப்பட்டனர்.

புலிகள் மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியும், கட்டாயப்படுத்தி சண்டையில் ஈடுபட வைத்தும் வந்தனர். இதனால் அரச படையினரின் கண்மூடித்தனமான தாக்குதல்களுக்கு மக்கள் விலைகொடுத்தார்கள்.

கொல்லப்பட்ட பொது மக்களின் எண்ணிக்கையினால் இலங்கையில் பெருந்துயர சூழல் நிலவியது. பொதுமக்கள் கொல்லப்படாமல் தடுப்பதற்கு முயல வேண்டும் என்பதை கொழும்பிலுள்ள ஐ.நா. அதிகாரிகள் தங்களது பொறுப்பாகவே கருதியிருக்கவில்லை. ஐ.நா. தலைமையகத்திலிருந்த பொறுப்பானவர்களும் அறிவுறுத்தல்களையோ, மாற்று உத்தரவுகளையோ வழங்கியிருக்கவில்லை.

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக்கட்டம் அரங்கேறியபோது ஐ.நா. பாதுகாப்புச் சபையோ,வேறு முக்கிய ஐ.நா. நிறுவனங்களோ ஒரு முறைகூட உத்தியோகபூர்வமாக கூடியிருக்கவில்லை.

இப்படி அந்த அறிக்கையின் முக்கியமான பகுதி குறிப்பிடுகின்றது. இதை ஆராய்ந்து பார்க்கும்போது எந்தப் பாமரனுக்கும் தெளிவாகப் புரிந்துகொள்ளமுடிகின்ற விஷயம் என்னவென்றால், ஐ.நா. தமிழ் மக்களின் அவலங்களையிட்டு திரும்பியும் பார்க்கவில்லை. அப்பாவிகளின் மரணங்களை தடுக்கவோ, அதை உலக நாடுகளுக்கு எடுத்துச் சொல்லவோ முயற்சிக்கவில்லை.

அப்படியாயின் ஐ.நா. சபையானது செயற்திறன் அற்றதாகவுள்ளது. அது தகுதியும் அனுபவமும் அற்ற அதிகாரிகளை பெயரளவில் நியமித்து அப்பாவி மக்களை ஏமாற்றுகின்றது. திறனற்ற தலைமையகத்திலிருந்து வழிகாட்டலையோ, உதவி களையோ வழங்கக்கூடிய வல்லமையை இழந்து நிற்கின்றது. வல்லரசு நாடுகளின் தவறுகளுக்கும் தேவைகளுக்கும் முண்டு கொடுக்கின்ற அல்லது நியாயம் தேடுகின்ற சபையாக ஐ.நா. செயற்படுகின்றது.

அப்பாவி மக்களின் அவலங்களைத் தடுப்பதும், இழப்புக்களைத் தடுப்பதும், கொலைகளைத் தடுப்பதும் ஐ.நாவின் பணிகளல்ல. அது வசதியான நாடுகளின் கைப்பொம்மை. வல்லமை படைத்தவர்களின் முகவர் அமைப்பு என்று கூறப்படுகின்ற குற்றச் சாட்டுக்கள் தற்போது நிருபணமாகின்றது.

இலங்கையில் நடந்த தவறுகளுக்கு பான் கீ மூன் பொறுப்புக் கூற வேண்டும். தமிழ்மக்கள் கொடுத்த விலைக்கும், இழந்தவைகளுக்கும் கௌரவமான அரசியல் தீர்வு என்ற பரிகாரம் காணப்படுவதற்கு ஐ.நா. சபை நேரடியாகவே தன்னை அர்ப்பணிப்புச் செய்யவேண்டும். அது முடியாது என்று ஐ.நா. ஏற்றுக் கொள்ளுமானால் பான் கீ மூன் தனது இயலாமையை ஏற்றுக் கொண்டு தனது பதவியை இராஜினாமாச் செய்யவேண்டும். ஐ.நா. நிறுவனங்கள் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்.

ஐ.நா. சபையின் இயலாமைக்கும், செயற்திறனற்ற போக்கிற்கும் இரத்தமும், சதையுமாக பலிகொடுக்கப்பட்டவர்கள் என்ற நிலை உலகில் இதுவே இறுதியாக இருக்கவேண்டும். இதுபோன்ற ஒரு துர்ப்பாக்கியம் உலகில் இனிமேல் எந்த இனத்துக்கும் நேர்ந்து விடக்கூடாது.

உலகில் உரிமைகளுக்காகவும், பாதுகாப்பான வாழ்வுக்காகவும் போராடும் இனங்களுக்காக தமிழ் மக்கள் செய்த தியாகமாக அந்த இழப்புக்களை ஏற்றுக் கொள்ள தமிழ் மக்கள் உறுதியெடுத்துக் கொள்வார்கள்.

ஐ.நா. சபை என்ன தமிழ் மக்களின் உணர்வுகளையும், கோரிக்கைகளையும் புரிந்து செயற்படுமா? பரிகாரம் காணுமா? எதிர்காலம் மேலும் பல உண்மைகளை உலகிற்கு உணர்த்தும்.

-சிவன்-

எக்ஸ்ரே ரிப்போர்ட்



ரிஷி

18

# புலிகளின் வீழ்ச்சி!

## இறுதி நாட்கள்...

**இறுதி** யுத்தத்தில் புலிகள் தோற்ற காரணங்களில் முக்கியமானது, யுத்தத்துக்கு தேவையான ஆயுதங்கள் வந்து சேராததுதான்.

வன்னியில் இறுதி யுத்தம் நடைபெற்ற நாட்களில், ஆயுதங்களுடன் வந்த புலிகளின் கப்பல்கள் ஒவ்வொன்றாக அடி வாங்கின. பல கப்பல்கள் சர்வதேச கடல் பகுதியில் வைத்துத் தாக்கப்பட்டன. ஆயுதங்களுடன் மூழ்கடிக்கப்பட்டன. மில்லியன் கணக்கான டொலர் பெறுமதியுள்ள ஆயுதங்கள் நீருக்கடியே போயின.

**புலிகளின் கப்பல்கள் எங்கே, எப்போது வருகின்றன என்ற விபரங்கள் எப்படி இலங்கை கடற்படைக்கு சென்றன?**

புலிகளின் கப்பல்கள் இலங்கை கடல் பகுதியில் வைத்து தாக்கப்பட்டிருந்தால், இலங்கை கடற்படை ரோந்து சென்றபோது கண்ணில் பட்டது என்று சொல்லலாம். ஆனால், அநேக கப்பல்கள் தாக்கப்பட்டது, இலங்கைக் கடல் பகுதிக்கு வெளியே, சர்வதேசப் பரப்பில் இந்தோனேசியாவுக்கு அருகே வைத்துக்கூட புலிகளின் ஒரு கப்பல், இலங்கை கடற்படையால் தாக்கி, மூழ்கடிக்கப்பட்டது.

அந்த இடத்துக்கு செல்வதற்கே இலங்கை கடற்படை கப்பல்களுக்கு குறைந்தபட்சம் 48 மணி நேரம் தேவை.

**புலிகளின் கப்பல் அங்கே வரப்போகும் விபரம் எப்படி இவ்வளவு துல்லியமாக இலங்கை கடற்படைக்கு தெரியவந்தது?**

யாராவது தகவல் கொடுத்தால்தான், அந்தப் பகுதிக்கு இலங்கை கடற்படை கப்பல்கள் தாக்குதலுக்காக சென்றிருக்க முடியும்.

சர்வதேச கடலில் இலங்கை கடற்படை கப்பல்கள் தாக்க வந்தபோது, புலிகளின் கப்பல்களால் ஏன் திரும்பித் தாக்க முடியவில்லை? ஏன் ஒவ்வொரு தடவையும், புலிகளின் கப்பல்கள்தான் மூழ்கின? புலிகளின் 16 கப்பல்கள் அடுத் தடுத்து தாக்கி மூழ் கடிக்கப்பட்டனவே.. ஏன் ஒரு தடவைகூட அவற்றை தாக்கிய இலங்கை கடற்படை கப்புல்கள் தாக்கப்படவில்லை? மூழ் கடிக்கப்படவில்லை?

'16-க்கு 1' என்ற சான்ஸில்கூட, இலங்கை கடற்படைக் கப்பல் ஒன்றுக்குகூட சேதம் ஏற்படவில்லை என்பது உங்களுக்கு ஆச்சரியமாக இல்லையா? இதென்ன மாயமா? மந்திரமா? இலங்கைக் கடற்படையினர் மாயாவிகளா?

இல்லை! இதற்கெல்லாம் பின்னணி உண்டு. புலிகளின் இறுதி யுத்தம் தோற்றதற்கான அடிப்படைக் காரணம் அது. அதையும் தெரிந்துகொள்ளுங்கள்.

புலிகள் யுத்தத்தில் வெற்றிகளை குவித்தபோது, அவர்களின் ஆயுதக் கப்பல் ஒப்பரேஷன், கே.பி. தலைமையிலான வெளிநாட்டுப் பிரிவிடம் இருந்தது. அப்போது, (சுமார் 15 ஆண்டுகளாக) வெளிநாட்டில் இயங்கிய பிரிவுக்கும், புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இடையே தொடர்பாளராக இருந்தவரின் பெயர் குமாரவேல்.

கே.பி. குரூப்-குமாரவேல்-பிரபாகரன் என்ற வலைப்பின்னலில்தான், புலிகளுக்கு ஆயுதங்கள் தடையில்லாமல் வந்து சேர்ந்து கொண்டிருந்தன. 2002-ஆம் ஆண்டு, சமாதான பேச்சுக்கள் துவங்கிய பின், புலிகளின் ஆயுதக் கப்பல்களையும் பிரிவுக்குள் கொண்டுவர வேண்டும் என்று விரும்பினார், கடற்புலிகளின் தளபதி சூசை.

அதற்காக, பிரபாகரனுக்கு நெருக்கமாக இருந்த குமாரவேலை அணுகினார் சூசை. அங்கேதான் துவங்கியது எல்லாக் குழப்பங்களும்!

புலிகளுக்கு சொந்தமான கப்பல்களின் ஆரம்பகால வர்த்தக நடவடிக்கைகளுக்கு புலிகள் இயக்கத்தைச் சேராத வெளி மாலுமிகள் பயன்படுத்தப்பட்டனர். அதன்பின், ஆயுதங்களை ஏற்றி அனுப்பும் வேலைகள் அதிகரித்தன. இரகசியமான அந்த வேலைக்கு, வெளி ஆட்களை பயன்படுத்த விரும்பவில்லை கே.பி. இது பற்றி புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் விவாதித்ததில், கப்பல்களுக்கான மாலுமிகளாக புலிகள் இயக்கத்தில் இருப்பவர்களை பயன்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. ஆழ்கடல் கப்பல் ஒப்பரேனுக்கு தகுதியான நபர்களை இலங்கையில் புலிகள் இயக்கத்தில் இருந்து தேர்ந்தெடுத்து, கே.பி.-யிடம் அனுப்பி வைக்கும் நடை முறை துவங்கியது: அப்படி அனுப்பி வைக்கப்பட்ட ஆட்களுக்கு, வெளிநாடுகளில் கே.பி. ஏற்பாடு செய்த இடங்களில் மாலுமி பயிற்சிகள் வழங்கப்பட்டன.

கே.பி.-யிடம் வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்ட புலிகளில், பல்வேறு பிரிவுகளை சேர்ந்தவர்களும் இருந்தாலும், கடற்புலிகள் பிரிவில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டவர்களே அதிகம். இந்த ஒப்பரேஷன் அதி இரகசியமானது என்பதால், கப்பலில் ஏற்றப்பட்ட மாலுமிகளில் 'இரகசியம் தெரிந்தவர்கள்' (சில கப்டன்கள் உட்பட) தரையிறங்க அனுமதிக்கப் படுவதில்லை.


ஆயுதக் கப்பல் இரகசியம் தெரிந்த சிலரை 5 வருடங்கள் வரை கப்பலில் இருந்து இறங்கவே கே.பி. அனுமதிக்காத சம்பவங்களும் இருந்தன. இரகசியம் தெரிந்தவர்கள் புலிகள் இயக்கத்தவர் என்பதால், அவர்களும், தரையிறங்க வேண்டும் என்று அடம் பிடிப்பதில்லை.

இந்த இடத்தில் மற்றொரு சிறிய சம்பவத்தையும் சொல்லிவிடலாம்.

2000ஆம் ஆண்டு, புலிகளின் கேப்டன் ஒருவர், தரையிறங்க அனுமதி கோரினார். வன்னியில் கடல்புலிகளின் தளபதி சூசையிடம் பேசிய கே.பி., குறிப்பிட்ட கப்டனை வன்னிப் பகுதிக்கு உள்ளேயே சகல வசதிகளுடனும் வைத்திருந்துவிட்டு, கப்பல் அடுத்த தடவை வரும் போது ஏற்றிவிடுமாறு ஏற்பாடு செய்திருந்தார்.

கப்டனும், சூசையின் பாதுகாப்பில் தரையில் இறக்கி விடப்பட்டார். குறிப்பிட்ட கேப்டனின் குடும்பம், அப்போது இந்தியாவில் வசித்தது.

# வெற்றிக்குத் துணை செய்த ஆயுத விநியோகம்



ஆனால், அதன்பின் அவர் சூசையிடம் என்ன டீல் வைத்துக் கொண்டாரோ, படகு ஒன்றில் ஏறி குடும்பத்திரைப் பார்ப்பதற்கு இந்தியா சென்று விட்டார். அங்கே இந்திய உளவுத்துறை றோ-விடம் சிக்கிக் கொண்டார். அவர் மூலமாக, கே.பி. டிபார்ட்மென்டின் இரகசியங்கள் சில றோ-விடம் போய் சேர்ந்தது. அதன்பின் றோ என்ன செய்தது என்பதை, பின்னர் பார்க்கலாம்.

நாம் சொல்லவந்த விஷயம் என்னவென்றால், புலிகளின் கப்பல் ஒன்று ஆயுதங்களுடன் வெற்றிகரமாக இலங்கை கரையை அடையும்போது, அதன் மாலுமிகளில் 80% பேர், கடல் புலிகள் பிரிவில் இருந்து சென்றவர்களாக இருப்பார்கள். இந்த இடத்தில்தான், ஈகோ யுத்தம் துவங்கியது.

## தலையெடுக்கிறது ஈகோ

கடற்புலிகளின் தளபதி சூசையின் ஆட்கள், வெளிநாடு சென்றதும், கே.பி. டிப்பார்ட்மென்ட் ஆட்களாக மாறினார்கள். இரகசியம் காக்கப்பட வேண்டிய ஒப்பரேஷன் என்பதால், அவர்களது நடவடிக்கைகள் கடற்புலிகளுக்கு தெரியவராது.

திடீரென ஒருநாள், புலிகளின் ஆயுதக் கப்பலை செலுத்தும் மாலுமிகளாக அவர்களை, ஆயுதங்களை இறக்குவதற்கு செல்லும் மற்றைய கடற்புலிகள் (அவர்களது பழைய சகாக்கள்) பார்ப்பார்கள். இந்தக் கதைகள் சூசை வரை செல்லும். கடற்புலிகளுக்குள் ஈகோ தலையெடுத்தது. **(தொடரும்...)**

# ஓர் இரகசிய கொலைத் திட்டம்



**ஹமாஸ்** அமைப்பின் இராணுவத் தளபதி, இஸ்ரேலிய உளவுத்துறையின் விமான ஏவுகணை தாக்குதலில் கடந்த இரு தினங்களுக்கு முன் கொல்லப்பட்டிருந்தார்.

ஹமாஸ் முக்கியஸ்தர்களை இஸ்ரேல் குறிவைப்பது இது முதல் தடவையல்ல. இதற்கு முன் ஒரு ஹமாஸ் முக்கியஸ்தரை இஸ்ரேலிய உளவுத்துறை குறிவைத்த சுவாரசியமான சம்பவம் ஒன்று உள்ளது.

ஜூலை மாதம் 1997ஆம் ஆண்டு. ஹமாஸ் அமைப்பின் தலைவர் காலித் மார்ஷலை ஜோர்தான் தலைநகர் அமான் வீதியில் வைத்து போட்டுத்தள்ள முயற்சித்தது, இஸ்ரேலிய உளவுத்துறை மொசாத். அந்த கொலை முயற்சியில் இருந்து காலித் மார்ஷல் தப்பித்துக் கொண்டார். இதனால், இஸ்ரேலிய உளவுத்துறை தலைவர் டானி யாடொம் மீது அரசு கடும் அதிருப்தியில் இருந்தது.

ஹமாஸின் முக்கிய நபர் ஒருவரை மொசாத் போட்டுத் தள்ளினால்தான், உளவுப் பிரிவு தமது மரியாதையை காப்பாற்றிக் கொள்ளமுடியும் என்ற நிலை ஏற்பட்டது. அடுத்த கொலைத்திட்டம் ஒன்றைத் துல்லியமாகப் போட்டு நிறைவேற்றாவிட்டால், அரசியல் ரீதியாக தனது நாட்கள் எண்ணப்பட்டுவிடும் என்பதை நன்றாகவே உணர்ந்து கொண்டார் மொசாத்தின் தலைவர். இப்படியான சூழ்நிலையில், அரபு நாட்டு உளவாளி ஒருவர் கொடுத்திருந்த உளவு தகவல் டானியின் கவன்த்தைக் கவர்ந்தது. மொசாத்தின் இந்த உளவாளி தெற்கு லெபனானில் வசிப்பவர். அங்கேயிருந்த மொசாத்திற்கு தகவல் கொடுத்து கொண்டிருந்தவர். அவர் ஒருநாள் இரவு நேரத்தில் முக்கியமான தகவல் ஒன்றைக் கொண்டுவந்தார்.

"ஹில்புல்லா தலைவர்களைச் சந்திப்பதற்கு, பெய்ரூட் நகருக்கு இரகசியமாக அப்துல்லா ஸெயின் வந்திருக்கின்றார். அப்துல்லா ஸெயின், ஹமாஸ் தலைவர்களில் ஒருவர். மொசாத் அதுவரை காலமும் அவரது உயிருக்குக் குறிவைத்திருக்கவில்லை. அவருக்கு குறிவைத்து, ஆளையும் வீழ்த்திவிட்டால். மொசாத்தின் மவுசு உயரும் என்று யோசித்தார் மொசாத் தலைவர் டானி.

அவரது பெய்ரூட் விஜயம் பற்றிய மேலதிக விபரங்களை லெபனானில் இருந்த மொசாத் உளவாளி ஒருவர் சேகரிக்க தொடங்கினார்.

"லெபனான் தலைநகர் பெய்ரூட்டுக்கு அப்துல்லா வந்த விவகாரமே, அதி இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. அவருக்கு கடுமையான பாதுகாப்பு கொடுத்து, தங்களது தலைவர்களைச் சந்திக்க அழைத்துச் சென்றது ஹிஸ்புல்லா. முக்கியமான பேச்சுக்கள் எல்லாம் முடிவடைந்த நிலையில், மேலும் இரண்டு தினங்கள் லெபனானில் தங்க விரும்புவதாக கூறியிருந்தார் அப்துல்லா.

காரணம் அப்துல்லாவின் பெற்றோர்கள் லெபனானில் தெற்கு நகரமான ருமானில் வசித்துவந்தனர். அவர்களைப் பார்த்து இரண்டு நாட்கள் அவர்களுடன் கழிக்க விரும்பினார் அவர்.

ஹிஸ்புல்லா இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தது. அதிகாலை நேரத்தில் மூன்று வாகனங்கள் அடங்கிய வாகனத் தொடர் ஒன்றில் பலமான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன், அப்துல்லாவை பெய்ரூட்டில் இருந்து ருமானி நகருக்கு அழைத்துச் சென்று, அங்கு பாதுகாப்பாக தங்க வைத்திருக்கிறார்கள். என்று தகவல் அனுப்பினார் லெபனானில் இருந்த மொசாத் உளவாளி.

*(தொடரும்...)*




பா.ராகவன்

ஒரு நாளல்ல; இரு நாள்களல்ல. அடுத்த பதினைந்து நாள்களுக்கு ஜிப்ரீல் வரவேயில்லை. கேள்வி கேட்ட குறைஷிகள் கைகொட்டிச் சிரிக்க ஆரம்பித்தார்கள். மிகவும் வருத்தமுற்றாலும், தன் இறைவன் ஒருபோதும் தன்னைக் கைவிடமாட்டான் என்பதில் மட்டும் முகம்மதுவுக்குத் தீராத நம்பிக்கை இருந்தது.

அந்நம்பிக்கைதான் ஜிப்ரீலை அம்முறை வரவழைத்தது என்று சொல்லவேண்டும். அதுவும் சும்மா வரவில்லை. மறுநாளே பதில் அளிப்பதாக முகம்மது சொன்னது தவறு என்று கடிந்து கொள்ளும் விதத்தில் ஓர் இறைவசனத்தைத்தான் முதலில் சுமந்துகொண்டு வந்தார் ஜிப்ரீல்.

அதன்பிறகு யூத ரபிக்கள் எழுப்பிய மூன்று வினாக்களுக்கும் விடைகள் வெளிவந்தன.

முதலாவது, தமது சமூகத்தினரை விட்டுத்தனியே பிரிந்துபோன இளைஞர்களின் கதை. மத்திய ஆசியாவில் பிரசித்தி பெற்ற புராணக் கதைகளுள் ஒன்று இது.

அவர்கள் 'இபேஸஸ் நித்திரையாளர்கள்' என்று அழைக்கப்பட்டவர்கள்.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். அந்தக் காலத்திலேயே உருவமற்ற ஒரே பரம்பொருளை வணங்கிவந்த அந்த இளைஞர்களுக்கு, அவர்களது சமூகத்தினராலேயே பெரும் பிரச்சினை உண்டானது. உலகமே சிலை வழிபாட்டில் மூழ்கியிருக்க, இவர்கள் மட்டும் ஒரே இறைவன், உருவமற்ற இறைவன் என்று சொல்வதைப் பொறுக்காத மக்கள் அவர்களுக்குப் பல சங்கடங்களை விளைவிக்கத் தொடங்கினார்கள்.

ஆகவே, தமது மக்களை விட்டு விலகி அவர்கள் அஸ்ஹாபுல் கஹ்ஃப் என்னும் குகைக்குள் சென்று வசிக்கத் தொடங்கினார்கள். குகைக்குள்ளே போனவர்கள், தம்மை மறந்து உறங்கவும் ஆரம்பித்தார்கள். சுமார் முந்நூறு வருட உறக்கம்! பிறகு அவர்களது கண்விழிப்பை, அறியாமையில் மூழ்கிக் கிடந்த மக்களின் விழிப்புணர்வுக்கு உருவகமாக வைத்து நிறைவடையும் கதை அது.

யூத ரபிக்களின் இரண்டாவது வினா, கிழக்கையும் மேற்கையும் பயணத்தால் அளந்த யாத்திரிகரைப் பற்றியது. அவரது பெயர் துல்கர்னைன்.

அவர்களது மூன்றாவது கேள்வி. ஆன்மா குறித்து. அரபு மொழியில் ருஹு என்றால் ஆன்மா. இக்கேள்விக்கு முகம்மதுவுக்குக் கிடைத்த பதில் "அதைப் பற்றி மிகச் சொற்பஞானமே உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், அதன் நுட்பங்களை நீங்கள் அறிந்துகொள்ள முடியாது"

முகம்மது என்ன செய்வார்? இறை வசனம் அப்படித்தான் வந்தது. ஆகவே தமக்கு வழங்கப்பட்ட இறை வசனங்களை அப்படியே அவர் குறைஷிகளிடம் அப்படியே பதில்களாக தெரிவித்துவிட்டார்.

முகம்மது நபியின் பதில்களைக் கேட்ட யூத ரபிக்களுக்குப் பெருத்த தர்மசங்கடம் ஏற்பட்டது. நிச்சயமாக முகம்மதால் பதில் சொல்லமுடியாது என்று அவர்கள் நம்பிக்கொண்டிருந்தது ஒரு காரணம். அவர் பதில் தந்துவிட்டதால், அதைச் சரி என்றோ, சரியில்லை என்றோ ஒரு சொல்லில் சொல்லிவிடமுடியாதது இரண்டாவது காரணம்.

முகம்மது ஒரு நபிதான் என்ற அவர்கள் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். ஆயினும் அப்படி ஒப்புக்கொள்ள அவர்கள் மனம் சம்மதிக்கவில்லை. குறைஷிகளுக்கு, ரபிக்களின் இந்த இரண்டுங்கெட்டான் தனம் புரியவில்லை. "முகம்மது ஒரு நபிதான்" என்று ரபிக்கள் சொல்லிவிட்டால்கூட அவர்கள் அதை ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை! அவர்கள் வரையில் முகம்மது ஒரு போலி. பித்தலாட்டக்காரர். இந்த எண்ணத்தை மாற்றிக்கொள்ள அவர்கள் தயாராக இல்லை.

ஆகவே, ரபிக்களின் கருத்தை அறிய மேலும் ஆர்வம் காட்டாமல் புறப்பட்டுவிட்டார்கள்.

இந்த மூன்று கேள்விகளும் கேட்கப்பட்டு, முகம்மது அவற்றுக்குத் துல்லியமான பதில்கள் அளித்த சம்பவத்தால் இரண்டு முக்கியமான விளைவுகள் ஏற்பட்டன. இஸ்லாமியர்களின் சரித்திரத்தில் அந்த இரண்டு விளைவுகளுமே குறிப்பிடத்தக்க தகுந்த பங்கு வகிப்பவை.

முதலாவது பாதி நம்பிக்கை – பாதி அவநம்பிக்கை கொண்டிருந்த அராபியர்கள் பலர், முகம்மதுவை முழுவதுமாக நம்பி, அவர்காட்டிய பாதையில் நடக்க மனமுவந்து ஒப்புக்கொண்டார்கள். இதன் விளைவாக, அராபியர்கள் பலர் முஸ்லிம் ஆனார்கள். பிரசாரங்களினால், கிருத்தவம் பரவிக் கொண்டிருந்த அதே காலகட்டத்தில், இந்த ஒரு சம்பவத்தால், எவ்வித பிரசாரமும் இன்றி தானாகவே இஸ்லாம் பரவத் தொடங்கியது. முகம்மதுவைச் சந்திக்கவும் அவருடன் பேசவும் பல்வேறு சேதங்களில் இருந்தும் அராபியர்கள் மெக்காவை நோக்கி வரத்தொடங்கியது இதன் பிறகுதான்.

இரண்டாவது விளைவு, மிகவும் பாதகமானது. முஸ்லிம்கள் மீது குறைஷிகள் மிகக் கடுமையான வன்முறையைக் கட்டவிழ்த்துவிட ஆரம்பித்தார்கள். ஒருவர் முஸ்லிம் என்று தெரிந்தாலே கட்டி வைத்துத் தோலை உரிக்கிற அளவுக்கு அவர்களது வன்முறை எல்லை கடந்துபோனது.

ஆகவே, கொஞ்சமேனும் நிலைமை சீராகும்வரை முஸ்லிம்கள் வேறு தேசம் எங்காவது போய் வசிக்கலாம் என்றொரு யோசனை முகம்மது நபியிடம் முன்வைக்கப்பட்டது. அப்படி இடம்பெயர்ந்து வசிப்பதற்கு முகம்மது சுட்டிக்காட்டிய இடம், அபிசீனியா.

கண்ணியமான மன்னன். மத நல்லிணக்கம் பேணுகிற தேசம் என்று சொல்லி, முகம்மதுவே தம் மக்களை அங்கே அனுப்பி வைத்தார்.

அன்றைக்கு எத்தியோப்பியா ஒரு கிருத்தவ நாடு. நஜ்ஜாஷியும் ஒரு கிருத்தவர்தாம். ஆயினும் நம்பிக்கையுடன் முஸ்லிம்கள் அங்கே புறப்பட்டுப் போனார்கள்.

முஸ்லிம்கள் முதல் முதலில் இடம்பெயர்ந்த சம்பவம் அதுதான். மெக்காவைத் தாண்டி இஸ்லாம் வெளியே புறப்பட்டதும் அப்போதுதான்.

இரகசியமாகத்தான் அவர்கள் மெக்காவை விட்டுப் புறப்பட்டுப் போனார்கள் என்றாலும், குறைஷிகளுக்கு அவர்கள் அபிசீனியாவில் நிம்மதியாக வசிப்பதும் பிடிக்கவில்லை. ஆகவே, அபிசீனிய மக்களின் மனத்தில் முஸ்லிம்களைப் பற்றிய அபாய் அறிவிப்பை ஒருவி தையாக விதைத்து எப்படியாவது அவர்களை நாடு கடத்தச் செய்துவிடவேண்டும் என்று விரும்பினார்கள். இர்ண்டு தூதுவர்களை அபிசீனியாவுக்கு அனுப்பினார்கள்.

இந்த தூதர்களின் பணி என்னவெனில், எப்படியாவது அபிசீனிய மன்னரைச் சந்தித்து, மெக்காவிலிருந்து அகதிகளாக வந்திருக்கும் முஸ்லிம்களை நாடு கடத்தச் செய்துவிட வேண்டுமென்பது. முடிந்தால் அவர்களுக்கு மரண தண்டனையே கிடைக்கும்படி செய்வது. குறைந்தபட்சம் நாடு கடத்துவது அவசியம்.

அவர்களும் தக்க பரிசுப் பொருட்களுடன் மன்னரைச் சந்தித்துப் பேசினார்கள்.

"மன்னா! உங்கள் தேசத்தில் அடைக்கலம்தேடி வந்திருக்கிற சிலரை உங்களுக்கு அடையாளம் காட்டுகிறோம். அவர்கள் முட்டாள்த்தனமாகத் தங்கள் மதத்தைக் கைவிட்டுவிட்டார்கள். கிருத்தவர்களாக மாறித்தான் உங்கள் தேசத்துக்கு வந்திருக்கிறார்களா என்றால், அதுவும் இல்லை. ஏதோ ஒரு புதிய மதம். அவர்களது உறவினர்களும் இனத் தலைவர்களும் இவர்களைத் திருப்பி அனுப்பும்படி வேண்டிக்கொண்டிருக்கிறார்கள். தமது சொந்த மதத்தையும் விடுத்து, உங்கள் மதத்தையும் ஏற்காத அவர்களை தயவுசெய்து திருப்பி அனுப்பிவிடுங்கள்" என்று ஆரம்பித்து, விஸ்தாரமாகத் தங்கள் நோக்கத்தை எடுத்து வைத்தார்கள்.

மன்னன் நஜ்ஜாஷி யோசிக்க ஆரம்பித்தான். சரி. அழைத்து வாருங்கள் அந்தப் புதிய மதத்தவர்களை என்று உத்தரவு கொடுத்தான்.

அபிசீனிய மன்னனின் அவையில், தாங்கள் யார் என்றும் தங்கள் மதம், என்ன, எத்தகையது என்பது குறித்தும் அன்றைக்கு முஸ்லிம்கள் எடுத்துச் சொன்ன சில வரிகள், இன்றைக்கும் இஸ்லாமியர்கள் திருப்பத் திரும்ப நினைவுகூரும் ஒரு சிற்றுரை.

இஸ்லாத்தைக் குறித்து ஆயிரமாயிரம் புத்தகங்கள் அளித்தாலும் தீராத வியாக்கியானங்களை அந்தச் சில வரிகள் மிக அழகாகப் புரியவைத்துவிடுகின்றன. அரேபிய மண்முழுவதும் இஸ்லாம் வெகு வேகமாகப் பரவி வேரூன்றியதன் தொடக்கம் அந்தச் சிறு விளக்க உரைதான்.

ஆயிரக்கணக்கான பக்கங்கள் உள்ள குர் ஆன், பல்லாயிரக்கணக்கான பக்கங்கள் வரும் ஹதீஸ்கள் எத்தனையோ விளக்க நூல்கள், ஆய்வு நூல்கள், ஆதரவு நூல்கள், எதிர்ப்பு நூல்கள், இஸ்லாத்தைப் பற்றிப் பேசுபவையாக இருக்கின்றன. ஆனால், அபிசீனியா என்கிற எத்தியோப்பியாவின் மன்னன் நஜ்ஜிஷியின் அவையில், தாங்கள் யார், தங்களது புதிய மதம் என்ன என்பது பற்றி, அந்த முதல் தலைமுறை முஸ்லிம்கள் சில வரிகளில் எடுத்துரைத்ததைக் காட்டிலும் இஸ்லாத்தைத் துல்லியமாகப் புரிய வைக்கும் சொற்கள் வேறு எதுவும் கிடையாது.

(தொடரும்...)

# மல்லிகைப் பூவுக்கு விளம்பரம் தேவையா?



மல்லிகைப்பூவுக்கு விளம்பரம் தேவையில்லை என்பார்கள். அமெரிக்க நடிகை ஏஞ்சலினா ஜோலியும் மல்லிகைப்பூ மாதிரிதான். நடிகை, இயக்குநர், ஐ.நா.சபை நல்லெண்ண தூதர், பிரபல நடிகர் பிராட் பிட்டின் மனைவி... இவற்றையும் தாண்டி இவருக்கு இன்னொரு பக்கமும் உண்டு. அவருக்கு மொத்தம் 6 குழந்தைகள். அவர்களில் 3 குழந்தைகள் தத்தெடுக்கப்பட்டு அன்பையும் பாசத்தையும் கொட்டிக் கொட்டி வளர்க்கப்படுபவர்கள். பொருளாதாரத்திலும் வாழ்க்கைத்தரத்திலும் மிகவும் பின்தங்கிய கம்போடியா, எத்தியோப்பியா, வியட்நாம் நாடுகளிலிருந்த குழந்தைகள் அவர்கள்!

அமெரிக்காவில் குழந்தைகளைத் தத்தெடுப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. பார்த்தவுடனேயே குழந்தை பிடித்துவிட்டாலும், அரசாங்கத்திடம் விண்ணப்பம் கொடுக்க வேண்டும். பதில் வரும் வரை பொறுமையாகக் காத்திருக்க வேண்டும். சாதகமான பதில் வராமல் போகவும்கூட வாய்ப்பிருக்கிறது. 2001ல் கம்போடியாவுக்கு 'டாம்ப் ரெய்டர்' படப்பிடிப்புக்காகப் போனபோது தான் மெட்டோக்ஸ் ச்வன் என்கிற 7 மாத ஆண் குழந்தையைப் பார்த்தார் ஏஞ்சலினா. தத்தெடுப்பதற்காக அரசுக்கு விண்ணப்பம் கொடுத்தார்.

அப்போது அமெரிக்க அரசு, குழந்தைக் கடத்தல்களைத் தடுப்பதற்காக கம்போடிய குழந்தைகளைத்தத் தெடுப்பதைத் தடை செய்திருந்தது. பல போராட்டங்களுக்குப் பிறகு 2002இல் மெட்டோக்ஸை தத்தெடுத்து வளர்க்க ஆரம்பித்தார். இரண்டாவதாக தத்தெடுத்த குழந்தை ஜஹரா மார்லி.



இந்த 6 மாதக் குழந்தையை தத்தெடுத்தபோது வேறு சிக்கல் காத்திருந்தது. 'ஜஹரா எய்ட்ஸ் பாதிக்கப்பட்ட குழந்தை' என்றார்கள். அதன் காரணமாகவே அநாதை இல்லத்தில் விடப்பட்ட குழந்தை அவள்.

ஆனால், ஜஹராவுக்கு எச்.ஐ.வி. பரிசோதனை செய்ததில் அவளுக்கு அந்த நோய் இல்லை என்பது தெரிந்தது. அதற்குப் பிறகு ஜஹராவின் உண்மையான தாய் குழந்தையைத் திரும்பக் கேட்டதாக செய்திகள் வெளியாயின. அதை அடியோடு மறுத்துவிட்டார் ஏஞ்சலினா. 2007இல் வியட்நாம் சென்றபோது, பேக்ஸ் தியன் என்கிற 3 வயது ஆண் குழந்தையைப் பார்த்தவர் கலங்கிவிட்டார். பிறந்த சில நாட்களுக்குள்ளேயே கைவிடப்பட்ட குழந்தை. பேக்ஸை தத்தெடுப்பதிலும் ஒரு சிக்கல்.

வியட்நாம் சட்டப்படி கணவனும் மனைவியும் சேர்ந்து ஒரு குழந்தையைத் தத்தெடுக்க முடியாது. தனிநபராக தன் சொந்தப் பொறுப்பில் பேக்ஸை எடுத்து அமெரிக்கா கொண்டு வந்தார் ஏஞ்சலினா. 2006ல் ஏஞ்சலினாவுக்கு ஷிலோ நோவல் என்கிற பெண் குழந்தை பிறந்தது. 2008இல் நாக்ஸ் லியோன்- விவியென் என இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தார் ஏஞ்சலினா. அவரைப் பொறுத்தவரை பெற்ற குழந்தையும் வளர்ப்புக் குழந்தைகளும் ஒன்றுதான்.

எந்த பாரபட்சமும் பார்க்காமல் அவர்களை வளர்க்கிறார். பாகிஸ்தான் சிறுமி மலாலா தாக்கப்பட்ட போது, அந்தச் சம்பவம் குறித்துத் தன் குழந்தைகளுடன் மிகப்பெரிய உரையாடலையே நிகழ்த்தி, அதை பத்திரிகையிலும் கட்டுரையாக வெளியிட்டிருக்கிறார் ஏஞ்சலினா. அந்த உரையாடலில் மகள் ஷிலோ, ஏஞ்சலினாவிடம், "ஏம்மா! மலாலாகிட்ட பூனையோ, நாயோ இருந்தா அதை இப்போ யாரும்மா பாத்துப்பாங்க?" என்று கண்கலங்கக் கேட்டிருக்கிறாள். தாய்

# டிசம்பரில் ஓர் அதிசயம்

Dec-2012

| Mon | Tue | Wed | Thu | Fri | Sat | Sun |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

எதிர்வரும் டிசம்பர் மாதம் ஓர் அதிசயம் நிகழவிருக்கின்றது. ஒரே மாதத்தில் ஐந்து ஞாயிறு, ஐந்து சனி, ஐந்து திங்கள் வர இருக்கின்றது.

இந்த அதிசயம் எண்ணூற்று இருபத்தி நான்கு வருடங்களுக்கு ஒரு முறை தான் நிகழுமாம்.

இந்த தகவலை எல்லோருடனும் பகிர்ந்து கொண்டால் நிறையப் பணம் கிடைக்கும் என்பது சீனர்களது நம்பிக்கை.

நீங்களும் இதனை பகிர்ந்து பாருங்கள் உங்களுக்கும் நிறையப் பண்ம் கிடைக்கலாம்.

# ஐ.தே.க.வின் நிழலில் ஒதுங்குவது பிரச்சினைக்குத் தீர்வாகாது

**சங்கர சிவன்**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவுசெய்ய வேண்டும் என்ற கோரிக்கை கூட்டமைப்புக்குள் வெடிப்புக்களைத் தோற்றுவித்திருக்கிறது.

முள்ளிவாய்க்காலில் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னரே இக்கோரிக்கை எழுந்திருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொள்கை உடன்பாட்டின் அடிப்படையில் உருவாகியதல்ல. ஒன்றுடனொன்று முரண்பட்டுக் கொண்டிருந்த கட்சிகளைப் புலிகள் தங்கள் தேவைக்காக ஒன்றுபடுத்தினார்கள். கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்தால் அதற்குத் தனித்துவமான அங்கீகாரம் கிடைத்து விடும் எனக் கருதிய புலிகள் அது வெறுமனே கட்சிகளின் கூட்டாக இருப்பதையே விரும்பினார்கள்.

கூட்டமைப்புக்குள் அடங்கிக் கிடந்த முரண்பாடு புலிகளின் தோல்விக்குப் பின்னர் வெளிப்பாடு பெற்ற நிலையில் அரசியல் கட்சியாகப் பதிவுசெய்ய வேண்டும் என்ற கோரிக்கை தீவிரமாக முன்வைக்கப்படுகின்றது. இந்த முரண்பாடு இனப்பிரச்சினையின் தீர்வுக்கான கொள்கை மற்றும் அணுகுமுறை தொடர்பானதல்ல, தனிப்பட்ட அங்கீகாரம் சம்பந்தப்பட்டதே இந்த முரண்பாடு.

உள்ளுக்குள் குமைந்துகொண்டிருந்த முரண்பாட்டை முதலில் பகிரங்கப்படுத்தியவர் சுரேஷ் பிரேமச்சந்திரன். இவருக்கும் சம்பந்தன் குழுவினருக்குமிடையே கொள்கைப் பிரச்சினை எதுவுமில்லை. புலிகளின் தனிநாட்டு நிரலை ஒற்றுமையாகவே ஏற்றுச் செயற்பட்டார்கள். இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை முன்வைக்காமல், சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூறித் தமிழ் மக்களை ஏமாற்றுவதில் சம்பந்தன் குழுவினருக்கும் சுரேஷ் பிரேமச்சந்திரனுக்குமிடையே முரண்பாடு இருக்கவில்லை. சுரேஷ் பிரேமச்சந்திரன் வழமையான பாணியில் தலைமையில் கண்வைக்கத் தொங்கியதை அவதானித்த தமிழரசுக் கட்சிக் குழுவினர் அவரை ஓரங்கட்டும் வகையில் செயற்பட்டதாலேயே முரண்பாடுதோன்றியது. அதன் விளைவுதான் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்யவேண்டும் என்ற கோரிக்கை.

அரசியல் கட்சியாகப் பதிவு செய்யுவேண்டும் என்ற கோரிக்கையைத் தமிழ் அரசியல் வழிச் சமூகத்தில் விவாதத்துக்கு உட்படும் பிரதான விடயமாகக் காட்டுவதில் கூட்டமைப்புத் தலைவர்களும் சில தமிழ் ஊடகங்களும் அதிக அக்கறை செலுத்துவதை அவதானிக்க முடிகின்றது. ஆனால் இன்று தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக மிகவும் நெருக்கடியான ஒரு கால கட்டத்தில் இருக்கின்றார்கள். பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தை தீர்க்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழ் மக்களுக்குப் பாரிய அரசியல் நெருக்கடியைத் தேற்றுவித்திருக்கிறது. கூட்டமைப்புத் தலைவர்கள் காலத்துக்குக் காலம் விட்ட தவறுகள்தான் தமிழ் மக்களை இந்த நெருக்கடி நிலைக்குக்கொண்டு வந்திருக்கின்றன என்ற உண்மையை மூடி மறைக்கும் நோக்கத்தில் மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக அரசியல் கட்சியாகப் பதிவு செய்யும் பிரச்சினையை முன்னிலைப்படுத்துகின்றார்கள்.

பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பவர்கள் அது பிரிவினைக்கு வழிவகுக்கும் என்பதையே தங்கள் கோரிக்கைக்கான காரணமாகக் கூறுகின்றார்கள். இதற்கு வலுவான ஆதாரம் எதுவும் இல்லாத போதிலும், கூட்டமைப்புத் தலைவர்களின் செயற்பாடுகள் அவர்கள் பிரிவினையையே நாடி நிற்கின்றார்கள் என்பதைப் புலப்படுத்துகின்றன எனக் கூறுவதை நிராகரிக்க முடியாது.

தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகத்துடனேயே கூட்டமைப்பு அரங்குக்கு வந்தது. சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுப்பொதி இனப்பிரச்சினைக்குச் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை முன்வைத்தது. இலங்கையின் வரலாற்றில் அது போன்ற ஒரு சிறந்த தீர்வுத்திட்டம் ஒரு போதும் முன்வைக்கப்படவில்லை. அந்தத் தீர்வுத்திட்டம் நடைமுறைக்கு வந்திருந்தால் பிற்காலத்தில் இடம்பெற்ற ஏராளமான மரணங்களையும் அழிவுகளையும் தவிர்க்க முடிந்திருப்பதோடு தமிழ் மக்களின் வாழ்வு பல வகையிலும் சிறப்புற்றிருக்கும் கூட்டமைப்புத் தலைவர்கள் அந்தத் தீர்வுத்திட்டத்தை எதிர்த்துப் புலிகளுடன் கூட்டுச் சேர்ந்தார்கள்.

> **அரசியல் கட்சியாகப் பதிவு செய்யவேண்டும் என்ற கோரிக்கையைத் தமிழ் அரசியல் வழிச் சமூகத்தில் விவாதத்துக்கு உட்படும் பிரதான விடயமாகக் காட்டுவதில் கூட்டமைப்புத் தலைவர்களும் சில தமிழ் ஊடகங்களும் அதிக அக்கறை செலுத்துவதை அவதானிக்க முடிகின்றது. ஆனால் இன்று தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக மிகவும் நெருக்கடியான ஒரு கால கட்டத்தில் இருக்கின்றார்கள். பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தை தீர்க்கவேண்டும் என்ற கோரிக்கை தமிழ் மக்களுக்குப் பாரிய அரசியல் நெருக்கடியைத் தேற்றுவித்திருக்கிறது.**

சமஷ்டி அடிப்படையிலான தீர்வை நிராகரித்துப் புலிகளின் தனிநாட்டு நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படத் தொடங்கியமை இவர்களின் உண்மையான நோக்கம் தனிநாடு தான் என்ற அபிப்பிராயத்தைச் சிங்கள மக்களிடம் தோற்றவித்தது.

அரசாங்கம் அமைத்த சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிலும் கூட்டமைப்புப் பங்குபற்றவில்லை. அக்குழுவினால் ஒரு பலனும் கிடைக்காது எனக் கூறி நிராகித்தார்கள். பலன் கிடைக்காது என்று ஆரூடம் கூறி நிராகரிப்பது சரியான தலைமைப் பண்பல்ல.

பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தலைமை தாங்குபவர்கள் கிடைக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும். சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவினால் பலனில்லை எனக் கூறி நிராகரித்தவர்கள் அக் குழுவின் சார்பாகத் திஸ்ஸ விதாரண சமர்ப்பித்த அறிக்கையை இப்போது ஏற்கின்றார்கள். அந்த அறிக்கையின் அடிப்படையில் அரசாங்கம் தீர்வை நடைமுறைப் படுத்தவேண்டும் என்று இப்போது கூறுகின் றார்கள். சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவை நிராகரித்த காலத்தில் கூட்டமைப்புப் புலிகளோடு சேர்ந்து செயற்பட்டுக் கொண்டிருந்தது. புலிகளுடனான இந்த உறவு இவர்கள் பிரிவினைவாதிகள் என்ற சந்தேகத்தைச் சிங்கள மக்களிடம் தோற்றுவித்ததில்வியப் பேதும் இல்லை.

இப்போது பாராளுமன்றத் தெரிவுக் குழு. இனப்பிரச்சினையின் தீர்வுக்காகவே இத் தெரிவுக் குழு நியமிக்கப்பட்டது. இத் தெரிவுக் குழு நியமிக்கப்பட்ட வேளையில் பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படவில்லை. கூட்டமைப்புத் தலைவர்கள் அதில் பங்குபற்றி அரசியல் தீர்வுக்கான தங்கள் கொள்கையை முன்வைத்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் இவர்கள் பிரிவினைவாதிகளெனச் சிங்கள மக்கள் மத்தியில் தோன்றியிருந்த சந்தேகம் கணிசமான அளவு நீங்கியிருக்கும். ஆனால் இவர்கள் சாக்குப் போக்குகள் கூறித் தெரிவுக் குழுவைப் பகிஷ்கரித்தார்கள். சிங்கள மக்கள் மத்தியில் தோன்றிய சந்தேகம் இதனால் வலுவடைந்தது. இதன் விளைவு பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கவேண்டும் என்ற கோரிக்கை தீவிரவமாக வலியுறுத்தப் படுவதிலும் முடிந்திருக்கின்றது.

(22 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் மீதான புதிய அழுத்தங்கள்

**அமலன்**

> *வன்னியில் போர் இடம் பெற்றுக் கொண்டிருந்தபோது, ஐக்கிய நாடுகளின் பணியாளர்களின் அங்கிருந்து வெளியேறியமை காரணமாக அங்கு பாரிய மனித அழிவுகள் ஏற்பட்டன என்பதை ஐக்கிய நாடுகளின் உள்ளக அறிக்கை ஏற்றுக்கொண்டுள்ளது. அதாவது ஐக்கிய நாடுகள் சபை தமது தவறை ஏற்றுக்கொண்டுள்ளது.*
>
> *ஐக்கிய நாடுகள் தவறு செய்தமை இங்கு முக்கியமாக குறிப்பிடப்பட்டாலும், அந்தத் தவறுக்கான காரணங்கள் எவை என்பதை தேடிப்பார்க்கின்றபோது இலங்கை அரசாங்கத்தின் மீதும் அக் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது.*

**இலங்கை** அரசாங்கத்தின் மீது மீண்டும் உள்நாட்டு மற்றும் சர்வதேச அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது. ஐக்கிய நாடுகளின் உள்ளக அறிக்கை, பிரதமநீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை மற்றும் 13 ஆவது திருத்த சட்டத்தை இரத்துச்செய்யும் முனைப்பு, வரவுசெலவுத்திட்டத்தில் உரிய நிவாரணங்கள் இன்மை என்பன இந்த அழுத்தங்களுக்கு காரணமாக அமைந்துள்ளன.

இலங்கையின் இறுதிப்போரின் போது ஐக்கியநாடுகள் சபையின் பணியாளர்கள் வன்னியில் பொதுமக்கள் பாதுகாக்கும் வகையில் செயற்படவில்லை என்று குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு வந்தது. ஐக்கிய நாடுகளின் உள்ளக அறிக்கையைப் பொறுத்தவரை அதனை உறுதிப்படுத்தியுள்ளது.

வன்னியில் போர் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது, ஐக்கிய நாடுகளின் பணியாளர்களின் அங்கிருந்து வெளியேறியமை காரணமாக அங்கு பாரிய மனித அழிவுகள் ஏற்பட்டன என்பதை ஐக்கிய நாடுகளின் உள்ளக அறிக்கை ஏற்றுக்கொண்டுள்ளது. அதாவது ஐக்கிய நாடுகள் சபை தமது தவறை ஏற்றுக் கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் தவறு செய்தமை இங்கு முக்கியமாக குறிப்பிடப்பட்டாலும், அந்தத் தவறுக்கான காரணங்கள் எவை என்பதை தேடிப்பார்க்கின்றபோது இலங்கை அரசாங்கத்தின் மீதும் அக் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசாங்கம், ஐக்கிய நாடுகள் சபை பணியாளர்களின் உயிருக்கு உத்தரவாதம் வழங்காமையை அடுத்தே ஐக்கிய நாடுகளின் பணியாளர்கள் வெளியேறினர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் இதனை மறுத்துள்ள போதும், சர்வதேசத்தினால் சுமத்தப்பட்டுள்ள இந்தக்குற்றச்சாட்டில் இருந்து மீள இலங்கை அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் வெளியுறவு அமைச்சின் செயலாளர் அனுமகம கருணாதிலக்க, பொதுமக்களை பாதுகாக்காமையானது. ஐக்கிய நாடுகளின் தவறே அன்றி இலங்கை அரசாங்கத்தின் தவறாகாது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி பாலித கோகன, ஐக்கிய நாடுகளின் உள்ளக அறிக்கை காரணமாக இலங்கைக்கு பாதிப்பு இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், வரும் நாட்களே இந்த பாதிப்புக்களையும் பாதிப்பின்மையையும் வெளிக்காட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிரமதநீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையைப் பொறுத்தவரையில், இந்தப் பிரேரணை தொடர்பில் சர்வதேசமும் இலங்கை அரசாங்கத்தின் மீது சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

குறிப்பாக எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட்டுடன் இந்தப் பிரச்சினையும் தற்போது தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

பிரித்தானிய வெளியுறவுக் குழு அண்மையில், இந்தப்பிரச்சினையை முன்னிறுத்தி, பொதுநலவாய நாடுகளின் அமர்வில் பிரித்தானியப் பிரதமர் பங்கேற்கக்கூடாது என்று கோரியுள்ளது.

எனவே குற்றவியல் பிரேரணையின் அடுத்த கட்டங்கள், இலங்கை மீது சர்வதேசத்தின் அழுத்தங்களை தீர்மானிப்பதாக அமையும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இதற்கு அப்பால் உள்நாட்டை எடுத்துக் கொண்டால் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை இரத்துச் செய்வதற்கான முனைப்புகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும், இது இலங்கையின் மீது சர்வதேசத்தின் அழுத்தத்தை கொண்டு வரும் என இலங்கையின் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் கூறிவருகின்றனர். எனினும், அரசாங்கத்தில் உள்ள புறக்கட்சிகளின் தலைவர்கள் குறிப்பாக அமைச்சர்களான விமல் வீரவன்ச மற்றும் சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் 13ஆவது சரத்தை அரசியல் அமைப்பில் இருந்து அகற்றிவிடவேண்டும் என்பதில் குறியாக உள்ளனர். எப்படியிருப்பினும், இதில் தீர்மானிக்கவேண்டிய பொறுப்பை ஜனாதிபதியே கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாக அமைந்துள்ளது.

இந்நிலையில் வரவுசெலவுத்திட்டத்தில், சாதாரண மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படாமை, உள்நாட்டில் தாக்கங்களை ஏற்படுத்தும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது

எதிர்க்கட்சிகளும் தொழிற்சங்கங்களும் இது தொடர்பில் போராட்டங்களுக்கு துணியும் போது அரசாங்கத்துக்கு அது பிரச்சினையாக மாறக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

எனினும் இலங்கையில் வலுவான எதிர்க்கட்சி இல்லாத நிலையில், அரசாங்கம் இதனைச் சமாளித்து விடும் என்று கருதப்படுகிறது.

# கணக்கில் எடுக்கப்படாத அங்கவீனர்கள்

ஏ.எச்.ஏ. ஹுஸைன்



மனிதக் கேடுகளாயினும் இயற்கை இடர்களாயினும் எளிதில் பாதிக்கப்படக் கூடிய முதலாவது தரப்பினர் இந்த வலுவிழந்தோர்தான். சமூகம் இன்னமும் வலது குறைந்தவர்களை எவ்வாறு அபிவிருத்தியில் உள்வாங்கிக் கொள்வது என்று தெரியாமலிருக்கின்றது. இந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஒட்டு மொத்த சமூகமுமே முக்கிய பாத்திரத்தை வகிக்க வேண்டியிருக்கின்றது. உள்ளூர் மட்டத்தில், சமூக மட்டக்குழுக்களில் தொடங்கி அரசியல் வாதிகள் வரை இந்த விழிப்புணர்வின் தாக்கம் உணரப்பட வேண்டும்.

அங்கவீனர்கள் என்றாலே அவர்களது கையில் இருக்கும் வெள்ளைப் பிரம்பு, ஊன்று கோல்கள், சக்கர நாற்காலி, பிரையில் இயந்திரம், கைத்தடி, அத்தோடு கைத்தாங்கலாக உதவும் ஒருவர் இவைதான் எமக்கு நினைவிற்கு வருபவை.

அவ்வாறானவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் அவர்களது உடல் மற்றும் உள ரீதியான வசதிகளுக்கும் இவை இருந்தால் போதும் என்றுதான் நம்மில் பலர் நினைத்துக் கொண்டிருக்கின்றோம்.

பெரும்பாலும் தமது குடும்ப உறுப்பினர்களின் அல்லது நண்பர்களின் அல்லது பரோபகாரிகளின் உதவி ஒத்தாசையுடன் வாழ்க்கையைக் கொண்டு நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் இந்த வலது குறைந்த மக்களுக்கு ஏற்பட்டு விடுகின்றது.

அவர்களது தினசரிக் கருமங்களின் ஒவ்வொரு கட்டத்திலும் இன்னொருவரின் நேரமும் இன்னபிற வளங்களும் தேவைப்படுகின்றன. வலது குறைந்த மக்களின் வித்தியாசமான வாழ்க்கை முறைக்குப் பொருத்தமான வசதி வாய்ப்புக்கள் மற்றும் தொழினுட்பங்கள் கொண்ட அமைப்புக்கள் நிறுவப்படாவிட்டால் இந்த வலது குறைந்த மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்ந்து சென்று கொண்டே இருக்கும்.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 1.6 சதவீதமானோர் அதாவது 274,711 பேர் அங்கவீனமானவர் என்கின்ற கணக்கெடுப்புக்கள் இருக்கின்றன.

ஆனால், இந்தப் புள்ளிவிவரம் 2001 ஆம் ஆண்டினுடையதாக இருப்பதோடு, வடக்கு-கிழக்கின் வலது குறைந்தோர் இதில் உள்ளடக்கப்படவில்லை என்றும் தெரிகிறது. வடக்கு-கிழக்கில் இடம்பெற்ற யுத்தத்தினால் அங்கவீனமடைந்து கதியற்றுப் போயிருக்கும் பல்லாயிரக் கணக்கானோரின் பட்டியலும் நீண்டு செல்கின்றது. இதேவேளை பாதுகாப்புத் தரப்பினரில் கணிசமான எண்ணிக்கையினரும், அங்கவீனமாகிப் போயிருப்பினும் அவர்களது சேமநலன்களில் அக்கறை காட்டும் ஏற்பாடுகள் உண்டு.

"ஒன்றிணைந்த அபிவிருத்திக்கான நகர்வு, வலது குறைந்த நபர்களுக்கான அபிருத்தியின் கதவினை திறந்திடுவோம்" என்ற தொனிப்பொருளில் அமைந்த பிராந்திய மாநாடொன்று மட்டக்களப்பில் கடந்த வாரம் இடம்பெற்றது. வலது குறைந்தோருக்கான அபிவிருத்தி வலையமைப்பு (DWDN) ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில், அரச நிறுவனங்கள் அரச சார்பற்ற உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்தார்கள்.

வலது குறைந்தோருக்காகச் சேவையாற்றும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இயலளவினை விருத்தி செய்வதனூடாக வலது குறைந்தோரை அபிவிருத்தியின் பங்காளர்களாக உருவாக்குவதோடு, வலது குறைந்தோரை அபிவிருத்தியில் ஒன்றிணைப்பதற்காகப் பாடுபடும் நிறுவனங்களுக்கும் பணியாளர்களுக்குமாக ஒரு தளத்தினை ஏற்படுத்துவதும் இந்த அனுபவப் பகிர்வு மாநாட்டின் நோக்கமாகும் என்று வலது குறைந்தோருக்கான அபிவிருத்தி வலையமைப்பின் (DWDN) நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் அனுலா ஆறுமுகம் அந்த நிகழ்வின் உள்ளடக்கம் பற்றித் தெரிவித்தார்.

நிகழ்வில் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் என். மணிவண்ணன், கிழக்கு மாகாண சபை நிர்வாகப் பிரதிப் பிரதம செயலாளர் கலாமதி பத்மராஜா, மட்டக்களப்பு உதவி மாவட்ட செயலாளர் வி. வாசுதேவன், சைற் சேர்வர்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சுனில் பெர்னாண்டோ உட்பட சுமார் நூறிற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இந்த பிராந்திய மாநாட்டில் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் பீட் சிறிலங்கா, டெஸ்மியோ மற்றும் சங்கராம உள்ளிட்ட இன்னும் பல உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் வலது குறைந்தோருக்கான சேவைகளை உள்ளூர் மட்டத்தில் அமுல்படுத்தி வருகின்றன.

வலது குறைந்தவர்களை அனைத்து அம்சங்களிலும் கவனத்தில் எடுக்க வேண்டும் என்பது கொள்கையளவிலும் சட்ட அங்கீகாரத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும் கூட, அதை நடைமுறைப்படுத்துவது தான் பெரிய சவாலாக உள்ளது.

வலது குறைந்தவர்களுக்கு வாய்ப்பளிப்பதுதான் மிகவும் பொறுப்புவாய்ந்த விடயம். அவர்களுக்கென்று விஷேட திட்டங்கள் இருக்கின்றன என்று வெறுமனே கூறிவிட்டு நமது பொறுப்புக்களைத் தட்டிக் கழித்துவிட முடியாது.

வலது குறைந்தவர்களின் விருப்பு வெறுப்புக்கள் இதில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். புறம்பான திட்டங்களை மாத்திரம் அவர்களுக்கென கொண்டு வருவது அபிவிருத்தியின் கொள்கையாக இருந்துவிடக் கூடாது. பிரதான அபிவிருத்தியின் பங்காளர்களாக வலது குறைந்தவர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

வலது குறைந்தவர்களுக்கான அபிவிருத்தி என்கின்ற ஒன்றும் வலது குறைந்தவர்களை உள்வாங்கிக் கொள்ளும் அபிவிருத்தி என்கின்ற மற்றொன்றுமாக இரண்டு விடயங்கள் உள்ளடங்கியிருக்கின்றன.

வலது குறைந்தவர்களுக்கான விசேட தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதன் மூலம் அவர்களுக்குள் மறைந்திருக்கின்ற ஆற்றல்களை வெளியே கொண்டு வர முடியும். இவை நடந்தால் ஏனையவை இயல்பாகவே நிறைவேற்றப்பட்டுவிடும். இதற்கு முன்பாக செயற்பாட்டாளர்களின் மனப்பாங்குகளை மாற்றுவதுதான் பெரிய சவால்.

வலது குறைந்தோர் பற்றிக் கதைக்கின்றபோது சாதாரணமானவர்களுக்கு உள்ளது போல அவர்களுக்கும் வாழ்வதற்கு உணவு, உடை, உறையுள் என்பன தேவைதான். ஆயினும், இயல்பாக உடலாற்றல் உள்ளவர்களைப் போல் இந்த அடிப்படை வ்சதிகளைப் பெற்றுக் கொள்வதில் வலது குறைந்தோர் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்கின்றார்கள். அவர்கள் வாழ்வதற்காகப் போராட வேண்டியிருக்கின்றது. அவர்கள் எதிர் நோக்கும் சவால்கள் சொல்லுந்தரமன்று.

வலது குறைந்தோரும் சாதாரண ஒரு பிரஜையாக கௌரவத்துடன் வாழ்வதற்கு போட்டியும் நெருக்கடியும் மிகுந்த இந்த வாழ்க்கை முறையில் பலவிதமான தடைகளும் சவால்களும் நிறைந்து காணப்படுகின்றன.

சுதந்திரமான அல்லது தடைகளற்ற சூழல் என்பது பால், வயது, உடலாற்றல், என்பனவற்றுக்கு அப்பாற்பட்டது.

(22ஆம் பக்கம் தொடர்ச்சி....)

# மட்டு.நகரின் ஆர்ப்பாட்டங்கள் மக்கள் விழிப்பின் பிரதிபலிப்புகள்!

**மட்டக்களப்பு** நகரில் ஒரு வாரத்துக்குள் இரண்டு முக்கியத்துவம் மிக்க ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. அதில் ஒன்று போதனா வைத்தியசாலை தாதியர்கள் மகப்பேற்று மருத்துவருக்கெதிராக நடத்திய ஆர்ப்பாட்டம், மற்றையது மதுபான சாலை ஒன்றின் அனுமதியை இரத்துச் செய்யக் கோரும் பொது மக்களின் ஆர்ப்பாட்டம் இவற்றின் பிரதிபலிப்புகள் ஆராயப்படவேண்டியது என்ற வகையில் இந்தப்பத்தி வரையப்படுகிறது.

பொது மக்களின் நலனே முக்கயத்துவம் மிக்கது என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், அது வெளிப்படையாகவும் முழுமையாகவும் திருப்திகரமாக நிறைவேற்றப்படுவதில் அதிகாரத்தரப்பினருக்கும் வசதிகளை அனுபவிப்பவர்களுக்குமிடையில் இடைவெளிகள் இருக்கவே செய்கின்றன.

மட்டக்களப்பின் ஆரையம்பதி பிரதேச செயலக பிரிவில் தாழங்குடா என்னுமிடத்தில் புதிதாக மதுபான விற்பனை நிலையம் ஒன்றைத் திறப்பதற்கு மதுவரித்திணைக்களத் தலைவரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை எதிர்த்து அப்பிரதேச மக்கள் கடந்த வாரத்தின் இறுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த மதுபான சாலைக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் பொதுமக்கள் ஏற்கனவே இருக்கும் மதுபான சாலைகளையும் முடிந்தவரையில் குறைக்க வேண்டும் என்றவகையில் செயற்படத் தொடங்கியிருக்கின்றனர்.

இந்த மதுபானசாலைக்கு எதிராக கட்சிச்சார்பு அமைப்புச் சார்பில்லாது அனைத்துத் தரப்பினரும் எதிர்ப்பையே தெரிவித்து வருகின்றனர். 'அரையம்பதியில் மற்றொரு மதுபான சாலைக்கு அனுமதியளிக்க வேண்டாம் என்பது வெறும் வேண்டுகோளாக இருந்து தற்போது ஆர்ப்பாட்டமாக மாறியிருப்பதே இந்த இடத்தில் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

ஆனாலும், மண்முனைப் பற்று பிரதேச செயலக பிரிவில் புதிதாக மதுபான விற்பனை நிலையமொன்றை திறப்பதற்கு குறித்த தனியார் வர்த்தகரொருவர் தொடர்ந்தும் முயற்சிகளையும் அதற்கான நடவடிக்கைகளையுமெடுத்து வருகிறார்.

குறித்த பிரதேசத்தில் ஏற்கனவே ஐந்து மதுபான விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டுள்ள நிலையில் ஆறாவது மதுபான விற்பனை நிலையமொன்றைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பிரதேச மக்கள் சில வாரங்களுக்கு முன்பும் ஆர்ப்பாட்டம் ஒன்றினை ஆரையம்பதியில் நடத்தியிருந்தனர். அதற்குப் பதில் சரியாகக் கிடைக்காத நிலையில், மாவட்ட செயலகம் வரையில் தங்களது போராட்டத்தினை நகர்த்தியிருக்கின்றனர்.

மதுபான சாலைகள் தொடர்பில், கடந்த வருடம் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இந்த ஆண்டு மண்முனைப் பற்று, ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலம் ஆராயப்பட்டு இந்தப் பிரதேசத்தில் புதிதாக மதுபான விற்பனை நிலையங்கள் திறப்பதற்கு அனுமதியளிப்பதில்லை எனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

கடந்த கால யுத்தம், சூறாவளி, மற்றும் சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட இப் பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுவருகின்ற இன்றைய சூழ்நிலையில் தொடர்ந்தும் மதுபான விற்பனை நிலையங்கள் திற்பதற்கு அனுமதியளிப்பது மதுப் பழக்கத்திற்கு அடிமையாகும் மக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதோடு, பொருளாதார ரீதியாகவும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மட்டக்களப்பில் சுமார் 60இற்கும் மேற்பட்ட மதுபான சலைகள் இயங்கி வருகின்றன. அத்துடன், கசிப்பு உற்பத்தி நிலையங்களும் மாவட்டத்தின் பல இடங்களிலும் இரகசியமாக இயங்கி வருகின்றன

புதிதாக அமைக்கப்படவுள்ள மதுபானசாலைக்கான அனுமதியை இரத்துச்செய்யுமாறு கோரி வேடர் குடியிருப்பு, புதுக்குடியிருப்பு, கிரான்குளம், காங்கேயனோடை, தாழங்குடா உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மட்டக்களப்பு காந்திசிலைக்கு முன்பாகவிருந்து பேரணியாக மட்டக்களப்பு கச்சேரிக்குச் சென்று அரசாங்க அதிபரிடம் தமது கோரிக்கை மனுவினைக் கையளித்தனர்.

இதே நேரம், கடந்த 15ஆம் திகதியன்று நடைபெற்ற அரச தாதியர்களின் தொழிற் சங்க நடவடிக்கையின் போது ப்ங்கு பற்றிய மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதியர்கள் சிலரை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் விடுதி 7இல் கடமையாற்றும் வைத்திய நிபு ணர் ஒருவர் அவமதித்து, அவர்களுக்கு எதிராக குற்றப்பிரேரணை ஒன்றை சமர்ப்பித்ததற்கெதிராக வைத்தியசாலை முன்பாக ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டது.

தாதியர் சேவையை அவமதிக்காதே, 7ஆம் மகப்பேற்று விடுதியின் பிரச்சினையை உடனடியாக தீர்த்துவை, தாதி சேவை அடிமை சேவையல்ல, தாதி சேவை உன்னதமானது, தாதியர் புறக்கணிப்பை உடன் நிறுத்து, தாதியர் சேவையை அவமதிக்காதே போன்ற சுலோகங்களை ஏந்தியபடி தாதியர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய நிபுணர் ஒருவரின் செயற்பாடுகளைக் கண்டித்தும் அது தொடர்பில் நடவடிக்கையெடுக்க தவறிய வைத்தியசாலையின் நிர்வாகத்தை கண்டித்தும் தாதியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியிருப்பது மக்கள் மத்தியில் நல்லதொரு சிந்தனையை ஏற்படுத்தியிருந்தாலும், தாதியர்கள் தமது நலனுக்காக மாத்திரம் இந்த ஆர்ப்பாட்டத்தினை நடத்தியிருக்கின்றமை வெளிப்படையானது.

தாம் நடத்திய மருத்துவ நிபுணருக்கெதிரான ஆர்ப்பாட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த மட்டக்களப்பு மாவட்ட அரச தாதியர் சங்க செயலாளர் ஜகநீதன், அகில இலங்கை ரீதியில் தாதியர் சங்கத்தினால் சுகவீன விடுமுறைப் போராட்டம் கடந்த 15ஆம் திகதி நடத்தப்பட்டது. இது தொடர்பில் வைத்தியசாலையின் பணிப்பாளர் உட்பட அனைத்து பிரிவினருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

மறுதினம் 16ஆம் திகதி 07ஆம் வார்டில் கடமைக்கு சென்ற தாதியர்கள் அங்கு கடமைபுரியும் வைத்திய நிபுணரால் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்கள் அங்கு கடமையாற்ற முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

(22ஆம் பக்கம் தொடர்ச்சி....)

-பிரகஸ்பதி-

# கலண்டர் பிறந்த கதை

**நாம்** அனைவருமே புத்தாண்டை வரவேற்க ஆவலுடனும் உற்சாகத்தோடும் காத்திருக்கிறோம். புதுவருடத்திற்கு விதவிதமான வடிவமைப்புகளில் கலண்டர்கள் வாங்கி மகிழுவோம் இவை நமது பயன்பாட்டுகளில் மிக முக்கியமான ஒன்று அத்தகைய கலண்டர்கள் எப்படி உருவானது? என்று பலருக்குத் தெரியாது. தெரிந்துகொள்வோம்!


கணக்கு கூட்டுவது எனும் பொருள் தரும் 'கலண்டே' எனும் இலத்தீன் உச்சரிப்பிலிருந்து உருவானதுதான் கலண்டர் எனும் ஆங்கிலச் சொல். புவியியல் மற்றும் கால நிலைகளில் ஏற்பட்ட பெரும் மாற்றங்களே துவக்க கால கலண்டர்களுக்கு அடிப்படையாக அமைந்தன .

நைல் நதியில் ஆண்டு தோறும் ஏற்படும் வெள்ளப் பெருக்கை அடிப்படையாகக் கொண்டு புராதன எகிப்தியர் உருவாக்கிய கலண்டர் இதற்குச் சான்று. இன்று நம் முன்னே இருக்கும் கலண்டரின் அடிப்படை கி.மு. 45 இல் ஜூலியஸ் சீசரால் உருவாக்கப்பட்ட ஜூலியன் கலண்டரே.

பதிமூன்றாம் போப் ஆண்டவராக இருந்த போப் கிரிகோரியின் ஆனைப்படி, அலோயிஷியஸ் ல்லியஸ் என்னும் மருத்துவரே 1582 பிப்ரவரி 24 இல் ஜீலியன் கலண்டரில் காணப்பட்ட குறைபாடுகளைத் திருத்தியமைத்து நாம் தற்போது பயன்படுத்தும் கிரிகோரியன் கலண்டரை உருவாக்கினார். ஏசு கிருஸ்துவின் பிறந்த தினத்தை அடிப்படையாக கொண்டே இக் கலண்டரின் வருடங்கள் ஒழுங் கமைப்பட்டது.

ஸ்பெயின், போர்த்துக்கல், போலிஷ், இத்தாலியின் பெரும்பாலான பகுதிகள் போன்றவையே கிரிகோரியன் காலண்டரை முதன் முதலில் ஏற்றுக்கொண்டன. 1582 அக்டோபர் முதல் இவை கிரிகோரியன் காலண்டரைப் பயன்படுத்தத் துவங்கின. இங்கிலாந்தும் அமெரிக்காவும் 1752 ஆண்டிற்கு பின்பே கிரிகோரியன் காலண்டரை அங்கீகரித்தன. 1923 பெப்ரவரி 15 ல் கிரிகோரியன் கலண்டரை அங்கீகரித்த கிரீஸே இப் பட்டியலின் கடைசி நாடு.

அடுத்ததாக மாதங்கள் எவ்வாறு உருவாகியது என்பதைப் பார்ப்போம்.




**ஜனவரி:**

ரோமன இதிகாசத்தில் "துவக்கங்களின் கடவுளாக" காணப்பட்ட ஜானஸ்லானுயாரியஸ் கடவுளின் பெயரே கிரிகோரியன் காலண்டரின் முதல் மாதமான ஜனவரிக்கு வழங்கப்பட்டது.

**பெப்ரவரி:**

"சுத்தபடுத்தல்" எனும் பொருள் தரும் ':.பெப்ரம்' எனும் இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்ததே பெப்ரவரி. புராதன ரோமர்கள் பிப்ரவரி மாதம் 15 ம் தேதி :.பெப்ரா எனும் சுத்தப்படுத்தும் செயலைச் செய்வதற்காக சூட்டப்பட்டதே இந்த பெப்ரவரி.

**மார்ச்:**

ரோமர்களின் போர்க்கடவுளான மார்ஸி என்பதிலிருந்து உருவானதே மார்ச். கி.மு 700களில் ரோமாபுரியை ஆண்ட நுமபோம் விலஸ் மன்னர் ஜனவரியையும், பிரபரிவரியையும் ஒன்றினைப்பதற்கு முன்புவரை மார்ச் மாதமே ரோமக்காலண்டரின் முதல் மாதம்.

**ஏப்ரல்:**

'திறக்குக' எனும் பொருள் தரும் 'அபேரிரே' எனும் இலத்தீன் சொல்லிலிருந்துதான் ஏப்ரல் மாதத்திற்கு அப்பெயர் கிடைத்தது என்பது ஒரு கருத்து. ரோம ஐதீகப்படி எல்லா மாதங்களின் பெயர்களும் கடவுள் பெயரிலிருந்தே துவங்குகிறது. அதன்படி ஏப்ரல் மாதம் வீனஸ் தேவதையின் மாதமாகக் கருதப்படுகிறது கிரேக்கர்கள் வீனஸை அ:.ப் ரோடைட் என்றே அழைக்கினறனர் அதன்படி வீனஸ் தேவதையின் மாதம் எனும் பொருள் தரும் 'அப்லோரிஸ்' என்னும் சொல்லே ஏப்ரல் மாதத்திற்கு வழங்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது

**மே:**

கிரேக்கக் கடவுளான 'மாயியா' வின் பெயரே மே மாதத்திற்கு வழங்கப்பட்டுள்ளது

**ஜூன்:**

ஜூபிடர் கடவுளின் மனைவியாக புராதன ரோமர்கள் கருதிய 'ஜூனோ' என்பதிலிருந்தே ஜூன் மாதம் பிறந்தது

**ஜூலை:**

ரோமக கலண்டரின் மாதமாக கருதப்பட்ட, இலத்தீன் மொழியின் 'கவிண்டிலஸ்' என அழைக்கப்பட்ட இம் மாதத்தில் தான் ஜூலியஸ்சீசர் பிறந்தார். அதையடுத்தே இம் மாதத்திற்கு ஜூலை எனப் புதுப் பெயர் சூட்டப்பட்டது.

**ஒகஸ்ட்:**

ஒகஸ்ட மாதம் புராதன ரோமக் கலண்டரில் ஆறாவது மாதமாகக் கருதப்பட்டது. ஆறாவது எனப் பொருள்படும் 'ஸெக்டிலஸ்' எனும் இலத்தீன் சொல்லே துவக்ககால ரோமக் கலண்டரில் இம் மாதத்தின் பெயராகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. பிற்பாடு கி.மு எட்டாம் நூற்றாண்டில் அலெக்ஸாண்ட்ரியா நகரை வென்ற அகஸ்டஸ் சக்ரவர்த்தியின் சிறப்பை வெளிப்படுத்தும் விதத்தில் இம்மாதத்திற்கு அவரது பெயர் சூட்டப்பட்டது.

**செப்டம்பர்:**

இலத்தீன் மொழியில் 'ஏழு' எனப்பொருள் வரும் "செப்டம்" என்ற சொல்லே புராதன ரோமர்களின் கலண்டரில் ஏழாவது மாதத்திற்கு வழங்கப்பட்டது. அதையொட்டி கிரிகோரியக் காலண்டரும் அப்பெயரைப் பின்பற்றியது.

**ஒக்ரோபர்:**

இலத்தீன் மொழியில் 'எட்டு' எனப் பொருள் தரும் "ஒக்டோ" என்ற சொல்லிலிருந்து வந்ததே அப்பெயர்.

**நவம்பர்:**

ஒன்பது எனும் பொருள் தரும்
'நோவம்' எனும் இலத்தீன் சொல்லிலிருந்து உருவானதே நவம்பர்.

**டிசம்பர்:**

இலத்தீன் மொழியில் பத்து எனும் பொருள் தரும் "டிசம்பர்" ரோமக் கலண்டரில் பத்தாவது மாதமாக இருந்தது. இந்திய தேசியக் கலண்டர் கி.பி. 78 இல் துவங்கும் சக கலண்டரே இந்தியாவின் தேசியக் காலண்டராக கருதப்படுகிறது. சாதவா ஹன மன்னரான சாலிவா ஹன் உஜ்ஜைனி மன்னர் விக்ரமாதித்தனை போரில் வென்றதையடுத்து சக வருடம் துவங்கியது.

இந்தியாவில் கிரிகோரியன் கலண்டரும்சக வருடக்கலண்டரும் அதிகாரப்பூர்வமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 1957 இன் காலண்டர் மறு சீரமைப்பு கமிட்டியே சக காலண்டரை அதிகாரப்பூர்வ காலண்டராக அங்கீகரிக்கப் பரிந்துரை வழங்கியது.

கிரிகோரியன் காலண்டரின் 1957 மார்ச் 22 ஆம் தேதியில் தான் சக வருடத்தின் முதல் மாதமான சைத்ரம் 1, 1879 இல் அதிகாரப்பூர்வமாகத் துவங்கியது.

**தமிழ்க் காலண்டர்:**

சூரியனை அடிபபடையாக்க் கொண்டு உருவாக்கப்பட்டது. கிரிகோரியனைப் போன்றே சித்திரை முதல் பங்குனி வரையிலான 12 மாதங்கள் இதிலும் உண்டு.

**இஸ்லாமியக் காலண்டர்:**

முகமது நபி மெக்காவிலிருந்து மதினாவுக்குச் சென்ற நாளில் இருந்துதான் இஸ்லாமிக் கலண்டரின் வருடம் துவங்குகிறது. கி.பி. 622 இல் நிகழ்ந்தது நபியின் பயணம். சந்திரனை அடிப்படையாக கொண்ட இது 12 மாதங்கள் கொண்டது.



# புலிகளின் வதை முகாமின் மணியம்

**வதை 37** துன்பியல் தொடர்

என்னைக் கண்டதும் எனக்கு அருகில் இருந்த பெரியவர், "நல்ல வேளை தண்ணி நிக்கக்கிடையிலை வந்திட்டியள். ஓடிப்போய் குளியுங்கோ" என்றார். அவர் இதைச் சொல்லும்போது நிர்வாணமாக நின்று கொண்டு, பிழிந்த தனது சாரத்தால் தலையைத் துவட்டிக் கொண்டிருந்தார். எனக்கோ வெட்கமாகவும் கூச்சமாகவும் இருந்தது. நான் நிர்வாணமாகக் குளிக்கத் தயங்கினேன். வயதுவந்த பின்னர், ஒருபோதும் அவ்வாறு குளித்த அனுபவம் எனக்கு இல்லை. நான்கு சுவர்களுக்குள் மூடிய கதவின் பின்னால்கூட, ஏதாவது துணி அணிந்து கொண்டுதான் குளித்துப் பழக்கம். அதேநேரத்தில் ஒரு கிழமையாகக் குளிக்காததால் குளிக்கவும் ஆசையாக இருந்தது. இன்று தயங்கினாலும் என்றோ ஒருநாள் குளிக்கும்போது நிர்வாணமாகத்தான் குளிக்க வேண்டும். இறுதியில் ஒரு முடிவுக்கு வந்து உள் பக்கமாக இருந்த அறைக்குள் சென்று சாரத்தைக் களைந்துவிட்டுக் குளித்தேன்.

அந்தச் சந்தர்ப்பத்தில் எங்கள் (கைதிகள்) நிலையை எண்ணியபோது, தமிழ்த் தலைமைகள் குறித்து அடிக்கடி நான் கேட்ட ஒரு விடயம்தான் நினைவுக்கு வந்தது. அதாவது "எமது தமிழ்த் தலைவர்கள் 'தமிழ்மொழி' 'தமிழினம்' என்று வாய் ஓயாது பேசிப்பேசி, கடைசியில் தமிழனை ஒட்டாண்டியாக்கியதுதான் மிச்சம்" என எமது கட்சியின் முக்கிய தோழர் ஒருவர் அடிக்கடி சொல்வதுண்டு. ஆனால் இப்பொழுது புலிகளோ எங்களைக் கோவணாண்டிகளாகக்கூட விடாமல், நிர்வாணாண்டிகளாக்கி விட்டார்களே என்றுதான் எண்ணத் தோன்றியது.

இந்த ஆரவாரமெல்லாம் முடிய மதிய போசனம் வந்து சேர்ந்தது. வழமையை விட வித்தியாசமாக அது இருந்தது. வழமையான சீனி போட்ட வெண்பொங்கல் இன்று இல்லை. அதற்குப் பதிலாக சீனி போடாத வெள்ளைச் சோறு. அதனுடன் சேர்த்துச் சாப்பிட மரவள்ளிக் கிழங்கில் கறியுமல்லாத சொதியுமல்லாத ஒரு திரவம். அதைப் பங்கிட்டபோது அதிர்ஷ்டமிருந்த சிலருக்கு அந்தக் கிழங்கின் சில வேர்கள் கிடைத்தன. மற்றவர்கள் தண்ணீர்ப் பதார்த்த்துடன் திருப்திப்பட்டுக் கொண்டனர். எனக்கு அருகிலிருந்த பெரியவருக்கு சில வேர்கள் கிடைத்ததால், அவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் அதைப் பல தடவைகள் திரும்பத் திருமப் சூப்பிச் சூப்பிச் சாப்பிட்டதைப் பார்க்க மிகவும் கவலையாக இருந்தது.

சாப்பிட்டு முடிந்ததும் என்னைப் பார்த்து அவர் சிரித்தார். "கன நாளைக்குப் பிறகு நல்ல சாப்பாடு" எனத் திருப்தியுடன் கூறினார். தொடர்ந்து "எங்கடை பக்கத்து கிழங்கு எண்டால் கற்கண்டுதான்" என்றார்.

இதுதான் சமயம் என நினைத்து நான் அவரிடம், "நீங்கள் எந்த ஊர்?" என்று கேட்டேன்.

"நான் தம்பி உடுவில். எங்கடை ஊரிலையும் பக்கத்தை மருதனாமடம், இணுவில் பகுதிகளிலையும் பெருவாரியாக மரவள்ளி போடுறவை" எனக் கூறினார்.

"நீங்களும் செய்யிறனிங்களோ?" என நான் கேட்டேன்.

"இல்லையில்லை நான் சென். பற்றிக்கிஸ்சிலை படிப்பிக்கிறன்" என்று சொல்லிவிட்டு, நான் மேற்கொண்டு ஏதாவது கேட்டுவிடுவேனோ என்று நினைத்தோ என்னவோ எழுந்து உள் அறையை நோக்கிச் சென்றுவிட்டார்.

எனது விசாரணை முடியும்வரை, என்னுடன் விடயங்களைப் பங்கிடுவதை அவர் விரும்பவில்லை என்பதை ஏற்கெனவே அவர் உணர்த்தியிருந்ததை நான் நினைத்துக் கொண்டேன். ஆனால் சில தினங்களுக்குள்ளாகவே அவரது பெயரையும், அவர் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் உடற்கூற்றியல் ஆசிரியராகக் கற்பித்துக் கொண்டிருந்தவர் என்பதையும் அறிந்து கொண்டேன். அவரது புனிதமான ஆசிரியத் தொழிலையும் சமூக அந்தஸ்தையும் எண்ணிப் பார்க்கையில், அவரை அந்த மரவள்ளி கிழங்கு வேரை ஆசையுடன் சூப்ப வைத்த இந்த கேடுகெட்ட புலிகளை மிருக சாதியிலும்கூட சேர்க்க முடியுமா என்றுதான் எண்ணத் தோன்றியது.

இந்த இடத்தில் எம்மைத் தங்க வைத்திருந்த வதைமுகாம் சம்பந்தமாகவும் சில விடயங்களைக் கூறுவது பிரயோசனமாக இருக்கும் என நினைக்கிறேன். இந்தச் சிறைச்சாலையானது யாரோ ஒருவருடைய பெரிய தொரு வீட்டை அபகரித்து, புலிகள் அதை தமது வசதிக்கு ஏற்றவாறு மாற்றியமைத்த ஒன்றாகும். இதில் நான்கு பகுதிகள் உண்டு.

நடுவில் உள்ள பெரிய ஹோல்தான் அதிகம் பேர் தங்க வைக்கட்டிருந்த பகுதியாகும். நானும் அதில்தான் இருந்தேன். அதன் வடக்கு நோக்கிய முன் பகுதியில் எமது சிறையின் இரும்புக் கதவும், குறுக்காக ஒரு சிறு விறாந்தையும் உண்டு. அந்த விறாந்தையின் கிழக்குப்புற முடிவில் ஒரு சிறிய அறை உண்டு. அதில்தான் தில்லை நான் அங்கு சென்ற நேரத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தார். அந்த அறைக் குள் நாம் போய் வருவதற்கு வழிகள் எதுவு மில்லை. எமது ஹோலின் பின்பக்கமாக மேற்குப்புறத்தில் இன்னொரு சிறிய் அறை உண்டு. அதற்குள் எம்மால் போய்வர முடியும். இதைவிட எமக்குப் பின்புறமாக வெளியே இன்னொரு சிறிய அறை உண்டு.



இவற்றைவிட பின்பக்கமாக தனியே புலிகளால் புதிதாக விசேடமான முறையில் மிக ஒடுக்கமாகக் கட்டப்பட்ட சில கைதிக்கூண்டுகள் இருந்தன. அவற்றில் கடுமையான குற்றவாளிகள் எனக்கருதப்பட்ட சிலர் தனிமையில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் அங்கு மூன்று மாதம் முதல் ஒரு வருடம்வரை தடுத்து வைக்கப் பட்டிருப்பது வழமை என அறிந்தேன்.

அவ்வாறு தடுத்து வைக்கப் பட்டிருந்த மாதகலைச் சேர்ந்த சிவம் என்பவரைப் பின்னர் எமது பகுதிக்கு மாற்றியிருந்தனர். அவர் சுமார் ஆறு மாதங்கள்வரை தனிமையில் இருந்த பின்னர் எமது பகுதிக்கு வந்திருந்தார். அவர் ஒரு புலிப்போராளி. அவர் செய்த குற்றம், மட்டுவில் பகுதியில் இயக்க முகாமில் இருந்தபோது, அயலிலுள்ள பெண் ஒருவரை விரும்பி அவருடன் இரகசியமாகத் தொடர்பு வைத்திருந்ததுதான்.

அவர் எமது பகுதிக்கு வந்தபின்னர் சிலர் அவருடன் பேச்சுக்கொடுக்க முயன்றனர். அவர் சில நாட்களாக யாருடனும் பேசவில்லை. எது கேட்டாலும் வாய்திறக்க மாட்டார். யாரையும் ஏறெடுத்தும் பார்க்கவும்மாட்டார். சுவரை அல்லது மிக உயரத்தில் உள்ள யன்னல் கம்பிகளை வெறித்துப் பார்த்தபடி இருப்பார். சமூகத்தின் ஓர் அங்கமான ஒரு மனிதனை இயற்கைக்கு மாறாக தனிமைச் சிறையில் பூட்டி வைத்தால், எப்படி அவனுக்கு மனச்சிதைவு ஏற்பட்டு சமூகத்திலிருந்து அந்நியப்பட்டுப் போவான் என்பதை, அந்த இளைஞனில் அப்பட்டமாகப் பார்க்க முடிந்தது. அவனைஎனக்கு அருகில் இருக்க விட்டதால், நான் அவனுடன் சதா முயன்று, அவனது மன இறுக்கத்தைப் படிப்படியாகத் தளர்த்தி, இறுதியில் அவனது வாயைத் திறக்க வைத்தேன்.

(துன்பியல்கள் தொடரும்...)




இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

## வாரம் ஒரு திருக்குறள்



**பேதைமை**

**நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்**
**போணாயின் பேதை தொழில்.**

தகாதவற்றிற்கு நாணாமலிருத்தல், தக்கவற்றை நாடாமலித்தல், அன்பு இல்லாமை, நன்மை ஒன்றையும் விரும்பாமை ஆகியவை பேதையின் தொழில்கள்.

குறள்:833

# மூன்றுக்குப் பெருமை!

இந்து சமயக் கடவுள்களான பிரம்மா, விஷ்ணு, சிவன் எனும் மூன்று கடவுள்கள் முப்பெரும் தெய்வங்கள் என்றும் இவர்களுக்குத் துணையாக உள்ள சரஸ்வதி, லட்சுமி, சக்தி எனும் முப்பெரும் தேவியர்கள் உள்ளனர் என்றும் இந்து சமய நம்பிக்கை உள்ளது. இவை எண் மூன்றுக்கு பெருமை சேர்ப்பதாக உள்ளது. இது போல் தமிழர்களிடையே மூன்றுக்கு பெருமை தரும் வேறு சில தகவல்களும் உள்ளன. அவை எவையென்று உங்களுக்குத் தெரியுமா?



| | |
|---|---|
| பொருள் | - அறம், பொருள், இன்பம் |
| சுடர் | - சூரியன், சந்திரன், நெருப்பு |
| உலகம் | - பூலோகம், பரலோகம், பாதாளம் |
| தொழில் | - ஆக்கல், காத்தல், அழித்தல் |
| அரசர் | - சேரர், சோழர், பாண்டியர் |
| தமிழ் | - இயல், இசை, நாடகம் |
| நூல் | - முதல், வழி, சார்பு |
| காலம் | - இறப்பு, நிகழ்வு, எதிர்வு |
| இடம் | - தன்மை, முன்னிலை, படர்க்கை |
| பாவினம் | - தாழிசை, துறை, விருத்தம் |
| முப்பொருள் | - பதி, பசு, பாசம் |
| மலம் | - ஆணவம், கன்மம், மாயை |
| பொறி | - மனம், வாக்கு, காயம் |
| குணம் | - சாத்துவிகம், இராசதம், தாமதம் |
| குற்றம் | - காமம், வெகுளி, மயக்கம் |
| சக்தி | - இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி |
| தீ | - ஆகவனீயம், தக்கிணாக்கினியம், காருகபத்தியம் |
| உயிர்த்தீ | - உதரத்தீ, விந்துத்தீ, சினத்தீ |
| பிணி | - வாதம், பித்தம், கபம் |
| கடுகம் | - சுக்கு, திப்பிலி, மிளகு |
| காய் | - கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் |
| கனி | - மா, பலா, வாழை |
| முந்நீர் | - ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர். |



# வாசிப்பு

புத்தகம் படிப்பது என்பது வெறும் பொழுதுபோக்கு மட்டுமல்ல –அது மூளையை உற்சாகப்படுத்தும் மருந்து என்பது கண்டறியப்பட்டுள்ளது.

மூளையியல் விஞ்ஞானி சூசன் கிரின்பீல்ட் என்பவர் செய்த ஆய்வில் இந்த தகவல் கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் படிப்பது குழந்தைகளின் கவனத்திறனை அதிகரிக்கும் எனவும் தெரிய வந்துள்ளது. கதைப்புத்தகங்களில் ஒரு ஆரம்பம், இடைநிலை, முடிவு என இருப்பது நமது மூளையினை சிந்திக்கவும், விளைவு எப்படி இருக்கும் என தூண்டவும் செய்கிறது.

குழந்தைகளாக இருக்கும்போது படிக்க ஆரம்பிப்பது மூளையின் திறனை வளர்க்க உதவுவதால்இ பெற்றோர்கள் குழந்தைகள் கேட்கும் பருவத்தை அடைந்தவுடன் படித்துக் காட்ட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார் சூசன். படிப்பதன் மூலமாக நாம் படிக்கும் விசயத்தை மூளை நேரடியாக உணர்கிறது. இதனால் மூளையின் நரம்புகள் தூண்டப்படுகிறது. ஆனால் இவ்வாறான உணர்வு தொலைக்காட்சி பார்க்கும்போதோ அல்லது கணினி விளையாட்டில் ஈடுபடும்போதோ ஏற்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே நல்ல நூல்களை நாமும் படிப்போம். குழந்தைகளையும் படிக்கத் தூண்டுவோம்.

# அணுகுண்டு

01) அமெரிக்கா அணுகுண்டு செய்த ஆண்டு எது?
1941ஆம் ஆண்டு

02) அமெரிக்கா ஜப்பான் கிரோஷிமா மீது எ த்தனையாம் ஆண்டு அணு குண்டைப் போட்டது?
16.08.1945

03) உலகிலே முதல் அணு குண்டுப் பரிசோதனை செய்யப்பட்ட இடம் எது? எப்போது நடாத்தப்பட்டது?
அமெரிக்காவின் நியு? மெக்சிக்கோ பாலைவனத்தில் அலமக்கோடா என்னும் இடத்தில் 16.07.1945 அதிகாலை 5.30மணிக்கு மேற்கொள்ளப்பட்டது

04) அமெரிக்கா பரிசோதித்த அணுகுண்டின் ஒளி எத்தனை மையில்களுக்கு அபால் தெரிந்தது?
250 மையில்களுக்கப்பால்

05) அமெரிக்கா செய்த அணுகுண்டின் பெயர் என்ன?
சின்னப்பையன்




# அக்பர் -பீர்பால் கதை



எம்.எல்.லாபீர்.

ஒரு முறை அக்பர் பாதுஷா, பீர்பாலின் புத்திசாதுர்யத்தை பரீட்சிக்க எண்ணினார். பீர்பால் அரச சபைக்கு வரமுன்னரே இரகசியமாக ஒவ்வொரு பிரதானிக்கும் ஒவ்வொரு கோழிமுட்டையைக் கொடுத்து நடைபெறப் போகும் விளையாட்டை பற்றி எடுத்துக்கூறினார்.

பீர்பால் வந்து சேர்ந்ததும் அரச தடாகத்தில் மூழ்கி கோழிமுட்டை எடுத்து வருவருபவரை மட்டுமே உண்மையான தகப்பனாராக கருதமுடிவதாக நேற்றிரவு நான் ஓர் கனவு க்ண்டேன் என அக்பர் கூறினார்.


எல்லோரும் பீர்பாலை கூட்டிக் கொண்டு தடாகத்திற்கு சென்றார்கள். பாதுஷாவின் கட்டளைப்படி பிரதானிகள் எல்லோரும் தடாகத்தில் மூழ்கியெழுந்து ஒவ்வொரு முட்டையோடு வெளியேறினர். அதேபோல் பீர்பாலும் நீருக்குள் மூழ்கினார். ஆனால் முட்டை எதுவும் அவர் கைக்குக் கிடைக்கவில்லை.

பாதுஷா ஏதோ வேடிக்கை செய்கிறார் என பீர்பால் உணர்ந்தார். அவர் தனது அறிவைப் பயன்படுத்தி தடாகத்திலிருந்து வெளியேறும் போதே சேவலைப் போல் கூவினான். குக்குறுகூ.... என. இதென்ன பீபார் எங்கே உம்முடைய முட்டை? என்று பாதுஷா கேட்டார். அதற்குப் பீர்பால் சொன்ன பதில்,

பாதுஷாவே! முட்டையிடும் கோழிகளுக்கு மத்தியில் நான் மட்டுமே ஒரேயொரு சேவர் முட்டையிடும் வேலை எனக்கு உரியதல்ல: எல்லா முட்டைகளும் கிடைக்க நான் தான் காரணம் என பீர்பால் கூறினான்.

பீர்பாலை கேலி செய்வதற்காக காத்திருந்த பிரதானிகளும், பாதுஷாவும். பீர்பாவின் சமயோசிதத்தைக் கண்டு தலை கவிழ்ந்து வாயடைநத்துப் போனார்கள்.

# சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 04.12.2012

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 967**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 965**

பரிசுக்குரியவர்:
**துவாரகேசிகன், தாழ்பாடு, மன்னார்.**

பாராட்டுக்குரியவர்கள்

01. ரா.உஷாந்தினி, யா/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.
02. ச.கஜனி, 'ஸ்ரீராம்' கோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்
03. A.J.யூட்தனிஷ்டன், தாழ்பாடுறோட், எழுத்தூர், மன்னார்.
04. கே.றெஷானி, றொட்பானா, விஸ்வமடு.
05. ம.குளோதுங்கன், செங்கலடி, மட்டக்களப்பு.
06. எஸ். பிரியந்தினி, தோனிக்கல், வவுனியா.
07. ஏ. அபிஷன், புதுச்செட்டித்தொரு, கொழும்பு -13.
08. எம்.ஆஜிஷா, புத்தளம்.

# சுதந்திர தேவி சிலை



அமெரிக்காவின் அடையாளமாக உள்ள சுதந்திரதேவி சிலை 305 அடி உயரத்துடன்(93மீற்றர்) கம் பீரமாக வானை நோக்கி உயர்ந்து நிற்கிறது.

பண்டைய ரோமின் அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கும் லிபர்டாஸ் என்ற கடவுளச்சியின் வடிவம் போல விடுதலையை முன்னெடுத்துச் சென்று விளக்கொளி பரப்பும் தேவதை என்ற சிந்தனையில் சுதந்திரதேவி சிலை வடிவமைக்கப்பட்டது. அதன் தலையில் உள்ள கிரீடத்தில் இருக்கும் 7 நீட்சிகள் - 7 கடல்களையும் 7 கண்டங்களையும் குறிக்கும். கையிலிருக்கும் புத்தகம் அறிவையும் அதிலிருக்கும் திகதி ஜூலை 4 1887 என்று அமெரிக்கா உருவான நாளையும் குறிக்கும்.

151அடி உயரமுடைய இச் சிலை 65 அடி உயரமுடைய அடித்தளம் மற்றும் 89 அடி உயரமுடைய பீடத்தின் மேல் பிரம்மாண்டமாக நிறுத்தப்பட்டது. இச்சிலையை 90.7 தொன் செம்பும் 113.4 தொன் இரும்பும் பயன் படுத்தப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் முன்னிலையில் 1886 ஒக்ரோபர் 28 அன்று சிலையை க்ரோவர் திறந்துவைத்தார்.

1902ஆம் ஆண்டுவரை இச் சிலை கலங்கரை விளக்காகவும் பயன்பட்டது.

இச்சிலையின் உட்புறத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒற்றை வளைவு படிக்கட்டுகள் மூலம் (354 படிக்கட்டுகள்) சுதந்திர தேவி சிலையின் கிரீடத்தை அடையமுடியும்.

ஏறி நின்று ரசிப்பது எத்தனை அற்புதமான விசயம். ஒரே நேரத்தில் அங்கிருக்கும் 25 ஜன்னலகள் வழியாக 30 பேர் நியூயோர்க் நகரைப் பார்வையிடலாம்.

பிரம்மாண்டமான இச் சிலையை அருகிலிருந்து பார்ப்பதே அலாதி சுகம் என்றால் அதன் உச்சியில் சிலையின் பீடத்தில் புதிய கொலாசஸ் என்ற எம்மா லாஸரஸின் கவிதை செதுக்கி வைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் அடையாளங்களுள் ஒன்றாக இச்சிலையை வழங்கிய பிரான்சில் இதன் மாதிரி உருவம் வைக்கப்பட்டுள்ளது.

இந்த வரலாற்று சிறப்பு மிக்க சிலையை புதுப்பிக்க 2 கோடியே 75 இலட்சம் டொலர் செலவு செய்ய அமெரிக்கா முன்வந்துள்ளது.

சுதந்திர தேவி சிலை 125 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இந்த சிலையை புதுப்பிக்க மிகப்பெரும் ஏணிகள் மற்றும் எலிவெட்டர்கள் நிறுவப்படுகின்றன. சிலை மூடப்பட்டிருந்தாலும் சுதந்திர தீவு பொது மக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டு இருக்கும்.

கடந்த 1886ஆம் ஆண்டு சுதந்திர தேவி சிலையை அமெரிக்காவிற்கு பிரான்ஸ் அர்ப்பணித்தது. இந்த புகழ்மிக்க சிலையை ஆண்டு தோறும் 35 இலட்சம் மக்கள் பார்த்து செல்கின்றனர்.

கடந்த 2001ஆம் ஆண்டு அல்கொய்தா தாக்குதலுக்கு பின்னர் இந்த சிலையின் உள் பகுதியில் ஏற பார்வையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

# கொள்ளை ராணி பூலான்தேவி



## திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு

**எல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.**

**132**

**மான்சிங்கைப்**
பெண்கள் விடயத்தில் சைவக் கொக்கு என்றும் சொல்லிவிட முடியாது. ஆனால் எந்தப் பெண்ணையும் அவள் விருப்பம் இல்லாமல் நெருங்கக் கூடாது என்பது பாபாவின் கட்டளை. மான்சிங்குக்கும் அக்கொள்கையில் உடன்பாடு இருந்தது.

சில கிராமங்களின் தங்கி இருக்கும்போது மான்சிங்கின் விருப்பத்திற்கு இணங்கிய பெண்களும் இருக்கிறார்கள். தாமாக மான்சிங்கை நாடிவந்த பெண்களும் உண்டு.

கொள்ளைகளின்போது எந்தப் பெண்ணுடனும் பாபாவின் ஆட்கள் அத்துமீறி நடந்ததே கிடையாது.

பெண்கள் என்றால் சகல விடயங்களிலும்அடங்கிப் போகிறவர்கள்; ஆண் மகனால் அடக்கப்பட ஆவலாகக் காத்திருப்பவர்கள்; சமைத்துப் போடவும், சரசம் போடவும்தான் லாயக்கானவர்கள் என்றுதான் மான்சிங் இதுவரை நினைத்திருந்தான்.

அவ்வப்போது. பசிக்கு நொறுக்குத் தீனி மாதிரியாகவும், தாகத்துக்கு குளிர்ச்சியான தண்ணீர்ப் போத்தலாகவும்தான் பெண்களுடனான தொடர்புகளை வைத்துக்கொண்டிருந்தான். அதற்கு மேல் பெண்கள் மீது ஆர்வம் எதுவும் இருந்ததில்லை.

ஆனால் பூலானைக் கண்டதில் இருந்து. பூலானின் துணிச்சலையும், துரிதமான தாக்குதல்களையும் பக்கத்தில் இருந்தே கவனித்த பின்னர் மான் சிங் பிரமிப்பின் உச்சிக்கே போய்விட்டான். முதன்முதலாக, தனக்கு ஒரு துணைவி தேவை என்பதையும், அது ஏன் பூலானாக இருக்கக் கூடாது என்பதையும் அவன் மனது உணரவும், கேட்கவும் தொடங்கி இருந்தது.

பூலானிடம் மனம்விட்டுப் பேசிவிடலாம் என்று நினைத்துத்தான் இப்போது அவள் அறைக்குச் சென்றான.

பூலானின் அறைக்குத்தான் செல்வதை பாபா கண்டுவிடுவாரோ என்று பயந்தான். பாபாவின் அறை வாயில் கதவு சாத்தப்பட்டிருந்தது.

திருட்டுப் பூனை மாதிரித்தான் நடந்து கொள்வதை நினைக்க மான்சிங்குக்கு தன்மீதே நகைப்பாக இருந்தது.

பூலான் அப்போதுதான் இரவு உணவை முடித்துவிட்டு, தன் துப்பாக்கியைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

பண்ணையார் சாதிக்காரர்களின் இரண்டு கிராமங்களைச் சூறையாடியதும், தன் எதிரிகளில் சிலரை பழிவாங்கியதும் பூலானை உற்சாகப்படுத்தி இருந்தன.

முன்பைவிட அவள் மனம் இப்போது கடினப்பட்டிருந்தது. தன் எதிரே துடிதுடித்துச் செத்துப் போகிறவர்களை ஒரு விஷப்பூச்சியாக நினைத்துக் கொண்டாள்.

அந்த மரணங்கள் அவள் மனதில் துளியும்கூட பரிதாபத்தை ஏற்படுத்தவில்லை.

துர்க்காதேவியின் சார்பாக வழங்கப்படும் தண்டனையாகவே அவற்றை நினைத்தாள். முன்னர் போல பூலானின் கனவில் அந்த வெள்ளையுடைத் தேவதை தோன்றுவதில்லை. தனக்குள் அந்த துர்க்கை அவதாரம் இரண்டறக் கலந்துவிட்டது. அதுதான் இப்போது கனவில் தோன்றுவதில்லை என்று முடிவு கட்டியிருந்தாள் பூலான்.

பெண்களைத் தன் குழுவில் வைத்திருக்கக் கூடாது என்ற பாபாவின் முடிவைத் தவிர பாபாவின் ஏனைய குணங்கள் பூலானைக் கவர்ந்தன.

பாபாவின் கோஷ்டியில் இருப்பதைத்தான் பூலான் விரும்பினாள். தனியாக ஒரு கூட்டத்தை வைத்து நடத்துவதை நினைக்க தயக்கமாக இருந்தது. ஆனாலும் பாபாவின் முடிவை மாற்றுவது சுலபமானது அல்ல என்பதையும் அறிந்தே இருந்தாள். அப்போதுதான் மான்சிங்கின் நினைவு வந்தது. மான்சிங் ஊடாக பாபாவுடன் கதைத்துப் பார்க்கலாமே என்று நினைத்தாள். அவள் நினைக்கவும், அறைக் கதவை லேசாகத் தட்டிவிட்டு மான் சிங் உள்ளே நுழையவும் சரியாக இருந்தது. பூலானுக்கு அதிசயமாக இருந்தது.

"இப்போதான் நினைத்தேன்!" என்று மான்சிங் அவள் சொன்னதற்கு அர்த்தம் கற்பித்துக் கொண்டு உள்ளே போனான்.

ஆனால் அவனும் சற்றுத் துணிச்சலாக, " நானும் நினைத்துக் கொண்டுதான் வந்தேன்" என்றான்.

பூலானுக்கு அவன் சொன்னதன் அர்த்தம் சரியாக விளங்கவில்லை. ஆனால் மான் சிங்கின் கண்களில் தேங்கியிருந்த ஏக்கத்தைப் பூலான் புரிந்துகொண்டாள்.

மல்லாவுடன் இருந்த காலப்பகுதியில் அனுபவம் கற்றுக்கொண்ட பாடங்களில் இதுவும் ஒன்றுதான்.

மல்லாவைத் தன்னால் மறக்கமுடியாது என்றாலும் கூட, தனக்கும் ஒரு துணை நிச்சயம்தேவை என்ற உண்மையை பூலானால் உதாசீனப்படுத்த முடியவில்லை.

ஆனால் அந்தத் துணை மான்சிங்தானா என்பதை அவள் இன்னமும் தீர்மானிக்கவில்லை.

மான்சிங்கின் துணிச்சலும், விவேகமும், இக்கட்டான நேரங்களில் விரைந்து முடிவெடுக்கும் அவன் திறனும் பூலானைக் கவர்ந்திருந்தன.

பாபாவிடம் இருந்து விலகியே தீரவேண்டும் என்பது முடிவானால், தனது கோஷ்டிக்கு மான் சிங்தான் தளபதி என்பதை மட்டும் பூலான் தீர்க்கமாகவே தீர்மானித்திருந்தாள்.

மான்சிங் மீது மதிப்பு இருந்தாலும், அவனை மல்லாவின் இடத்தில் வைத்துப் பார்க்க இது வரை நினைத்தது இல்லை. அதனால் மான்சிங்கின் பார்வையில் பொதிந்து கிடந்த அர்த்தங்கள் பூலானுக்குச் சங்கடத்தைத் தந்தன.

பூலானின் தவிப்பை தன்னை நாடும் ஏக்கமாகக் கருதிய மான் சிங் மெல்ல அவளை நெருங்கினான். அவன் மூச்சுக் காற்று பூலான் மீது சூடாகப்பட்டுத் தெறித்தது.

மான்சிங்குக்கு பூலானை நெருங்கிய பின்னர்தான் மனசுக்குள் தயக்கம் எழுந்தது. உடம்பெல்லாம் தணலாகக் கொதித்தது.

எப்படியோ துணிச்சலை வரவழைத்துக் கொண்டு பூலானின் கைகளில் ஒன்றைப் பற்றி, அவள் விரல்களோடு தன் விரல்களைக் கோர்த்துக் கொண்டான். விரல்களால் விரல்களைச் சிறிது இறுக்கினான்.



**பண்ணையார் சாதிக்காரர்களின் இரண்டு கிராமங்களைச் சூறையாடியதும், தன் எதிரிகளில் சிலரைபழிவாங்கியதும் லானை உற்சாகப்படுத்தி இருந்தன.முன்பைவிட அவள் மனம் இப்போது கடினப்பட்டிருந்தது. தன் எதிரே துடிதுடித்துச் செத்துப் போகிறவர்களை ஒரு விஷப்பூச்சியாக நினைத்துக் கொண்டாள். அந்த மரணங்கள் அவள் மனதில் துளியும்கூட பரிதாபத்தை ஏற்படுத்தவில்லை.**


பூலானுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. உடனே அவனை நிராகரித்தால் மனம் உடைந்துபோவான். உறவும் பாதிக்கப்பட்டுவிடும்.

எப்படித் தவிர்ப்பது என்று தவித்தாள். அதேநேரம் மான் சிங்கின் நெருக்கமும், அவன் மூச்சுக்காற்றின் வெப்பமும் பூலானின் மனதின் ஓரத்தில் தூங்கிக் கிடந்த சபலம் என்ற சிங்கத்தை உசுப்பவும் தொடங்கியது.

திருப்பங்கள் தொடரும்...

**மருத்துவம்**

# கணினியால் வரும் கண் பிரச்சினை




**கணினி** என்பது இன்று அநேகம் பேருக்கு மூன்றாவது கை மாதிரி. அது இன்றி ஒரு நிமிடம் கூட நகராது. உணவு, உறக்கமெல்லாம்கூட இரண்டாம் பட்சம்தான். கணினிதான் வாழ்க்கை பலருக்கும். அந்தளவுக்கு கணினி பயன்பாடு தவிர்க்க முடியாததாகி வருகிற நிலையில், இடைவெளியே இல்லாமல் 24 மணி நேரம் கணினியே கதி என இருப்பவர்களுக்கு 'கம்பியூட்டர் விஷன் சின்ட்ரோம்' என்கிற பிரச்சினை வரலாம் என எச்சரிக்கிறாரர்கள் மருத்துவர்கள்.

அதென்ன 'கம்பியூட்டர் விஷன் சின்ட்ரோம் அதிகநேரம் கம்பியூட்டர் உபயோகிக்கிறவங்களுக்கு கண்கள் வறண்டு. கண்ணீரே இல்லாமப் போகலாம். அடிக்கடி தலைவலி. கண்கள் இழுக்கிற மாதிரி உணர்வு. கண்கள் துடிக்கிறது, எரிச்சல், பார்வை மங்கின மாதிரி உணர்வு... இதெல்லாம் கம்பியூட்டர் விஷன் சின்ட்ரோமின் அறிகுறிகளாக இருக்கலாம்.

சதா சர்வகாலமும் கணினியே கதியா இருப்பவர்கள், '20 - 20 - 20' விதியைப் பின்பற்றியே ஆகவேண்டும். அதாவது 20 நிமிடங்களுக்கு ஒரு முறை, 20 நொடிகளுக்கு, 20 அடி தொலைவில் உள்ள காட்சியைப் பார்க்கவேண்டும். உள்ளங்கைகளை சூடு பறக்கத் தேய்ச்சு, மூடின கண்கள் மேல வச்சு எடுக்கலாம். கண்கள் ரொம்ப வறண்டு போனால், கண் மருத்துவரை அணுகவேண்டும்.

கிட்டப்பார்வையும் இல்லாமல், தூரப்பார்வையும் இல்லாமல் கம்பியூட்டருக்கு நடுத்தர பார்வை தேவை. கண்ணாடி தேவைப்படும் போது, தூரப்பார்வைக்கும் கிட்டப் பார்வைக்குமான கண்ணாடி கம்பியூட்டருக்கு சரி வராது. கம்பியூட்டர் வேலைக்கான பிரத்தியேக கண்ணாடிகள் இருக்கு. ஸ்பெஷல் கோட்டிங்கோட், நடுத்தரப் பார்வைக்கான அதைக் கேட்டு வாங்க வேண்டியது அவசியம். கம்பியூட்டருக்கும் உங்களுக்குமான இடைவெளி சரியாக இருக்கவேண்டும்.

பாதங்கள் தரையைத் தொடுகின்ற மாதிரி உட்காரவேண்டும். 90 டிகிரி கோணத்தில் இருப்பது சரியாக இருக்கும். கம்பியூட்டருக்கு ஆன்ட்டி ரெ.்.ப்ளெக்ஷன் மொனிட்டர் போடுவதும் கண்களைப் பாதுகாக்கும். பொதுவாக 40 பிள்ஸ்ல இருக்கிறவங்களுக்கு, வெள்ளெழுத்தோட சேர்ந்து, இந்த கம்பியூட்டர் விஷன் சின்ட்ரோம் பிரச்சினையும் வரும். அந்த வயதில் வரக்கூடிய பிரச்சினையாக ஒதுக்காமல், கம்பியூட்டர் விஷன் சின்ட்ரோமுக்கும் சோதனை செய்து. தேவையான சிகிச்சைகளை எடுத்துக்கொள்வது அவசியம்.

**ஒரு நபர் மயக்கம் அடைவதற்கு முன்பு, கீழக்கண்ட அறிகுறிகளை ஒருவரால் உணரமுடியும்.**

1. **தலை கனமில்லாமல் இலேசாக இருப்பது போன்ற உணர்வு.**
2. **சோர்வு.**
3. **வாந்தி ஏற்படுவது போன்ற உணர்வு.**
4. **தோல் வெளுத்துக் காணப்படுதல்.**

**முதலுதவி**

மேற்கண்ட அறிகுறிகளுடன் ஒரு நபர் மயக்க நிலையை உணரும்போது அவரை முன்புறமாக சாய்க்கவேண்டும்.

தலையை முழங்கால்களுக்கு நேராக கீழே சாய்த்துக் கொள்ளவேண்டும். தலையானது இதய பகுதியைவிட கீழாகத் தாழும்போது மூளை பகுதியின் இரத்த ஓட்டம் அதிகரிக்கிறது.

பாதிக்கப்பட்ட நபர் சுயநினைவை இழக்கும் போது

பாதிக்கப்பட்ட நபரின் தலை குனிந்தும், கால்களை உயர்த்தியுள்ள நிலையில் படுக்க வைக்கவேண்டும்.


இறுக்கமான உடைகளைத் தளர்த்திவிட வேண்டும்.

குளிர்ந்த ஈரமான துணிகளை முகம் மற்றும் கழுத்துப் பகுதியில் போடவேண்டும்.

மேற்கண்ட நடவடிக்கைகளின் மூலமாக பாதிக்கப்பட்ட நபர் உடனடியாக சுயநினைவைப் பெற்றால், பாதிக்கப்பட்ட நபரிடம் அவரைப் பற்றிய கேள்விகளை கேட்பதன்மூலமாக அவர் முழுமையாக சுயநினைவைப் பெற்றுள்ளாரா என்பதனை உறுதிசெய்து கொள்ளவேண்டும். பாதிக்கப்பட்ட நபரை உடனே மருத்துவரிடம் அழைத்துச் செல்வது மிகச் சிறந்தது.



## மயக்க நிலையில் செய்யவேண்டிய முதலுதவி




## குவிகிறது பணம் தொடர்கிறது சர்ச்சை

தீபாவளியன்று வெளியாகிய விஜயின் 'துப்பாக்கி' முதல் நாளிலேயே 9 கோடிக்கும் மேல் தமிழ்நாட்டு திரையரங்குகளில் வசூல் செய்து இருக்கிறது. கேரளாவில் முதல் நாள் மட்டும் 85 இலட்சத்திற்கும் அதிகமாக வசூல் செய்து இருக்கிறது.


இப்படத்திற்கு பிரபலங்கள் பலரும் பாராட்டு தெரிவித்துள்ளனர். பலரும் பாராட்டி இருந்தாலும், சூப்பர் ஸ்டார் பாராட்டியதை பெருமையாகக் குறிப்பிடுகிறார் ஏ.ஆர். முருகதாஸ். 'துப்பாக்கி' படத்தைப் பார்த்துவிட்டு முருகதாசுக்கு போன் பண்ணிய ரஜினிகாந்த், படம் பிரமாதமாக இருக்கிறது. இந்தப் படத்தை இரண்டு முறை பார்த்துவிட்டேன். அந்த அளவுக்கு நன்றாக இருக்கிறது என்று பாராட்டி இருக்கிறார்.

பாராட்டுக்களும் வசூலும் ஒருபுறம் குவிந்து கொண்டிருக்க மறுபுறத்தில் சர்ச்சைகளும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

படத்தில் இடம்பெற்றுள்ள இஸ்லாமியர்களுக்கு எதிரான காட்சிகளை நீக்கக்கோரி 24 இஸ்லாமிய அமைப்புகள் போர்க்கொடி தூக்கின. இதைத் தொடர்ந்து நடிகர் விஜய் வீட்டிற்கும் பொலிஸார் பாதுகாவல் இருந்தனர்.

இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்ந்து நீடித்தால் துப்பாக்கி படம் மற்றும் விஜயின் நற்பெயருக்கு களங்கம் வாய்ப்புள்ளதெனக் இயக்குனர் முருகதாஸ், எஸ்.ஏ.சந்திரசேகரன் ஆகி- மேலும் இதுதொடர்பான காட்சிகளை திரை உத்தரவாதம் கொடுத்தனர்.






## நாயகி அப்சென்ட் இயக்குநர் விளக்கம்

நடிகர் விஜய் ஆதிராஜ்ஜின் இயக்கத்தில் உருவான புத்தகம் படத்தில், சத்யா நாயகனாகவும், ரகுல் ப்ரீத் சிங் நாயகியாகவும் நடித்துள்ளனர். படத்தின் புரமோஷனுக்கு நாயகன், நாயகி வரவேண்டும் என ஆரம்பத்திலேயே ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

இப்படத்தின் ஓடியோ வெளியீட்டுக்கு படத்தில் நடித்த நட்சத்திரங்கள் பங்கேற்றனர். ஆனால் கதாநாயகி மட்டும் பங்கேற்கவில்லை. இதுகுறித்து இயக்குனர் கூறுகையில், படப் புரமோஷனுக்கு வரவேண்டும் என்று ஒப்பந்தம் போட்டிருப்பது நிஜம்தான். முதலில் ஓடியோ கேஸட் விழா சத்யம் தியேட்டரில் நடத்த திட்டமிடப்பட்டது. ஆனால் விஜய்யின் துப்பாக்கி வெளியீட்டை ஒட்டி தியேட்டர் கிடைக்கவில்லை.

இதனால் வேறு திகதியில் நட்சத்திர ஓட்டலில் விழா நடத்த ஏற்பாடானது. இந்தத் திகதியில் நாயகி ரகுல் ப்ரீத்சிங் மும்பையில் இந்தி படத்தின் படப்பிடிப்பில் பங்கேற்க உள்ளதாக கூறினார். அதற்கு சம்மதித்தேன். அங்கிருந்து வீடியோ கொன்பரன்ஸ் மூலம் நிகழ்ச்சியில் அவர் பேசுவதாக இருந்தது. தொழில்நுட்ப பிரச்சினை காரணமாக அதை செய்ய முடியவில்லை, என்றார்.



## பாசப் போராட்டம்

தந்தைக்கும் 8 வயது மகளுக்கும் இடையில் நடக்கும் பாசப்போராட்டம்தான் 'தங்கமீன்கள்' படத்தின் கதை. தந்தை–மகள் பாசத்தை மையமாகக் கொண்டு பல படங்கள் வெளிவந்துவிட்ட போதிலும், 'தங்கமீன்கள்' ஸ்பெஷலாக இருக்கும் என்று படக்குழுவினர் கூறுகின்றனர்.

குழந்தை வளரவளர காட்சிகளைப் படமாக்கி இருக்கிறார்கள். அதனால்தான் இந்தத் தாமதம் என்றும் கூறுகின்றனர். இந்தப் படத்தின் படப்பிடிப்பு முடிந்து பல நாட்கள் ஆகிவிட்ட போதிலும் ரிலீஸ் பற்றிய அறிவிப்பை வெளியிடாமல் இருந்தனர்.

புதிய தகவல்களின்படி 'தங்கமீன்கள்' பொங்கலுக்கு ரிலீசாகிறது.

இப்படத்தின் இசையமைப்புப் பணிகளில் பிஸியாக ஈடுபட்டிருக்கிறார் யுவன் ஷங்கர் ராஜா. இந்தப் படத்தின் இசை விரைவில் ரிலீசாகும் என்று தெரிகிறது. படத்திற்கான விளம்பரப்பணிகளையும் விரைவில் தொடங்கத் திட்டமிட்டுள்ளனர்.

## படப்பிடிப்பு தளத்தில் மயக்கம்!

வி சினிமா க்ளோபல் நெட்வொர்க் பட நிறுவனம் தயாரித்து வரும் படம் ரணம்.

இந்த படத்தில் வீரா மற்றும் ஷரத் நாயகனாகவும், சுவாசிகா நாயகியாகவும் நடிக்கின்றனர்.

இப்படம் குறித்து இயக்குனர் கூறுகையில், கொக்கரக்கோ கோழி என்ற பாடல் காட்சியை உலகிலேயே மிக உயரமான இடமாக கருதப்படுகிற 7130 அடி உயரமுள்ள கொழுக்குமலை என்ற ஊரில், அதாவது தேனிக்கு அருகில் படமாக்கினோம்.

இங்கிருந்து நாங்கள் அழைத்து சென்ற 15 குழந்தைகள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள், நடிகர், நடிகைகள் பலரும் ஒட்சிசன் குறைவு மற்றும் கடுங்குளிர் போன்ற காரணங்களால் மயக்கம் போட்டு விழுந்தனர்.

நாயகி சுவாசிகா மூன்று முறை மயக்கம் போட்டு விழுந்தார். நாங்கள் கையோடு டாக்டர் ஒருவரை அழைத்து சென்றிருந்ததால் எல்லோருக்கும் சிகிச்சை கொடுத்து படப்பிடிப்பை தடையில்லாமல் நடத்திமுடித்தோம். இவ்வளவு கஷ்டப்பட்டு எடுத்த பாடல் காட்சியை திரையில் பார்த்து பிரமித்து போனோம் என்று தெரிவித்துள்ளார்.



## அலட்டிக்கொள்ளாத நடிகை அமலா பால்

கொலிவூட்டில் விஜய், தனுஷ், ஜெயம் ரவி என முன்னணி கதாநாயகர்களுடன் நடித்து வருகிறார் அமலா பால்.

இதற்கிடையே தெலுங்கிலும் அல்லு அர்ஜுன், ராம் சரண் என்று முன்னணி கதாநாயகர்களுடன் நடித்துவருகிறார்.

இப்படங்களில் நடிக்கும் மற்றொரு நாயகிக்கும் அமலாவுக்குமிடையே போட்டிகள் உண்டாவதாக திரையுலகில் தகவல் வெளிவர, இதற்கு அமலா பால் பதிலளித்துள்ளார்.

இது குறித்து அமலா பால், நான் நடிக்கும் படங்களில் எத்தனை கதாநாயகிகள் இருந்தாலும் அதைப்பற்றி கவலைப்படுவதில்லை.

என் கதாபாத்திரம் பிடிக்கிற பட்சத்தில் அந்தப் படங்களை ஏற்று நடிப்பேன். மற்றபடி, என்னுடன் நடிக்கும் நடிகைகளிடத்தில் போட்டி மனப்பான்மையுடன் நடிப்பதில்லை என்றார்.

நேரத்தை வீணடிக்காமல் என்னைப் பற்றியும் என் வளர்ச்சியைப் பற்றியை மட்டுமே யோசிப்பேன் என்று கூறியுள்ளார்.




## கார்த்தியின் எதிரி சந்தானம்

சுராஜ் இயக்கத்தில் கார்த்தி–அனுஷ்கா ஜோடி நடிக்கும் படம் அலெக்ஸ் பாண்டியன். இந்த படத்தில் காமெடி நடிகரான சந்தானமும் உள்ளார். இந்த படத்தில் புது ரோலில் வருகிறார்.

இது குறித்து சூரஜ் கூறுகையில், பிற படங்களுடன் ஒப்பிருகையில் அலெக்ஸ் பாண்டியனில் சந்தானம் வித்தியாசமான கதாபாத்திரத்தில் வருகிறார். படத்தில் கார்த்தியின் எதிரியாக வருகிறாராம் சந்தானம். சந்தானம் எதிரியாக நடித்தால் எப்படியிருக்கும் என்று யோசித்துப் பார்த்தால் அதுவும் காமெடியாகத்தான் இருக்கிறது. அலெக்ஸ் பாண்டியன் பொங்கலுக்கு ரிலீஸாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.






ஏற்பட
கருதி,
கலைப்புலி தாணு,
யோர் மன்னிப்பு கோரினர்.
ள திரைப்படத்திலிருந்து நீக்கவும்




# அதிர்ந்தாராம் கமல்!

ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடித்துள்ள துப்பாக்கி படம் தீவிரவாதி-களை மையப்படுத்தி உருவாகியுள்ளது. இதேபோல்தான் கமல் இயக்கியுள்ள விஸ்வரூபம் படமும் உருவாகியுள்ளதாம். கதையோட்டம் வெவ்வேறு பாதைகள் என்றாலும் சேருமிடமும், கதையில் மையமும் ஒரே மாதிரியான தீர்வைத்தான் பிரதிபலிக்கின்றனவாம்.

அதிலும், துப்பாக்கி படத்தில் 12 ஸ்லீப்பர் செல்களையும், 12 பேர் சென்று சுட்டு வீழ்த்துவது போன்றதொரு காட்சியும் கமல் படத்தில் உள்ளதாம். அதனால் துப்பாக்கிப் படத்தைப்பார்த்து அதிர்ச்சியடைந்துள்ளாராம் கமல்.

இதனால் தற்போது மொத்தப் படத்தையும் முடித்துவிட்ட அவர், அடுத்து என்ன செய்வதென்ற ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார். வேற மாதிரி யான காட்சிகளை படமாக்கலாமா? என்று யோசித்துக்கொண்டிருக்கிறார். ஆனால், அவர்கள் 12 பேர் வெவ்வேறு இடங்களில் சென்றுதானே ஸ்லீப்பர்செல்களை சுட்டு வீழ்த்தியிருக்கிறார்கள். ஆனால் விஸ்வரூபத்தில் நாம் ஒரே பஸ்சுக்குள் அத்தனை பேரையும சுட்டு வீழ்த்துவது போன்றுதானே படமாக்கியிருக்கிறோம். அதனால் காட்சியமைப்பு வேறு மாதிரியாகத்தானே இருக்கிறது என்று சிலர் கூறி வருகிறார்களாம். அதனால் முதலில் தடுமாறிய கமல், இப்போது எந்தவித மாற்றமும் செய்யவேண்டாம் என்று முடிவு செய்திருக்கிறாராம்.



# சண்டைப் பயிற்சி எடுக்கிறார் காஜல்!

கோலிவுட், டோலிவுட், பொலிவுட் என 3 மொழிகளிலும் முன்னணி கதாநாயகி வரிசையில் காஜல் அகர்வால் இருக்கிறார்.

தொடக்கத்தில் பெரும்பாலும் கவர்ச்சி மற்றும் ரூயட் காட்சிகளில் மட்டுமே நடித்து வந்த காஜல், துப்பாக்கியில் சண்டைக்காட்சிகளில் நடித்துள்ளார். அதனால் இனி நடிக்கப் போகும் படங்களில் வெறும் கவர்ச்சி பொம்மையாக மட்டுமல்லாமல் நல்ல பெயர் கிடைக்கும் வகை யிலான கதாபாத்திரங்களில் நடிக்க விரும்புகிறார்.

குறிப்பாக அக்ஷன் நாயகியாக நடிக்க வேண்டுமென்ற ஆசையும் தனக்கு ஏற்பட்டிருப்பதாக கூறும் காஜல், ஒரு சண்டை பயிற்சியாளரை நியமித்து முறையான பயிற்சிகளையும் எடுத்துக்கொள்ளப் போகிறாராம்.



# இயக்குநர்களை கிறங்கடிக்கிறார் சமந்தா

மணிரத்னம், ஷங்கர் போன்ற இயக்குனர்களின் படங்களில் இருந்து தோல் அலர்ஜி காரணமாக விலகியதால், சமந்தாவின் மீது இயக்குனர்களுக்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளது. நோய் காரணமாக அவரது உடல் அழகு குறைந்திருக்குமோ என்று நினைக்கிறார்கள்.

இதனால் சமந்தா மீண்டும் நடிக்க வந்துவிட்ட செய்திகள் வெளியானபோதும் அவர் மீது எந்தவித ஈர்ப்பும் ஏற்படவில்லை. மாறாக, சமந்தாவுக்காக கதை பண்ணி வைத்திருந்தவர்கள்கூட இப்போது வேறு நடிகைகளை தேடிச்சென்ற வண்ணம் உள்ளனர்.

இந்த சேதியை அறிந்த சமந்தா, இப்படியே விட்டால் தனது நிலைமை மோசமாகிவிடும் என்று சில முக்கியத்துவம் வாய்ந்த தமிழ், தெலுங்கு டைரக்டர்களை நேரில் சந்தித்து வருகிறார். அதோடு உடம்பு முழுக்க கவர் பண்ணும் ஆடைகளை உடுத்திவந்தால் தோல் நோயால் ஏற்பட்ட உடல் மாற்றத்தை மறைக்கத்தான் அப்படி வந்திருப்பதாக நினைப்பார்கள் என்று படுகவர்ச்சியாக டிரஸ் அணிந்து வருகிறார் சமந்தா. அதனால் பெரும்பாலும் பகல் நேரங்களை விடுத்து இரவு நேரங்களாகப் பார்த்து கவர்ச்சி உடைதரித்து டைரக்டர்களை இரகசியமாக சந்தித்து வருகிறார். சமந்தாவை சினிமாவில்கூட அப்படி பார்த்திராத இளவட்ட இயக்குனர்கள் அவரது பளிச்சிடும் இளமையைப் பார்த்து சொக்கிப் போகிறார்களாம். இதனால் இதுபற்றி இயக்குனர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள, மீண்டும் சத்தமில்லாமல் சமந்தாவின் மார்க்கெட் எகிறும் நிலை ஏற்பட்டிருக்கிறது.




# வரலட்சுமிக்கு கூடுகிறது மவுசு

சிம்பு நடிப்பில் வெளியாகியுள்ள படம் போடா போடி.

இப்படத்தில் சரத்குமாரின் மகளான வரலட்சுமி நாயகியாக அறிமுகமாகியிருக்கிறார். கதைப்படி டான்சராக நடித்துள்ள அவர், அந்த கதாபாத்திரமாகவே மாறி அற்புதமாக நடித்துள்ளார். முதல் படம் என்கிற தடுமாற்றம் எந்த இடத்திலும் இல்லாமல் சிறப்பாக நடித்திருக்கிறார். குறிபபாக கிளாமர் காட்சிகளிலும் நிறையவே தாராளம் காட்டி நடித்திருக்கிறார்.

இதையடுத்து விஷாலுக்கு ஜோடியாக நடித்துவரும் மதகஜராஜா படத்திலும் அதிரடி நடிப்பை வெளிப்படுத்தி வருகி-றாராம். இந்த செய்தி கோலிவுட்டில் வேகமாக பரவியதையடுத்து, வரலட்சுமி பற்றிய கதை அதிகரித்திருக்கிறது.



# தேன் கிண்ணம்

## விழித்துக் கொண்டேன்!



தாடி வைக்கச் சொல்லி
அழகு பார்த்த லேடியே!
சாடி என்னுடன்
கலந்த மூடியே!
பாடிய கீணையிவள் தேடியே!
கூடியே வந்த அழகு மோடியே!
வருடிவிட்ட சீமாட்டியே!
இதயத்தை ஊரடங்கு போட்ட பேடியே!
என்னை விட்டுப்போடி
ஓடியே வேகம் காணுமடி
வழிக்கப்போகின்றேன் தாடியடி!

ஜெயம் ஜெகன்,
புதுக்குடியிருப்பு.

## தொடரும் அவலம்

ஐப்பசிக் கடைசியில் மீள்குடியேற்றம்
கார்த்திகையில் தொடங்கியது
பருவமழை.
தற்ப்பாள் குடிசையே வாழ்விடம்
அங்கொரு மூலையில் சமையலும்,
சாப்பாடும்
ஓடி வந்த வெள்ளத்தால் நிறைந்தது
குடிசை.
நிர்க்கதியான அக்குடும்பம் மீண்டும்
அகதியாகி
செல்கிறது அவ்வூர் பாடசாலை
நோக்கி...



கு.விஜிதன்,
குழுவமுனை.

## கல்லறையிலும் ஓர் காதல்!

கண்கள் சந்தித்தது
என் கண்ணில் காதலும்
மலர்ந்தது ....மனம்
கற்பனையில் கனாக்களுடன்
கவிபாடியது.. பேதலித்தது!
உன்னால் தானே பெண்ணே!



தயக்கத்துடன் ஒப்புவித்தேன்
உன்னிடம் - என் காதலை.
புன் சிரிப்பால், வெட்கமும்
நாணமும் மூடிக்கொள்ள
ஆமோதித்தது உன் கண்கள்!
உயிரே உனக்கென்று
உயில் எழுதினேனே.. அக்கணம்!
சிறகுகள் ஆயிரம்
மனதில் முளைத்தது - உன்
கைவிரல் தீண்டிய போது!

நவீன யுகப் பெண்ணே..
காதலுக்கு கைவிடத் தெரியாது
அப்போது என்னை
நீ கைவிட்டாயே... புரிகிறது
உன்னுடையது காதல் இல்லை!
உன் காதல் பேச்சுகளில்
பூச்சுகள் பூசி இருப்பதை
கவனிக்க தவறிவிட்டேனடி...?

இன்று
நீ என்னவள் இல்லை
என்னைப் பிடிக்கவில்லை
உனக்கு - என்னை
பலி எடுத்து விடு.
என் காதலை வேண்டாம்
அது தூய்மையானது.

கல்லறை வரை உன்
பெயரைக் கூறி
காதல் கடிதம் எழுதத்தான்
தெரியும்...
கலைவதற்கு கனவும் அல்ல.
பிரிவதற்கு உயிரும் அல்ல
இறுதி மூச்சிலும்
என் காதல் ஜீவிக்கும்...
மரணத்தின் பின்பும்கூட
உனக்காக மாத்திரம்.

H.பர்ஸானா,
வவுனியா.

## நினைத்திருப்பேன்!



எதிர்பாராத சந்திப்பால்..
எனக்குள் ஒரு மயக்கம்
அதில் தயக்கம்...!"

அவனைக் கண்டவுடன் - என்
மனக்கதவு திறந்தது.

இளமையின் பருவம்...
இனம்புரியாத உணர்வுகள்.
உணர்வுகளின் கொந்தளிப்பில்
காதல் அரும்பியது..
ஒரு தலைக்காதலாக...

கண்ணதாசனின்...
காதல் வரிகளை.
நினைத்து! நினைத்து!!
எனக்குள் ஏற்பட்ட
அன்புக் காதலனுக்கு
கடிதம் வரைந்தேன்

தோழியின் துணையோடு
தூதுவிட்டேன்
எனக்குள்ளிருப்பவனுக்கு.

என்..
காதல் மயக்கம் தீர - அவன்
சம்மதம் தருவானா?
சம்மதம் தரும் வரை!
அவனையே....
நினைத்திருப்பேன்!

வீ.அருள்ராஜா
கொம்மந்துறை.

## ஈழத்துக் கவிஞர்கள்

### முல்லை அமுதன்



முல்லை அமுதன் எனும் பெயரில் 1980 ஆம் ஆண்டு களில் இருந்து எழுதிவரும் மகேந்திரன் இரத்திரன சபாபதி அவர்கள், திருகோணமலை பெருந்தெரு தமிழ்க் கலவன் பாடசாலை, யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய வற்றில் தன் கல்வியைத் தொடர்ந்தார்.

யதார்த்தம் நிறைந்த கவிதைகள் பலவற்றை எழுதிவரும் முல்லை அமுதனுடைய நூல்கள்.

நித்தியகல்யாணி, புதிய அடிமைகள், விடியத் துடிக்கும் ராத்திரிகள், விழுதுகள் மண்ணைத் தொடும், ஆத்மா, யுத்த காண்டம், விமோசனம் நாளை, பட்டங்கள் சுமக்கின்றான், சிநேகம், யாகம், இசைக்குள் அடங்காத பாடல்கள், இலக்கியப் பூக்கள் என்பனவாகும்.

வருடாந்தம் ஈழத்து நூல் கண்காட்சிகளை நடாத்து வதுடன், ஈழத்து நூல்களை ஆவணப்படுத்தியும் வருகிறார். அத்துடன் காற்றுவெளியென்னும் இணைய இலக்கிய சஞ்சிகையையும் நடாத்தி வருகிறார்.

இவரது கவிதைகளில் ஒன்று

### நூல்களும்...

நூல்கள் எனக்குச் சொந்தம்.
எதை இழப்பினும் அவற்றை இழக்கச்
சம்மதமில்லை.
உனக்கு எப்படியோ?
எனக்குள் வலி எடுத்தது.
யாரோ வாள் எடுத்துச் செருகியதாய்
குருதி கொட்டுகிறது.
சுலபமாய் -
சொல்ல உனக்கு முடிந்திருக்கிறது.
அன்பை அறுப்பது போல...!
முன்னரும்
உறைவாளைச் செருகுவது போல
நூலை இடுப்பில்
செருகிச்சென்றான் நண்பன்....
இப்போது நீ...!
இதயத்தை தருமாப் போல
நூலை உன்கையில் சேர்த்தேன்.
தொலைந்து விட்டதாய் சொல்கையில்
மொத்தமும் இழந்ததாய்...
உயிர்ப்பென எழவைப்பதே நூல்
என்பதை எப்போது உணரப் போகிறாய்..?
இப்படிச்சொல்லி எவரையும்
ஏமாற்றிவிடாதே...
என்னைப் போல இறந்துவிடுவார்கள்...!

வேலணையூர் தாஸ்

## நம்ம ஊரு



வனப்பான
என்னூரில்
வலம்வந்த
நினைப்பில்
அசைபோட்டு
அலைகிறது.
அகதியாய்
என்மனசு...

நிலாச்சோறுண்ட
முற்றத்துமணலும்
உலவிக்கழித்த
சுற்றத்து உறவுகளும்
எங்கே...?

பள்ளிப் பாதையில்
துள்ளித்திரிந்த
அள்ளிப்போன
சுகங்கள் எங்கே..?

தோள் தந்த தோழர்கள்
ஊர் சுற்றிய
சாலையோரங்கள்
கனதியாய் கனக்கின்றது
கால்க்கிடப்புகளில்...

எத்தனை முகங்களில்
குடி கொண்ட என்னூர்
முகாரிகளால்
முக்காடிடப்பட்டதேன்..?

இழந்த சோபையும்
இனி திரும்புமா?
வசந்த காலமும்
நம்ம ஊரில்
வலம் வருமா...?
எப்போ..? இனி
எப்போ...?

க.நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்.

கலாபூஷணம்
கே.எஸ்.ஆனந்தன்.

அத்தியாயம் 08

13



# சிங்கை மைந்தன் அமரசிம்மன்

**"இளவரசியார்!** இன்றைய நிகழ்ச்சி பற்றி எதுவும் கூறாமல் வருகின்றார்கள். ஒரு நாணயத்துக்கு இரு பக்கம் இருப்பது போல அமரசிம்மனுடைய மனதின் மறு பக்கத்தையும் இன்று பார்த்திருப்பீர்கள். இல்லையா தேவி" என்றார் பெரிய உடை யார்.

"அமைச்சர் பெருமானே! தங்கள் உள்வீட்டு விடயங்கள் அயல்நாட்டு இளவரசிக்குத் தெரியாமல் போய்விட்டதால் பொதுவான அபிப்பிராயத்தையே முன்னர் கூறியிருந்தேன். அமரசிம்மன் பற்றி நான் தவறாக எடை போட்டிருந்தமைக்கு வருந்துகிறேன். வெட்கப்படுகின்றேன்" என்றாள்.

" நானும் ஆரம்பத்தில் அவனுடன் பல தடவை முரண்பாட்டுடன் நடந்து கொண்டதுண்டு. ஆனாலும் அவன் தன் பிடிவாத குணத்தாலும். தன்னம்பிக்கையாலும் எல்லோர் மனதையும் தன் வசப்படுத்திவிட்டான் தேவி."

"உண்மைதான் ஐயா, எனது தந்தையார் அடிக்கடி அமரசிம்மரைப் பற்றிப் புகழ்ந்துரைத்த போதெல்லாம் எமது அரண்மனையில் இல்லாத வீரர்களா என்று கூட நான் எண்ணியதுண்டு. ஆனால் அவரிடம் வீரம் மட்டுமில்லை – விவேகமும் சேர்ந்துள்ளது."

"அது மட்டுமா தேவி?"

"இல்லை ஐயா அவரிடம் உள்ள விசேட குணம்தான் அதற்குக் காரணம்."

"அது என்னவோ?"

"பலரைக் கொல்வதால் மட்டும் ஒருவன் வீரனாகி விட முடியாது என்பது ஒன்று. மற்றொன்று குற்றம் செய்தவன் தண்டிக்கப்பட வேண்டும் என்ற விதியை நல்ல வழியில் தண்டிக்கப்பட்டால்அவன் திருந்தி மனிதனாக வாழ முடியம் என்பதையும் அறிந்து நடந்து கொள்ளும் திறமை. வள்ளுவர் வாய்மொழியை அடிப்படையாகக் கொண்ட கொள்கையை அவர் கையாளும் திறன்தான் அது."

"அது என்னவென்று நான் அறியலாமா தேவி?"

'தங்களுக்குத் தெரியாததா?" 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்' என்று கூறும் பொன்மொழி. நாங்கள் பத்திருக்கிறோமே தவிர..." என்று சிரித்தான்.

"இளவரசியரின் விளக்கம் அற்புதம். 'கற்கக் கசடறக் கற்றதன் விளைவு அது!" என்று அந்த உரையாடலில் இடைபுகுந்த மன்னர் கூறினார். அவர் கூறியதைக் கேட்டு இளவரசி நாணித் தலை குனிந்தாள்.

" என்ன இளவரசியாரின் பேச்சையே காணோம்? நான் கூறியதில் ஏதும் தவறு உண்டோ?" என்று மீண்டும் கேட்டார் மன்னர்.

"அரசே! தங்களைப்போன்றஓர் மன்னர் இருப்பதால் தான் அமரசிம்மருக்கு இந்தப் பாக்கியம் கிடைத்தது. என்னை விடஒருவன் உண்டா என்ற ஆணவமுள்ள மன்னராயிருந்தால் தளபதி தன்னிச்சைப் படி நடந்து கொள்ளவிட்டிருப்பாரா? நீங்கள் அவரை தளபதியாக மட்டுமல்ல தங்கள் மகனாகப் பார்க்கும் பெருந்தன்மையும், மாசுமறுவற்ற நன்நோக்குடைய மந்திரியாரும் இருப்பதே அமரசிம்மனின் பெருமைகளுக்குக் காரணம்" என்றாள்.

"நன்றாகச் சொன்னீர்கள் இளவரசி!" என்ற குரல் கேட்டு திடுக்குற்று நிமிர்ந்த இளவரசி மதுரவல்லி எதிரே நின்ற புதிய மனிதரைப் பார்த்துத் திகைப்புற்று நின்றாள்.

***

மகிழ்ச்சிகரமான நல்லதோர் சூழ்நிலையில் நடைபெற்ற உரையாடல்களுக்கு இடையில் முன்பு அறிமுகமில்லாத மூன்றாவது மனிதர் தலையிடும் போது யாருக்கும் குழப்பம் ஏற்படுவது இயல்பு. அத்தகைய ஓர் நிலைகளான இளவரசி மதுரவல்லி தடுமாறிடத் திகைப்புற்று நின்றுவிட்டாள். அதுவும் தன்னை விழித்துக் கூறிய அந்தப் புது மனிதன் யாராயிருக்கலாம் என்பதுடன் மன்னர் சமூகத்தில் அனுமதியின்றி நுழைந்து உரையாடலில் இடைபுகுந்ததுதான் அவளுக்குத் திகைப்பை ஏற்படுத்தியிருந்தது. அவள் மன்னர் குணவீரனைத் திரும்பிப் பார்த்தாள்.அவர் புன்னகை தவழ அவனை நோக்கினார்.

"நான் முன்பே கூறினேன் இளவரசி.இவன்தான் கனக சூரியன். எனக்குப்பின் இந்த நாட்டின் அரச கட்டில் ஏறும் உரித்துடையவன்" என்றார் குணவீரசிங்கை ஆரியன்.

"வணக்கம். இன்றுதான் தங்களைப் பார்க்கின்றேன்" என்று கரம் குவித்தாள் மதுரவல்லி.

"இளவரசியாரை நானும் இன்று தான் பார்க்கின்றேன். ஆனால் தங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றேன். நான் இராட்சிய விசயமாக தெற்கே போயிருந்தேன்" என்றான் கனகசூரியன்.


"அமரசிம்மனும், கனக சூரியனும் சிங்கை அரசின் கீர்த்தியையும், விஸ்தரிப்பையும் விரும்புகின்றனர். அதற்காகவே அடிக்கடி தெற்குக்கு விஜயம் செய்கின்றான் தம்பி கனக சூரியன்" என்றார் மன்னர் குணவீரர்.

[தொடரும்...]



இனத்தின் பெயரால் எந்த ஒரு மனிதரும் இனி சாகக்கூடாது... எந்தக் காரணத்துக்காகவும் இந்தப் பூமியில் போர் நிகழக்கூடாது என்பதுதான். இனத்தின் பெயரால் உயிரை இழந்த கடைசி மனிதர்கள் நாங்களாக இருக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால். இன்றும் இனத்தின் பெயரால் படு கொலை களும் அழித்தொழிப்புகளும் தொடர்ந்த வண்ணம்தான் உள்ளன. என்னைப் போல எத்தனையோ இலட்சம் பேர் பலியாகிக்கொண்டுதான் இருக்கிறார்கள். சாத்தியமாகாத கனவா என்னுடையது? ஹிட்லர்கள் ஒரு போதும் மரிப்பதில்லையோ?

# வதைமுகாமில் ஒரு வண்ணத்துப்பூச்சி!



**பள்ளிக்குச்** சென்ற பிள்ளைகள் திரும்பி வரும்போது பெற்றோர் காணாமல் போயிருப்பார்கள். கடைக்குச் சென்ற மனைவி திரும்பி வரும்போது வீடு பூட்டியிருக்கும். பெற்றோரைத் தேடி குழந்தைகள் அழும் ஓலம் என்னவோ செய்கிறது. வீதியில் விழும் பிணங்களை அகற்றுவதே பெரிய வேலையாக இருக்கிறது என்கிறார்கள். சே... போர் எவ்வளவு கொடூரமானது? பூகோளமே போரில் ஈடுபட்டிருக்கிறதே... தன் நாட்டு மக்களையே அழித்தொழிக்கும் கொடூரத்தைப் போரில் மட்டுமே காண முடியும். போர் இரக்கமற்றது. அதுக்கு நியாய, தர்மங்கள் கிடையாது. போரால் யாருக்கும் எந்தப் பலனும் ஏற்படப் போவதில்லை.

நாங்கள் செய்த பாவம் என்ன? யூதர்களாகப் பிறந்தது எங்கள் குற்றமா? வேறு மதத்தைச் சார்ந்தவன் தவறு செய்தால் அது அவனுடைய தவறாக மட்டும் பார்க்கப்படுகிறது. ஒரு யூதன் தவறு செய்தால் ஒட்டுமொத்த யூதர்களுமே தவறு செய்தவர்களாகி விடுகிறார்கள். ஒருவேளை யூதர்களுக்கு அதிகாரம் கிடைக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்... இலட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவித்த ஹிட்லரைக்கூட நாங்கள் மன்னித்துவிடுவோம்!

தலைவர்கள், அரசியல்வாதிகள், பெருமுதலா–ளிகள் மட்டும் இந்தப் போருக்குப் பொறுப்பாளர்கள் இல்லை... மக்களுக்கும் இதில் பங்கிருக்கிறது. இல்லை என்றால் இந்தப் போருக்கு எதிராக மக்கள் புரட்சி செய்திருக்க மாட்டார்களா? மனிதனுக்குள் அழித்தொழிக்கக்கூடிய கொடிய மனப்பான்மை இருக்கும் வரை, உலகில் அனைத்து அழகான விஷயங்களும் அழிந்துகொண்டேதான் இருக்கும். என்னைப் பற்றிக் கொஞ்சம் சொல்கிறேன். டயரி எழுத ஆரம்பித்தபோது இருந்த ஆன் வேறு... இன்று இருக்கும் ஆன் வேறு. அடிக்கடி அம்மாவிடம் சண்டை போடும் ஆன் இப்போது இல்லை.

என்னுடைய உடல் வளர்ந்ததைப் போலவே என் சிந்தனைகளும் வளர்ந்திருப்பதை உணர முடிகிறது. அரசியலில் ஆர்வம் இருக்கிறது. நிறையப் படிக்கிறேன். நிறைய தெரிந்துகொள்கிறேன். பலமும் துணிச்சலும் உள்ள பெண்ணாக மாறியிருக்கிறேன். எல்லோரையும் புரிந்துகொள்கிறேன்.

எதிர்காலத்தில் நான் என்னவாக வர விரும்புகிறேன்? மற்றப் பெண்களைப் போல 'பிறந்தோம் ஏதோ வாழ்ந்தோம்' என்று என்னால் இருக்க முடியாது. ஒருநாளும் மறந்து போகக்கூடிய ஒரு சாதாரணப் பெண்ணாக நான் வாழ்ந்து முடிக்க விரும்பவில்லை. எதிர்காலத்தில் குடும்ப வாழ்க்கைக்கு அப்பால் நான் எதையாவது செய்யவேண்டும்.

எழுத்தாளர்! ஆம்... நான் நிறைய சிறுகதைகள் எழுதி வைத்திருக்கிறேன். ஒரு நாவல் எழுதும் முயற்சியிலும் இறங்கியிருக்கிறேன். 2 ஆண்டுகளாக நான் கிட்டியிடம் டயரியில் பகிர்ந்துகொண்ட விஷயங்களை ஒரு புத்தகமாகக் கொண்டுவரும் எண்ணத்தில் இருக்கிறேன். இறந்த பிறகும் வாழ வேண்டும் என்றால் ஓர் எழுத்தாளரால்தான் சாத்தியம்! பத்திரிகையாளர் ஆகவும் ஆசை. எழுத்து மூலம் அனைத்தையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வரமுடியும் என்று நம்புகிறேன். எழுத்தின் மூலம் என் துயரங்கள் மறைவது போல, உலகத்தின் துயரத்தை என்னால் துடைக்க முடியும். இது சாத்தியமா?

ஐயோ... இந்த நாள் மிகவும் துயரமானது. யாரோ எங்களைக் காட்டிக் கொடுத்துவிட்டனர். ஆண்கள் ஒரு வண்டியிலும் பெண்கள் ஒரு வண்டியிலும் ஏற்றப்பட்டோம். யாரும் யாருக்கும் ஆறுதல் சொல்லும் நிலையில் இல்லை. எங்களை இந்த நிலைக்குத் தள்ளியது யார்? மனிதர்களில் சிலர் உயர்ந்தவர்கள், சிலர் தாழ்ந்தவர்கள் என்று பிரித்தது யார்? யூதர்களின் பொறுமைதான் அவர்களின் பலவீனம். இந்தப் பலவீனத்தால் பலசாலிகள் எளிதில் வென்றுவிட்டனர். பாதிக்கப்பட்டவர்களை எட்டியிருந்து பார்த்த நான், இன்று பாதிக்கப்பட்டவளாக வதைமுகாமுக்குச் செல்கிறேன். வதைமுகாம் பற்றிச் சொல்ல எனக்கு இப்போது திடம் இல்லை. டைபஸ் என்ற நோய் முகாமில் பரவி வருகிறது. வரிசையாக மரணம் ஒவ்வொருவரையும் ஆட்கொள்கிறது. என் அக்கா இறந்த ஒரு மாதத்தில் நான் மடிந்து போனேன். என் அம்மாவும் இறந்து போனார். ஆண்கள் சிறையில் பீட்டரும் இறந்து போனான்...என் அப்பா?

பல இலட்சம் உயிர்களைக் குடித்த பிறகு, இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது. தப்பிப் பிழைத்தவர்களில் என் அன்பு அப்பாவும் ஒருவர். வதைமுகாமிலிருந்து வெளியே வந்தவர் எங்களைப் பற்றிய செய்திகளை அறிந்துகொண்டார். நாங்கள் வசித்த இரகசிய அறைக்கு வந்தார். மகிழ்ச்சியான குடும்பம் வசித்த அந்த இடத்தில் இப்போது வெறுமை குடிகொண்டிருந்தது.

எங்கள் குடும்ப நண்பர் மையீப் கையிஸ் அப்பாவைச் சந்தித்தார். நாங்கள் வதைமுகாம்களுக்குச் சென்ற பிறகு, எங்கள் அறைக்கு வந்து, என் டயரியை எடுத்துப் பத்திரப்படுத்தி வைத்திருந்தார். என் அப்பாவிடம் டயரியை ஒப்படைத்தார். என் டயரியைப் படித்த அப்பாவால், ஒரு தகப்பனாக தன் துயரத்தைத் தாங்கமுடியவில்லை.

தன் மகளின் எழுத்தாற்றலும் நாஜி படைகள் நிகழ்த்திய கொடூரங்களும் வெளியுலகுக்குத் தெரிய வேண்டும் என்று விரும்பினார். புத்தகமாகக் கொண்டுவந்தார். 1945... 15 வயதில் நான் இறந்து போனேன். ஆனால், இன்று உலகம் முழுவதும் 60க்கும் அதிக மொழிகளில் என்னுடைய புத்தகத்தின் மூலம் வாழ்ந்து வருகிறேன். உலகம் முழுவதும் அதிகம் விற்கப்பட்ட 10 நூல்களில் என் புத்தகமும் ஒன்று. நான் நினைத்தது போல சிறந்த எழுத்தாளராக வேண்டும் என்ற என் கனவு நிறைவேறிவிட்டது...

தோழிகளே ஒரு நிமிடம்... எழுத்தாளர் என்பது மட்டுமே என் கனவு அல்ல். நான் சொல்ல வந்த செய்தி, இனத்தின் பெயரால் எந்த ஒரு மனிதரும் இனி சாகக்கூடாது... எந்தக் காரணத்துக்காகவும் இந்தப் பூமியில் போர் நிகழக்கூடாது என்பதுதான். இனத்தின் பெயரால் உயிரை இழந்த கடைசி மனிதர்கள் நாங்களாக இருக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால், இன்றும் இனத்தின் பெயரால் படுகொலை களும் அழித்தொழிப்புகளும் தொடர்ந்த வண்ணம்தான் உள்ளன. என்னைப் போல எத்தனையோ இலட்சம் பேர் பலியாகிக்கொண்டுதான் இருக்கிறார்கள். சாத்தியமாகாத கனவா என்னுடையது? ஹிட்லர்கள் ஒருபோதும் மரிப்பதில்லையோ?

(முற்றும்)



# லேடிஸ் ஸ்பெஷல்

பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

# தாய், சேய் நலன் தரும் யோகா



**கர்ப்ப** காலத்தில் கர்ப்பிணி பெண்கள் யோகா செய்வதன் மூலம் தாய்க்கும் சேய்க்கும் உடல் ரீதியாக பல நன்மைகள் ஏற்படுத்துகிறது.

கர்ப்ப காலத்தில் கர்ப்பிணிகள் யோகா செய்வதால் ரத்த ஓட்ம் அதிகரிக்கிறது மேலும் கர்ப்ப காலத்தில் கர்ப்பிணி பெண்களுக்கு ஏற்படும் நீர்பிடிமானம் மற்றும் திரவக்கோர்வை பிரச்சனைகளையும் தீர்க்கிறது.

யோகா தொடர்ந்து செய்துவந்தால் மன கவலை, மனஅழுத்தம் குறையும். யோகா செய்யும்போது நரம்பு மண்டலம் இயக்கப்படுகிறது. இந்த இயக்கத்தின்போது தூக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நரம்பானது தூக்கத்தை தூண்டுகிறது. இதனால் பெண்கள் நிம்மதியான தூக்கத்தை பெறமுடியும்.

உடலையும் பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்கு சிறந்த நிவாரணியாக செயல்படுவது யோகா. இது உடலில் இருக்கும் நச்சுக்களை வெற்றிகரமாக வெளியேற்றி செரிமானத்தை அதிகப்படுத்துகிறது. மேலும் யோகா தசைகள் மற்றும் மூட்டுகளின் வலிமையை அதிகப்படுகிறது.

பொதுவாக கர்ப்ப காலத்தில் அனைத்து கர்ப்பிணிகளையும் தாக்குவது உயர் ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் இவை நம்மை நெருங்காமல் இருக்க யோகா பயிற்சி செய்துவரலாம். ஏனெனில் கர்ப்ப காலத்தில் கர்பிணிகளுக்கு ஏற்படும் சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம் ஆகியவற்றை யோகா தடுக்கிறது.

யோகா நரம்பு மண்டலத்தை தூண்டுவதோடு மட்டுமல்லாமல் உடல் நலம், மனநலம், மூச்சு பயிற்சி, ஹோர்மோன்கள் மற்றும் உணர்ச்சிகளை கட்டுபடுத்துதல் போன்றவற்றிற்கும் யோகா உதவுகிறது. எல்லா கர்ப்பிணி பெண்களுக்கு கர்ப்ப காலத்தில் ஏற்படும் முதுகு வலியை எளிதாக அறிந்து கொள்ளமுடியும். இந்த பிரச்சினைக்கு யோகா பயிற்சி சிறந்த நிவார்ணியாக இருக்கிறது.

யோகா பயிற்சிமூலம் இடுப்பு மற்றும் கால் பகுதிகள், முழுவதும் பல தசைநார்கள் இயக்கப்படுகிறது.. காலை நேரத்தில் மூச்சு பயிற்சி செய்தால் குமட்டல், காலை நோய் போன்றவை குறையும். யோகா வழக்கமான நடைமுறையில் பிரசவ வலியைத் தளர்த்துகிறது.

அதாவது யோகா செய்து வருவதன் மூலம் பிரசவத்தின்போது வயிற்று பகுதியில் தசைளை உறுதிப்படுத்தி குழந்தைகளை எளிய முறையில் குழந்தையை வெளியே வரும் வேலையை செய்கிறது..

# தனியாகப் பயணம் செய்யும் பெண்களுக்கு அறிவுரை



**நீங்கள்** ஒரு இடத்துக்கு முதல்முறையாகப் போகிறீர்கள் என்றால், நன்றாக அலசி ஆராய்ந்த பிறகு ஹோட்டலை தேர்வுசெய்வது நல்லது. முன்பதிவு செய்துவிடுங்கள். புதிய இடத்தில் போய் தடுமாறுவதை அது தடுக்கும். அங்கே போய் தங்கியபிறகு, பக்கத்திலேயே அதைவிட நல்ல ஓட்டல் இருக்கிறது என்றால் பின்பு மாறிக்கொள்ளலாம். பெரிய நிறுவனங்கள் மட்டும் உள்ள ஏரியாவில் ஓட்டலை தேர்வு செய்யாதீர்கள். அவை இரவில் வெறிச்சோடிப் போய்விடும். பரபரப்பான நடமாட்டம் உள்ள பகுதியில் அமைந்துள்ள தங்கும் விடுதி நல்லது.

நீங்கள் செல்லும் இடத்தின் கலாசாரத்துக்குப் பொருந்துமாறு உடையணிவது முக்கியம். நீங்கள் விரும்பிய விதத்தில் உடையணிய உங்களுக்கு உரிமை இருக்கிறதுதான். ஆனால் உங்களுக்கு ஒத்துப்போகும்வகையில் உடையணிவது, அங்குள்ள மக்களுடன் இயல்பாகப் பழக உங்களுக்கு உதவும். தேவையற்ற கவனம் உங்கள் மீது படிவதையும் தடுக்கும்.

சுற்றிப் பார்க்க வெளியே புறப்பட்டுச் செல்லும் முன்பு, குறிப்பிட்ட இடத்தின் வரை படத்தைப் பர்ர்த்து இடங்களை மனதில் பதித்துக்கொள்ளுங்கள். நீங்கள் ஒரு சுற்றுலாப் பயணி என்று தெரியாமல் இருக்க, கையடக்க வழிகாட்டி ஏட்டைப் பயன்படுத்துங்கள். உள்ளூரில் எந்தெந்தப் பகுதிகள் அபாயமானவை, தவிர்க்க வேண்டியவை என்று நீங்கள் தங்கியிருக்கும் ஓட்டலின் பெண் ஊழியர் ஒருவரிடம் நைசாக கேட்டால் கூறிவிடுவார்.

இரவில் வெளியே செல்கிறீர்கள் என்றால் கூடுதல் கவனத்தோடு இருக்க வேண்டும். இரவில் அபாயம் அதிகம். வழிதவறிவிட்டாலும் தங்கும் இடத்துக்குத் திரும்புவது க்‌டமாகிவிடும்.

பெண்கள் தனியாக செல்வது த்ரில்லிங்காக இருக்கும்தான். ஆனால் சற்றுத் தொலைதூரமான இடங்களுக்கு செல்கையில் ஒரு துணை இருந்தால் நல்லது. ஏதாவது எதிர்பாராத சூழலில் மாட்டிக்கொண்டால் கூட இரண்டு பேர் என்றால் சமாளிக்கலாமே

# முகம் பொலிவாக..



**வளரும்** இளம்பெண்கள் இளைஞர்கள் சந்திக்கும் மிக முக்கியமான பிரச்சனைகளில் பருத்தொல்லையும் ஒன்றாகும். பருத்தொல்லையில் இருந்து காத்துக்கொள்ள பல வகையான ஆயின்மெண்ட்டுகளை பயன்படுத்துகிறார்கள். ஆனால் இவைகளில் பெரும்பாலானவற்றில் ரசாயனப் பொருட்கள் அதிகளவில் கலந்து இருக்கின்றன.

இதை தவிர்க்க இயற்கை மருத்துவத்தில் மிக எளிமையான வழிமுறைகள் கூறப்பட்டுள்ளது. ஆசியா ஆப்பிரிக்கா மற்றும் அமெரிக்காவில் உள்ள வனப் பிரதேசங்களில் ஒரு வகையான முள்ளங்கி கிடைக்கிறது. இதை குதிரை முள்ளங்கி, காட்டு முள்ளங்கி, மலை முள்ளங்கி என்றும் கூறுவார்கள்.

நமது காய்கறிகளில் முள்ளங்கி போன்ற வடிவத்திலேயே இவையும் இருப்பதால் இதை காட்டு முள்ளங்கி என்று அழைக்கிறார்கள். இதை அரைத்து சாறு பிழிந்து மென்மை அடையும் வறண்ட சருமம் மிருதுவாகும். இந்த கிழங்கை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி பால் விட்டு கொதிக்க வைத்து பசை போல் செய்து முகத்திற்கு பூசி வரலாம்.

இதனால் முகம் வசீகரம் அடையும். எண்ணெய் வழியும் முகம் பலரின் தீராத குறைபாடாக உள்ளது. காலை வேளையில் குளித்து மேக்கப் போட்டுக்கொண்டு வெளியில் செல்லும் சில பெண்களுக்கு அடுத்த 'அரை மணி நேரத்திற்க்குள் எண்ணெய் பிசுபிசுப்பு முகத்தில் தோன்றி அழகை குறைத்துவிடும்.

நமது முகத்தில் உள்ள சில செல்களில் அதிகப்படியான எண்ணெய் சுரப்பது தான் இதற்கு முக்கியமான காரணமாகும். இதை குணப்படுத்த காட்டு முள்ளங்கி மிகவும் உதவுகிறது. காட்டு முள்ளங்கியை சிறுசிறு துண்டுகளாக்கி பாலில் வேகவைத்து சிறிதளவு எலுமிச்சம் பழச்சாற்றையும் கலந்து பசை போல் செய்துகொள்ளலாம்.

இதனை முகத்தில் தினசரி காலை மாலை வேளைகளில் பூசி வந்தால் முகம் பளிச்சென்று இருக்கும். எண்ணெயின் பிசுபிசுப்புத்தன்மை வராது. இதை முகத்திற்கு தொடர்ந்து பூசி ஒரு மணி நேரம் விட்டு வெதுவெதுப்பான நீரில் கழுவி வந்தால் பருத்தொல்லைகள் கரும்புள்ளிகள் வடுக்கள் மற்றும் மருக்களும் மறைந்து விடும். மேலை நாடுகளில் மிகச்சிறந்த பேஸ் கீரிமாகப் பயன்படுத்துகிறார்கள்.

# தொப்பை குறைய கொள்ளு சாப்பிடுங்கள்!



**கொள்ளு** உடலில் இருக்கும் கொழுப்பு - ஊளைச் சதையைக் குறைப்பதோடு உடலுக்கு அதிக வலுவைக் கொடுக்கக் கூடியது. கொள்ளுப் பருப்பை ஊற வைத்து.அந்த நீரை அருந்தினால் உடலில் உள்ள கெட்ட நீர் வெளியேறிவிடும்.அதேபோல் கொழுப்புத் தன்மை எனப்படும் ஊளைச் சதையை குறைக்கும் சக்தியும் கொள்ளுப் பருப்புக்கு உண்டு.

மேலும் இதில் அதிகளவு மாவுச் சத்து உள்ளது. கொள்ளுப் பருப்பை ஊற வைத்தும் சாப்பிடலாம் வறுத்தும் சாப்பிடலாம். குழந்தைகளுக்கு சளி பிடித்து இருந்தால் கொள்ளு சூப் வைத்து குடுத்துப்பாருங்கள். சளி காணாமல் போயிவிடும் என்கிறார்கள்.அப்படி ஒரு அருமையான மருத்துவ குணம் இந்த கொள்ளுக்கு உண்டு.

உங்கள் வீட்டில் உள்ள குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை அனைவரும் அருந்தலாமாம். குளிர்காலத்தில் தான் அதிகம் சளி பிடிக்கும் அந்த காலங்களில் இந்த சூப் குடித்தால் சளி பிடிக்காதாம். சாப்பாட்டில் அடிக்கடி கொள்ளு சேர்த்துக் கொள்வது உடல் எடையை குறைக்கும்.

அதைவிட ராத்திரி ஒரு கைப்பிடி கொள்ளு எடுத்து தண்ணீரில் ஊற வைத்து காலையில் எழுந்தவுடன் முதலில் அதை சாப்பிட்டு விடுங்கள். இது நிச்சயம் எடையை குறைக்கும் என்கிறார்கள்.

# பட்டாணி பொரியல்

பட்டாணி: கால் கிலோ,

பெரிய வெங்காயம்: 2, வரமிளகாய்: 2, சீரகம் : அரை டீஸ்பூன், கடுகு: கால் டீஸ்பூன், உளுத்தம்பருப்பு :2 டீஸ்பூன், கறிவேப்பிலை: சிறிதளவு, மல்லித்தழை: சிறிதளவு, எண்ணெய்: கால் கப், உப்பு : தேவையான அளவு

## செய்முறை

பட்டாணியை வேகவிட்டு உப்புப் போட்டு இறக்கி, தண்ணீரை வடிக்கவும். மிளகாயுடன் சீரகத்தையும், ஒரு பெரிய வெங்காயத்தை நறுக்கிச் சேர்த்து அரைக்கவும்.

வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை தாளித்து மீதமிருக்கும் இன்னொரு வெங்காயத்தையும் நறுக்கிச் சேர்த்து வதக்கவும். பட்டாணியையும், உப்பையும், அரைத்த



மசாலாவையும் பிரட்டி இறக்கி, மல்லித்தழை சேர்க்கவும்.

பட்டர் பீன்ஸிலும் இதே முறையில் பொரியல் செய்யலாம். நன்றாக இருக்கும்.

# பரிசு 1000/- ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-343

கேள்வி : உடலில் உள்ள கெட்ட நீர் வெளியேறுவதற்கு என்ன செய்ய வேண்டும்?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:-03.12.2012

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 343
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 341 இற்கான விடை :- வெலன்டினா டெரஸ்கோவா

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:- க.சசிகலா, பத்தர் கேணி வீதி, வேம்படி, காரைநகர்.

343

பெயர் : ........................

முகவரி : ........................

தே.அ. அட்டை இல : ........................

விடை : ........................

கையொப்பம் : ........................

# சிவில் பாதுகாப்பு குழுக்களின் பயன்பாடுகள்

வாகரை வாணி



**நாட்டின்** மூலை முடுக்குகளில் இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுக்க வேண்டுமாக இருந்தால் எந்நேரமும் உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கும் சிவில் பாதுகாப்பு இயங்கியல் வழிமுறை ஒன்று கட்டாயம் தேவை.

ஆனால், இத்தகைய ஒரு பொறி முறையைக் கையாள்வதுதான் கடந்த காலங்களில் நடைமுறையில் சிக்கலான ஒரு விசயமாக இருந்து வந்திருக்கின்றது. இதற்குக் காரணம் நாட்டில் நிலவிய பயங்கரவாத சூழ் நிலையினால் பொலிஸாருக்கும் சிவில் சமூகத்துக்கும் இடையிலான உறவு அந்நியப்பட்டு நின்றதாகும்.

தென்னிலங்கையிலே ஜே.வி.பி யினர் மேற்கொண்டு வந்த ஆயுத வன்முறைகளால் மக்கள் அடங்கி ஒடுங்கிப் போய் இருந்தார்கள். அவ்வேளையில் பொலிஸார் பொது மக்களை சந்தேகக் கண்கொண்டு பார்க்கவேண்டியதாயிற்று. கிட்டத்தட்ட அதே நிலைமைதான் வடக்கு கிழக்கில் சுமார் மூன்று தசாப்தங்களாக பயங்கரவாதம் கோலோச்சியிருந்த போதும் ஏற்பட்டிருந்தது.

இங்கும் பொது மக்கள் தமது உயிருக்கு அஞ்சி பாதுகாப்புத் தரப்பினரிடம் அந்நியப் பட்டே நின்றார்கள்.

இந்தக் காலப்பகுதிதான் வன்முறையாளர்களுக்கு ஒரு பொன்னான காலப்பகுதியாகவும் அதேவேளை சிவில் சமூகத்துக்கு இருள் நிறைந்த ஒரு காலப்பகுதியாகவும் இருந்து வந்திருக்கின்றது.

இப்பொழுது தென்னிலங்கையிலும் வடக்கு கிழக்கிலும் ஆயுத வன்முறைகளும் அராஜக வழிமுறைகளும் அமைப்பு ரீதியாக முன்கொண்டு செல்லப்படுவது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆயினும், நாட்டின் நாலாபுறத்திலும் ஆங்காங்கே மூலை முடுக்குகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இடம் பெறும் இயல்பு வாழ்க்கையைக் குழப்பக் கூடிய குற்றச் செயல்களையும் முடிவுக்குக் கொண்டுவர வேண்டியுள்ளது. இது சிவில் சமூகம் மீண்டும் விழித்தெழ வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றது.

இத்தகைய அச்சந்தரும் சூழ் நிலைகளை மீண்டும் தோன்ற விடாமல் பாதுகாப்பதற்கு பாதுகாப்புத் தரப்பினரால் மாத்திரம் முடியாது என்பதால், சிவில் சமூகத்தின் உதவியைப் பொலிசார் நாடி நிற்கின்றார்கள்.

சிவில் பாதுகாப்பு சம்பந்தமான முன்னேற்றமும் அதன் பலாபலன்களும் என்ற தொனிப் பொருளிலான கருத்தரங்குகள் தற்போது கிழக்கு மாகாணம் முழுவதும் நடத்தப்பட்டு வருகின்றன. கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர அவர்களின் தலைமையில் இந்தக் கூட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்தக் கருத்தரங்குகளில் ஊர்களில் அமைக்கப்பட்டுள்ள சகல சிவில் பாதுகாப்புக் குழுக்கள் பற்றிய பயன்பாடுகள் ஆராயப் படுவதோடு. எதிர்காலத்தில் சிவில் சமூகமும் பொலிசாரும் இணைந்து எவ்வாறு பாதுகாப்பானதொரு சூழலை அமைக்கலாம் என்பது பற்றியும் .விளக்கமளிக்கப்படுகிறது.

சட்டம், ஒழுங்கை நிலைநாட்டி குற்றச் செயல்களையும் மக்களின் இயல்பு வாழ்க்கைக்குக் குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கைகளையும் தடுப்பதற்காக சிவில் சமூகமும் பொலிசாரும் பரஸ்பரம் இணைந்து செயலாற்ற வேண்டியதன் முக்கியத்துவமும் வலியுறுத்தப்படுகிறது.

இந்தக் கருத்தரங்குகளில் சிவில் சமூகப் பிரதிநிதிகள், பிரதேச செயலாளர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், அரச உயரதிகாரிகள், அரசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், சமயப் பெரியார்கள், பொலிஸ் உயர் மட்ட அதிகாரிகள் எனப் பல தரப்பினரும் கலந்து கொள்கின்றனர்.

நாட்டில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டது போல சிறுவர், பெண்கள் துஷ்பிரயோகம், அச்சுறுத்தல், கொலை, கொள்ளை, வடிசாராயம், கசிப்பு மற்றும் இன்னோரன்ன சட்ட விரோத செயற்பாடுகள் முற்று முழுவதுமாக ஒழிக்கப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் சிவில் சமூகம் தற்போது பாதுகாப்புத் தரப்பினருடன் இணங்கிச் செயற் படுவதனை சிவில் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட கருத்தரங்குகளுக்கு வரும் பெரும் எண்ணிக்கையிலானோரைக் கொண்டு ஊகிக்க முடிகின்றது.

தற்போது அமைக்கப்பட்டு வருகின்ற கிராமிய பாதுகாப்புக் குழுக்கள் முக்கியத்துவம் மிக்கவையாக உள்ளன. இந்தக் குழுக்களில் சமூகத்தின் பல்வேறு படித்தரங்களில் உள்ளவர்கள் சேர்ந்து பணியாற்ற ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது.

அம்பாறை, மட்டக்களப்பு, கந்தளாய் உள்ளிட்ட கிழக்கு மாகாணத்தில் 1085 கிராம சேவகர் பிரிவுகளிலும் 27125 பேரைக் கொண்டு இந்த சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்தார்.

கிராமிய பாதுகாப்பு குழு, பிரதான குழு பொலிஸ் பாதுகாப்பு குழு, பிரதேச ஆலோசனைக் குழு, மாவட்ட சிவில் பாதுகாப்பு குழு என வகைப்படுத்தப்பட்டு இவர்கள் ஒட்டுமொத்த சிவில் சமூகத்தின் பாதுகாப்பையும் பலப்படுத்தும் வண்ணம் செயற்படுவார்கள் என்றும் பூஜித ஜெயசுந்தர அவர்கள் விளக்கமளித்தார்.

தமது பிரதேசத்தின் பாதுகாப்புக்கு மேலதிகமாக சிவில் பாதுகாப்புக் குழுக்கள் தேசிய பாதுகாப்பையும் உறுதி.செய்யும் கடப்பாடு உடையவர்கள் என்றும் குற்றச் செயல்களைத் தடுத்து, இடம்பெற்ற குற்றச் செயல்கள் சம்பந்தமாக விசாரணை செய்வதோடு, ஊழல் ஒழிப்பிலும் கவனம் செலுத்த வேண்டும். இதனுடன் இணைந்ததாக கல்வி, மத, விளையாட்டு, பொது நலன்புரி விடயங்களிலும் கவனமெடுத்துச் செயற்படுத்த வேண்டும் என்றும் கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர அவர்கள் வலியுறுத்துகிறார்.

சிவில் பாதுகாப்புக் குழுக்கள் சரியாகச் செயற்படாத காரணத்தினாலேயே சமீப சில காலங்களுக்கு முன்னர் 'கிறீஸ் மனிதன்' போன்ற சலசலப்புக்கள் தோன்றி நாட்டின் நாலா புறங்களிலும் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு மக்கள் மனதில் அச்சமும் பீதியும் குடி கொண்டிருந்தது. மக்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கியிருந்தார்கள் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபாய ராஜபக்ஷ அவர்கள் சிவில் பாதுகாப்புக் கமிட்டிகளை கொழும்பில் ஆரம்பித்து வைக்கும்போது முன்னர் தெரிவித்திருந்தார்.


தினந்தோறும் வெளிவருகிறது

விலை 10/=

தினமுரசு நாளிதழ்

தினந்தோறும்
கல்விமுரசு இணைப்பு

- கனதிமிக்க கட்டுரைகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- குட்டிக் கதைகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்" - "மெய்தான் பாருங்கோ" "பதிவிறக்கப் பெட்டகம்"

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில்
மாணவர்களுக்கான
மாதிரி வினாத்தாள்கள் – விடைகள்
ஒவ்வொரு நாளும்
தினமுரசில் வெளியாகிறது.

தினமுரசு நாளிதழ்
ரூ. 10/= மட்டுமே

இப்போது நீங்கள் அறிய விரும்பும்
அன்றாடச் செய்திகள் அனைத்தையும்
பத்தே ரூபா
கொடுத்து படித்துக்கொள்ள முடியும்



ஜோசப் கிருஷ்ணா

# விளையாட்டு



# இதுவே வேலையா?

**2011** உலகக் கிண்ண அரை இறுதிப் போட்டியில் மொஹாலியில் சந்தித்துக் கொண்ட நாடுகள் இந்தியாவும் பாகிஸ்தானும். இதில் இந்தியா 29 ரன்களால் வெற்றி கண்டு, இறுதிப் போட்டியில் இலங்கையை வென்று உலகக் கிண்ணத்தை இரண்டாவது முறை கைப்பற்றியது வரலாறு. இப்போது முன் கூறிய அரை இறுதிப் போட்டி ஆட்ட நிர்ணயத்துக்கு உட்பட்டது என்று இனி வெளிவரப்பட்டுள்ளதை இங்கிலாந்து ஊடகம் ஒன்று வெளியிட அதனை இந்திய கிரிக்கெட் சபை வன்மையாக மறுத்துள்ளதோடு அலட்டல் என்றும் சாடியுள்ளது.

இன்னொருபுறம் 2011 இல் காடிப் நகரில் நடைபெற்ற இங்கிலாந்து, இலங்கைக்கெதிரான டெஸ்ட் போட்டியில் இலங்கை பரிதாபமாகத் தோற்கவே அதுவும் ஆட்ட நிர்ணயத்திற்கு உட்பட்டதென்று குற்றம் சாட்டப்படுகின்றது. அந்தக் கதை பின்வருமாறு செல்கிறது. நான்காம் நாள் முடிவில் இங்கிலாந்து 496/5 என்று ஆட்டத்தை நிறுத்தியது. முன்னதாக இலங்கை 400 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்திருந்தது. இந்நிலையில் கிரிக்கெட் புரிந்தவர்களுக்கு ஒன்று புரியும். ஆட்டம் சமநிலையில் முடிவடைவதைத் தவிர, வேறு எதுவும் சாத்தியமில்லை என்பதே அது. ஆனால் இரண்டாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய இலங்கை இறுதி நாளில் 24.4 ஓவர்களில் 82 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து ஒரு இனிங்ஸ் மற்றும் 14 ஓட்டங்களால் இங்கிலாந்திடம் தோற்றுவிட்டது. இது எதிர்பார்க்க முடியாத படுதோல்விதான். ஆனால் மேற் கூறப்பட்ட இரண்டு ஆட்டங்களையும் முரண் திசையில் கொண்டு செல்ல முயற்சிப்பது மேற்குலக எழுத்தாளர்கள் முயலுக்கு மூன்று கால் என்றால், அதுவே சரி என்று எல்லோரும் ஏற்றுத்தான் ஆக வேண்டும் என்பது போல் தெரிகிறது. ஆனால் சுய புத்தியுள்ளவர்கள் அப்படியெல்லாம் முட்டாள்களாக இருக்கமாட்டார்கள் என்பதை அவர்கள் புரிந்து கொண்டால் சரி.


# சந்தேகம் தீர்ந்ததா?

**ஆர்ஜென்ரீனா** மற்றும் பார்சலோனா உதைபந்தாட்ட அணி வீரர் லயனல் மெஸ்ஸி இன்னொரு மைல் கல்லை எட்டிப்பிடித்திருக்கிறார். அதன் மூலம் ஏ.பி குளோபல் தரப்படுத்தலில் முதல் பத்து இடங்களில் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளார். இதற்குக் காரணமாக அமைந்தது பிரேஸில் ஜாம்பவான் ஐம்பத்து நான்கு வருடங்களுக்கு முன் ஏற்படுத்திய ஒரு வருட காலத்தில் அடித்து அதி கூடிய கோல் எண்ணிக்கையான எழுபத்தைந்து கோல்களைக் கடந்து சாதனை படைத்ததுதான். ஆனால், ஒரு வருடத்தில் அதி கூடிய கோல்கள் அடித்தவர் என்ற சாதனையை வைத்திருப்பவர் ஜேர்மனியின் கேர்ட் முல்லா. இவர் 1972 இல் 85 கோல்கள் அடித்திருந்தார். இதனை முறியடிக்க லயனல் மெஸ்ஸிக்குத் தேவை. இன்னும் உள்ள பத்து ஆட்டங்களில் மெஸ்ஸி பத்து கோல்கள் அடித்து முல்லரின் சாதனையையும் முறியடிப்பாரா என்பதே இப்போதுள்ள ஆர்வத்துக்குரிய விடயமாகியுள்ளது.

இப்பொழுது மெஸ்ஸிக்கு விருது கொடுத்துள்ள அமைப்பு உலக உதைபந்தாட்ட ஊடகவிலாளர்களைக் கொண்ட அமைப்பாகும். இதன்படி மெஸ்ஸி 139 புள்ளிகளும், மெக்சிக்கோ மற்றும் மன்செஸ்ரர் ய்னைட்டட் அணியின் சேவி ஹேறர்ணன்டஸ் 98 புள்ளிகள், பெற்று இரண்டாம் இடமும், ஜுவென்ரஸ் வீரர் பேபியோ குவாக்லியா ரிலா 67 புள்ளிகள் பெற்று மூன்றாம் இடமும் பெற்றுள்ளார்கள். இந்த வரிசையில் ரியல் மெட்ரிட்டின் கிறிஸ்ரியானோ றொனால்டோ ஏழாவது இடமே பெற முடிந்திருக்கிறது.

மெஸ்ஸியின் சாதனை பற்றி விமர்சகர்கள் கருத்துக் கூறுகையில்; உலகின் மிகச் சிறந்த உதைபந்தாட்ட வீரர் யார் என்ற வாதப்பிரதிவாதங்களுக்கு பீலேயின் சாதனையை மெஸ்ஸி முறியடித்தமை சரியான பதிலாக அமைந்திருக்கிறது என்று கூறியுள்ளார்கள்.





# செய்வதெல்லாம் சாதனை

**டெஸ்ட்** கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பித்தது 1877 இல் இந்த முதல் டெஸ்ட் போட்டியில் கலந்து கொண்ட நாடுகள் இங்கிலாந்து எதிர் அவுஸ்திரேலியா. இதன் பின் டெஸ்ட் வரலாற்றில் எத்தனை எத்தனையோ சாதனைகள் படைக்கப்பட்டன. அவற்றுள் பல- காலப் போக்கில் முறியடிக்கப்படவும் செய்தன. ஆனால், 135 வருட டெஸ்ட் வரலாற்றில் புதியதொரு சாதனை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.அது பங்களாதேஷ் எதிர் மேற்கு இந்தியத் தீவுகள் அணிக்கு இடையிலான போட்டியில் நடைபெற்றுள்ளது.

அதாவது இதுவரையில் ஆயிரக்கணக்கான சிக்ஸர்கள் டெஸ்ட் போட்டிகளில் பெறப்பட்டுள்ளன. ஆனால் ஒரு டெஸ்ட் ஆட்டத்தின் முதல் பந்திலேயே சிக்ஸர் அடித்ததாக இதுவரை இல்லை. இந்த பங்களாதேஷ் மே.இந்தியத் தீவுகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டியில், கிறிஸ் கெய்ல் முதல் பந்திலேயே சிக்சர் அடித்துச் சாதனை புரிந்துள்ளார். இவருக்குப் பந்து வீசியவர் புதுமுக அறிமுகம். சொஹாரக் காஸி இவரது முதல் ஓவரில் பதினெட்டு ஓட்டங்களைக் கொடுத்திருந்தார் ஆனாலும் கெய்ல் இருபத்திரண்டு ஓட்டங்கள் எடுத்திருந்த போது இவரது பந்திலேயே பிடிகொடுத்து ஆட்டம் இழந்துள்ளார். இது காஸிக்கு மன ஆறுதல்தான்.

1877 இல் இருந்து 2012 வரை நடைபெறாத இந்த விடயத்தை நடத்திக் காட்டிய கெயிலின் சாதனை எவ்வளவு காலம் நீடிக்கும் என்று கூற முடியாது. ஏனெனில் ஒரு நாள் போட்டிகள் மற்றும் இருபதுக்கு இருபது போட்டிகள் ஆக்கிரமித்துள்ள இந்தக் காலத்தில் கெய்லைப் போல சிக்ஸர் அடிக்க இப்போது பலர் கங்கணம் கட்டி இருப்பார்கள்.



# தவறினால் தப்பில்லை

**அவுஸ்திரேலிய** 'இருபதுக்கு இருபது பிக்கேஷ் தொடங்கவுள்ள நிலையில் அதில் கலந்து கொள்ளும் பாகிஸ்தான் வீரர்களுக்குச் சங்கடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டு இருபது போட்டிகள் மூன்று ஒரு நாள் போட்டிகள் டிசம்பர் 25 முதல் ஜனவரி 06 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள நிலையில், சாஹிட் அப்ரிடி, உமர் அக்மல், சயீட் அஜ்மல் மூவரையும் அவுஸ்திரேலியா செல்லவேண்டாம் என்றும் இந்தியப் பயணத்துக்கான முன்னேற்பாடுகள், பயிற்சிகளுக்காக பாகிஸ்தானில் நிற்கும்படியும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கேட்டுக் கொண்டுள்ளது. சாஹிட் அப்ரிடி சிட்னி தண்டர்ஸ் அணிக்காகவும், உமல் அக்மல், சிட்னி சிக்ஸர்ஸ் அணிக்காகவும், சயீட் அஜ்மல் அடிலெயிட் ஸ்ரைக்கர்ஸ் அணிக்காகவும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பவர்கள். அப்ரிடி ஏற்கனவே கிரிக்கெட் சபையின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டுள்ளார். ஏனைய இருவரும் ஏற்க மறுப்பதற்கு நியாயம் ஏதும் இல்லை. ஏனெனில் நடக்கப் போவது இந்திய அணிக்கு எதிரான போட்டிகள் அதுவும் நடைபெறப் போவது இந்திய மண்ணில். கிரிக்கெட் உலகமே எதிர்பார்த்திருக்கும் இந்த நிகழ்வில் தமது நாட்டுக்காக விளையாடக் கிடைக்கும் சந்தர்ப்பத்தை யாரும் இழக்க விரும்பமாட்டார்கள். பணம் வரும் போகும். தேசிய அணிச் சந்தர்ப்பம் வருவதென்பது இலேசான காரியமா? அதுமட்டுமன்றி இந்திய- பாகிஸ்தான் சுற்றுப் பயணம் வெற்றிகரமாக நிறைவேறினால் எதிர்காலத்தில் பாகிஸ்தான் வீரர்களுக்கு ஐ.பி.எல். என்கிற தங்கச் சுரங்கம் கைக்குள் அல்லவா இருக்கும்.







# இலக்கிய உலகின் அமரகவி ஷேக்ஸ்பியர்!

**உலக** மொழிகளை அலசிப் பார்த்தால் ஒரு சில மொழி களுக்கு தனிச் சிறப்பு இருப் பதை நாம் உணரலாம். உதாரணத்திற்கு தமிழுக்கு 'ழ' என்ற எழுத்து தனிச் சிறப்பு. அதே போல் ஆங்கில மொழிக் கும் ஒரு தனிச் சிறப்பு உண்டு. ஆகக் குறைவாக இருபத்தாறே எழுத்துக்களைக் கொண்ட ஓர் எளிய மொழி என்பதுதான் அந்த தனிச் சிறப்பு.

அதனால்தானோ என்னவோ அந்த மொழி இன்று உலக மொழியாக இருக்கிறது. அந்த உலக மொழிக்கு அழகு சேர்த்தவர்கள் பலர். பெருமை சேர்த்தவர்கள் சிலர். அவர்களுள் தலையாயவர் இன்றும் உலகின் பெரும்பாலான பல்கலைக் கழகங் களும், கல்லூரிகளும் தங்கள் பாடத்திட்டத்தில் இணைத்துக் கொண்டிருக்கும் பலஅமர இலக் கியங்களைத் தந்த ஆங்கில இலக்கிய மேதை ஷேக்ஸ்பியர். அவர் பிறந்ததும், இறந்ததும் ஒரே தினத்தில்தான் ஏப்ரல் 23.

1564-ஆம் ஆண்டு ஏப்ரல் 23-ஆம் திகதி லண்டனுக்கு அருகில் உள்ள ஸ்ட்ராட்; போர்டு- அபான்- அவான் என்ற சிற்றூரில் பிறந்தார் வில்லியம் ஷேக்ஸ்பியர். அவர் பிறந்தது ஏழ்மையில்தான். எட்டுப் பிள்ளைகளில் மூன்றாமவர்.

அவரது தந்தை ஜோன் ஷேக்ஸ்பியர் கையுறை தைத்து விற்கும் வியாபாரி. தொழில் அவ்வளவு இலாபகரமாக இல்லை என்பதால் பன்னி ரெண்டாவது வயதுவரைதான் சேக்ஸ்பியரால் பள்ளிக்குச் செல்ல முடிந்தது. அதன் பிறகு முறையான கல்வி கற்க முடியாமல் போனது. பன்னிரெண்டு வயது வரை இலத்தீன் மொழியில் இலக்கண, இலக்கியத்தை அவர் கற்றார். அவருக்கு பதினெட்டு வயதான போது தன்னைவிட எட்டு வயது மூத்தவரான ஆன் ஹதாவேயை (Anne Hathaway) என்ற பெண்ணை மணந்து கொண்டார். அவர்களுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன.

23 வயதான போது அவர் பிழைப்புத் தேடி லண்டன் வந்து சேர்ந்தார் அந்த ஆண்டு 1587. அடுத்த ஆறு ஆண்டுகள் அவர் என்ன செய்தார் என்பது குறித்து பலதரப்பட்ட கருத்துகள் நிலவு கின்றன. அவற்றுள் ஒன்றை பார்ப்போம்...

அந்தக் காலகட்டத்தில் நாடகங்களுக்குப் புகழ் பெற்ற நகரமாக விளங்கியது லண்டன். சில இடங்களில் தின சரி நாடகங்கள் மேடையேறும். பல பகுதிகளிலிருந்து சீமான்களும், செல்வந்தர்களும் குதிரை வண்டிகளில் நாடகம் பார்க்க வருவார்கள். அப்படிப் பட்ட ஒரு நாடகக் கொட்டகையில் குதிரை வண்டிகளை காவல் காக்கும் வேலை அவருக்குக் கிடைத்தது. அப்படி குதிரைகளை காவல் காத்த ஷேக்ஸ்பியர்தான் பிற் காலத்தில் ஆங்கில இலக்கியத் தின் முகவரியை மாற்றப் போகிறார் என்பது அந்த நாடகக் கொட்டகையின் உரிமை யாளருக்கு அப்போது தெரிந்திருக்க நியாயமில்லை தான். ஷேக்ஸ்பியருக்கு ஞாபகத்திறன் அதிகம். குதிரைகளை காவல் காக்கும் அதேநேரத்தில் நாடகங்களை ரசித்துப் பார்த்த அவர் வசனங்களை மனப்பாடம் செய்து கொள்வார். இந்த வசனம் இப்படி இருந்திருக்கலாமே என்று தனக்குள் நினைத்துக் கொள் வார். இது சினிமாக் கதை போல் இருந் தாலும் ஒருநாள் அந்தச் சம்பவம் நடந்தது.



அரங்கம் நிறைந்த கூட்டம், நாடகம் தொடங்கு வதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு நாடகத்தில் முக்கிய கதாபாத் திரத்தில் நடிப்பவர் வரவில்லை என்பது தெரிந்து பதறிப் போனார் நிர்வாகி. நிலைமையை உணர்ந்த ஷேக்ஸ்பியர் அந்த பாத்திரத்தில் தாம் நடிப்பதாகக் கூறினார். வேறு ஒரு நேரமாக இருந்திருந்தால் அந்த நிர்வாகி நகைத் திருப்பார். அப்போது வேறு வழி தெரியாததால் நிர்வாகியும் சம்மதிக்க ஷேக்ஸ்பியருக்கு ஒப்பனை செய்யப்பட்டது. நாடகமும் தொடங்கியது.

தனக்கு முன் நடித்தவரைக் காட்டிலும், அந்த பாத்திரத்தில் மிகச் சிறப்பாக நடித்து பலத்த கைதட்டலையும், பாராட்டையும் பெற்றார் ஷேக்ஸ்பியர். சில முக்கிய காட்சிகளில் அவர் சொந்தமாகவும் வசனம் பேசினார். அந்த வரவேற்பைப் பார்த்து மகிழ்ந்துபோன நிர்வாகி தொடர்ந்து நடிக்க ஷேக்ஸ்பி யருக்கு வாய்ப்புக் கொடுத்தார்.

சில நாடகங்களையும் அந்த நிறுவனத்திற்காக எழுதிக் கொடுத்தார் ஷேக்ஸ்பியர். 1592-ஆம் ஆண்டு லண்டன் மாநகரை பிளேக் எனும் கொடிய நோய் அலைக்கழிக்கத் தொடங்கியது. இதனால் முடங்கிப் போனது லண்டன் மாநகரம். அதனால் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் அனைத்து நாடகக் கொட்டகை களும் மூடிக்கிடந்தன. நாடகக் கலைஞர்களுக்கு பிழைப்பு இல்லாமல் போனது.

லண்டனை அலைக்கழித்த அந்த நோய்தான் பல அமர காவியங்களை படைக்கும் வாய்ப்பையும், கால அவ காசத்தையும் ஷேக்ஸ்பியருக்குத் தந்தது. அந்த இரண்டு ஆண்டு களில் அவர் நிறைய நாடகங் களையும், கவிதைகளையும் எழுதிக் குவித்தார். சேனட் எனப் படும் புதுவகை கவிதைகளையும் அவர் புனைந்தார். பிளேக் நோய் முடிந்தவுடன் அவரது நாடகங்கள் புத்தகமாக வெளி வரத் தொடங்கின. 24 ஆண்டு இலக்கியப் பணியில் அவர் மொத்தம் 37 நாடகங்களை எழு தினார் என்று சொல்வதை விட இயற்றினார் என்றுசொல்ல வேண்டும். துன்பியல், இன்பியல் என இரு பிரிவுகளாக அவரது நாடகங்களை வகைப்படுத்தலாம்.

உலகம் முழுவதும் ரோமியோ, ஜூலியட் பெயரை உச்சரிக்காத காதலர்கள் இருப்பார்களா? என்பது சந்தேகம்தான். அதே போன்றுதன் உயிர் நண்பன் புருட்டஸ் தன்னை கத்தியால் குத்தும்போது அதிர்ந்து போய் Et tu Brutus? அதாவது நீயுமா. புருட்டஸ்? என்று கேட்டு உயிர் விட்ட ஜூலியஸ் சீசரின் கதாபாத்திரத்தையும் இலக்கிய உலகம் மறக்கமுடியாது.

இப்படி கனமான கதாபாத் திரங்களுக்கு வலுவான வசனங் களால் உயிர் ஊட்டியதால்தான் இன்றும் அவை உயிரோவியங் களாக உலா வருகின்றன. தமது படைப்புகள்மூலம் இன்றும் நம்மிடையே உலாவரும் ஷேக்ஸ் பியர் 1616ஆம் ஆண்டு ஏப்ரம் 23ஆம் நாள் தாம் பிறந்த தினத்திலேயே இறந்துபோனார்.

ஓர் இலக்கிய மேதை 52 வயதில் மறைந்துபோனது இலக்கிய உலகிற்கு பேரிழப்பு தான். தமிழ் இலக்கிய உலகின் அமரகவி கம்பன் என்றால் ஆங்கில இலக்கிய உலகின் அமரகவி ஷேக்ஸ்பியர்தான். இருவரின் படைப்புகளுமே அமர காவியங்களாக போற்றப்படுகின்றன. எழுதப் பட்டு நானூறு ஆண்டுகளுக்கு பிறகும் உயிரோட்டம் இருக் கிறது என்பதால்தான் உலக பல்கலைக்கழகங்கள் இன்றும் அவற்றை கற்பிக்கின்றன.

ஏழ்மையில் பிறந்து அடிப் படைக் கல்வியைக்கூட முறை யாக முடிக்க முடியாத ஒருவரால் உலகப் புகழ்பெற முடிந்தது என்றால், கல்விக்கான எல்லா வாய்ப்புகளும் இருக்கும் நம்மால் அது முடியாதா? இலக்கியம் என்ற வானம் அவருக்கு வசப் பட்டதற்கு திறமை மட்டும் காரணம் அல்ல தன்னம்பிக்கையும்தான். நமக்குத் திறமை இருந்தால் அதனை ஒரு கூடுதல் பலமாக ஏற்றுக்கொண்டு தன்னம்பிக் கையை முதலீடு செய்வோம். திறமை இல்லாவிட்டாலும் தன்னம்பிக்கையோடு விடா முயற்சியை முதலீடு செய்வோம். நாம் விரும்பும் வானம் வசப்படாமலா போகும்.

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும்
வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே
ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும்,
பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

### குறுக்கெழுத்துப் போட்டி - 497

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 6 |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| 13 | | 15 | 16 | 17 | 18 |
| 19 | | 21 | | 23 | 24 |
| 25 | 26 | | 28 | | 30 |
| | 32 | 33 | 34 | 35 | 36 |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **04.12.2012** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 497
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ருபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப் போட்டி 495- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 உ | 2 த | 3 வி | | 5 மூ | 6 ளி |
| 7 ப | 8 து | 9 த் | | 11 லை | |
| 13 தே | 14 ம் | 15 ப | 16 ல் | | 18 மோ |
| 19 சி | | 21 து | 22 ற | 23 வ | 24 ர் |
| | 26 கோ | | 28 ளி | 29 நா | |
| 31 உ | 32 ழை | 33 ப் | 34 பி | 35 ல் | |

**இடமிருந்து வலம்**

01. பரிகாசம்.
07. இடி. (குழம்பியுள்ளது)
11. மாங்கல்யம். கோத்த சரடு.
15. "யான், எனது அற்ற இடமே இது..." குருபர சுவாமிகளின் ஒரு அருள்வாக்கு.
23. தாவரவகை ஒன்று. (திரும்பியுள்ளது)
25. தெளி. (திரும்பியுள்ளது)
32. மேலாதல் அல்லது மிகுதல்.

**மேலிருந்து கீழ்**

01. செகராசசேகரன் என்ற மன்னன், இதை மருந்து மாமலை எனக் குறிப்பிட்டதாக சரித்திரம் கூறுகிறது.
02. தினமும் நாம் செய்வதில் ஒன்று. (திரும்பியுள்ளது)
03. திரிகடுகம் என்னும் மருந்துக் கலவைக்கு, சுக்கு, மிளகுடன் இதுவும் சேரவேண்டும்.
06. அண்மையில் கிழக்கு அமெரிக்காவுக்கு பேரிடரைக் கொடுத்தது.
11. ஒரு நிறம் அல்லது வெற்றியொலி.
26. மயில் தோகை அல்லது அன்னத்தின் இறகு.
28. ஆண்டவராகிய இவர்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.495 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

சி.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. கே.இராஜகோபால், கந்தசுவாமி கோவிலடி, வட்டுக்கோட்டை.
02. த.வரதன், பாலையூற்று, திருகோணமலை.
03. ஜே.காமிலா, பதியத்தலாவை, அம்பாறை.
04. ஆர்.காவியா, சேனையூற்று-06, கட்டைபறிச்சான்.
05. எவ். ஆர்.எவ்.உமரலி, அநுராதபுர வீதி, புத்தளம்.
06. எஸ். ஜேம்ஸ், வச-ந்தன், ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.
07. அ.தேவகி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
08. கு.நிஷானி, தோணிக்கல், வவுனியா.
09. எஸ்.அனுபல்லவி, சாவகச்சேரி.
10. வ.ஷங்கர், மாசார், பளை.



8

**இராமசாமி ரமேஷ், அளம்பில்**

ஆம்! வலிகளையும், சுமைகளையும் தோல்விகளையும், அவமானங்களையும் சுமந்து - கடந்து வெற்றிக்காகப் போராடும் எழுத்தாளன் ஒருவனின் எழுத்துலகப் பயணம் இங்கே தொடர்கிறது.

# வலிகளின் சன்மானம்

*தரிசனத்துக்காய்!* காத்திருந்த பக்தனின் பக்கம் கடவுளின் பார்வை திருப்பியதான பூரிப்பு இவனிடத்தில் ஒட்டிக்கொள்ள, "இல்ல... இப்பதான் அண்ணன் வந்தனான்! உங்களிட்டத் தான் ஒரு அலுவலாய்..." சொல்லிவிட்டு சின்னவர் அண்ணரின் வருகை தன்னை நோக்குகிறதா எனவும் அவதானித்தான். அவர் வந்தார்.

கடன்கேட்பது எவ்வளவு மனஉறுத்தலானது என்பது இப்போதுதான் நட்சத்திரனுக்குப் புரிகிறது. உள்ளுக்குள் ஒருவித படபடப்பு! ஒரு சந்தர்ப்பத்தில் கடன் வாங்கவே இப்படி உதறுகிறது என்றால், எத்தனை காலங்கள் என் பெற்றோர்களின் நிலை, இப்படி நேர்ந்திருக்கும். அடுத்த வேளையை நகர்த்த எத்தனை மனிதர்களின் முன்னால் என்போல கூனிக்குறுகியிருப்பார்கள்? அனுபவிக்கும் போதுதான் வலித்தது. அருகில் வந்த சின்னவர், "தம்பி! என்னடாப்பா.. ஏதாவது அவசரமோ?" அவரை நேராக சந்திக்க விழிகள் விரும்பவில்லை. ஒரு தடவை அவர்மேல் பார்வையை படரவிட்டவன், வேறெங்கோ பார்த்தபடி " ஓம் அண்ணன்! எனக்கு... ஒரு ஐநூறு ரூபா... அவசரமாய் தேவைப்படுது. அதான் உங்களிட்ட வந்தனான். பின்னேரம் அல்லது... நாளைக்கு திருப்பித் தந்துடுறன்.." மென்று முழுங்கி வார்த்தைகளை முடித்தவன், சொல்ல வந்ததை சொன்ன திருப்தியோடு நிமிர்ந்தான். " இதுக்கேன்டாப்பா... இவ்வளவு நேரம் மினக்கெடுறாய். வந்தவுடனயே... கேட்டால் தரப்போறன்.." என்றவாறு, தன் சட்டைப்பையுள் கையைவிட்டு தடவினார்.

ஒரு தாள் தட்டுப்பட்டது.

" இந்தா தம்பி! கிடக்கேக்க திருப்பித்தா! அவசரமாய் தேவையில்லை! இரண்டாயிரம் ரூபாய் புதுத்தாள் மடமடப்பாய் கிடந்தது. "இல்ல அண்ணன்!

ரெண்டாயிரம் ரூபாய் தேவையில்லை.. எனக்கு



ஐநூறு காணும்!" இவனது பதிலை எதிர்பாராதவராய் கொண்டு போ தம்பி. என்னை அண்ணனாய் நினைச்சா... வேற கதை சொல்லக் கூடாது.." கொஞ்சம் அழுத்தமாய் சொன்னபடி கடைக்குள் புகுந்துகொண்டார் சின்னவர் அண்ணன். இவன் நேசம் தூவும் பார்வையை செலுத்தியவனாய், சைக்கிளைத் திருப்பினான் அடுத்த கட்டம் நோக்கி!!

அடுத்து, கறிக்கு இறால் வாங்கலாம் என்றால், நாயாறுவரைக்கும் போக வேணுமே!! நிலா புறப்பட இன்னும் கொஞ்ச நேரம்தான் மீதமிருந்தது. இடையில் எங்காவது இறால் வாங்கலாமா? இடம்தேடி யோசித்தான். செம்மலை பாறையடி போனால்... வீச்சுவலை வீசுறவங்களிடம் இறால் கிடைக்கும். சைக்கிளை வேகமாய் மிதித்தான். செம்மலை உப்புமாவெளி (ஊரிலிருந்து) நான்கு கிலோமீற்றர் தான் சைவர்கள் அதிகமாக வாழும் செம்மலையில், கடற் தொழிலை ஜீவனோபாய மாய் செய்யும் அரைவாசி மக்களைப் போலவே, விவசாயம் செய்யும் மக்களும் கலந்திருந்தார்கள். மனிதர்களோடு பழக செம்மலை மக்கள் குறிப்பிடக்கூடியவர்கள். நட்சத்திரனுக்கும் செம்மலை மண்ணை அதிகம் பிடிக்க இன்னுமொரு காரணமும் இருந்தது. இலக்கியக் கருவை இவன் சுமக்கக் காரண கர்த்தாவான இவனது குரு நாதர் பத்மராஜா ஆசிரியர்கூட செம்மலை மண்ணுக்குச் சொந்தமானவர்தான். அளம்பில் மகா வித்தியால யத்தில் இவனுக்கு அகரம் கற்றுக் கொடுத்து முல்லைத் தீவு பாடசாலையில் உயர் தரம்வரை உயர்த்தி விடும் காலம்வரை இவனோடு கூடவே இருந்தவர் பத்மராஜா வாத்தியார்தான். எந்தக் காலத்திலும் மறக்கமுடியாத மனிதராய் இவனால் நினைவு கூரப்படுபவர் இந்த மனிதர். நட்சத்திரனின் ஒவ்வொரு படைப்புக்களையும் படித்த கையோடு விமர்சனம் செல்வார்! நிறைகுறைகள் சொல்வார். அத்தோடு இவனை நேசிக்கும் மனிதர் அவர். இந்தக் காரணங்களாலேயோ என்னவோ, அதிகமாகவே செம்மலை மண்ணை இவனும் நேசித்தான்.

இறால் வாங்குவதாய் இருந்தால், நாயாறு பாலத் தடிக்கு போக வேண்டும் அல்லது போனால், செம்மலைபாறையடி எனப்படும் இடத்துக்குப் போகவேண்டும். வீச்சுவலை வீசி பாறை மீன்கள், இறால் மற்றும் நண்டுகள் என்பன பிடித்து அந்த இடத்திலேயே விற்பனை நடக்கும். நட்சத்திரன் பயணமும் அந்த இடத்தை நோக்கியே அமைந்திருந்தது.

வீட்டில்...

மகேஸ்வரி சோற்றைச் சமைத்துவடித்து ஆறவிட்டிருந்தாள். நிலாவும் அவரோடு இணைந்து கூடமாட ஒத்துழைப்பு செய்துகொண்டிருந்தாள். ஏழ்மை இருக்கும் வீட்டில் தான் அன்பும்பாசமும் அதிகமாய் இருக்கும் என்று பொதுவாய் சொல்வார்கள். இன்று உண்மையை தானே உணர்ந்துகொண்டாள் நிலா! வார்த்தைக்கு வார்த்தை, தன் மகனையும் கணவரையும் உச்சரித்துக் கொள்ளும் மகேஸ்வரியை மனசுக்குள் மெய்ச்சிக் கொண்டாள்.

இடைக்கிடையே நட்சத் திரன் பற்றிய கேள்விகளை யும் கேட்டுக் கொள்வாள். "படிக்கும் போது... கஷ்டப்படாத நட்சத்திரன்.. இப்ப இவ்வளவு கஷ்டப்படுறது கவலையாம். ஆனால்.. என்ன செய்யிறது? வெளவாலுக்கு வாக்கப்பட்ட தொங்கித்தானே ஆகனும்...? கடற்றொழில் மாதிரி கஷ்டம் வேறெந்தத் தொழிலும் இருக்காது. வெயில், மழை ரெண்டிலயும் காய்ஞ்சுதான் உழைக்கனும்... இந்த வயசிலே என்ர புள்ள.. குடும்பத்தை சுமக்கிறத நினைச்சா கவலைதான்... மகேஷ்வரியின் இரு விழி அருகிலும் ஈரம் கசிந்தது.

(வலிகள் தொடரும்...)

# நிவாரண அரசியல்

**முற்பகல்** நேரம் பத்து முப்பத்தைத் தாண்டிக் கொண்டிருந்த அப்பொழுதில், வெயிலில் தகிப்பு ஆரம்பிக்கத் தொடங்கியிருந்தது. ஒருவாரமாக தொடர்ந்து பெய்து கொண்டிருந்த மழை ஒரு நாளினுள் தனது செயற்பாட்டை நிறுத்திக் கொண்டதால், கதிரவனின் அனல் தாக்கம் அதிகமாக இருந்தது.

அரசடி விநாயகரின் ஆலயத்துக்கு அருகாமை யில் நிலமெங்கும் பரந்திருந்த மரநிழலின் கீழ் ஆங்காங்கே வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்ப அங்கத்தவர்கள் சிறுசிறு கும்பல்களாக குழுமி யிருந்தார்கள். அவர்களின் முகங்களில் தெரிந்தது அப்பட்டமான வறுமையின் பிரதிபலிப்பு. அவர்கள் உளத்தாக்கத்திற்கு உட்பட்டவர்களாக... உறவுகளை இழந்தவர்களாக.... ஒரு பிடிப்பற்ற வாழ்க்கைக்குள், அவர்களைப் பின்தள்ளி விட்டிருந்தன கடந்த காலப் போர் அனர்த்தங்கள்.

மூன்று வருடங்களின் பின்பு.... அவர்கள் தமது சொந்த இடத்திற்கு மீண்டும் குடியமர வந்தபோது, அவர்களுக்கான வாழ்வாதார மற்றும் பொருளாதார வசதிகள் எதுவும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. மீள்குடியேறிய மனமகிழ்வு ஒன்றைத் தவிர, வேறெந்த பூரிப்பான உணர்வுகளும் தென்படவில்லை அவர்களிடத்தில்.

இன்று -

அவர்கள் முகங்களில் சிறிது தோற்றம் பெற்றிருந்தது உவகையின் வெளிப்பாடு.



அலெக்ஸ் பரந்தாமன். புதுக்குடியிருப்பு.

அதற்குக் காரணம்; மக்களால் தெரிவு செய்யப்பட்ட தாகக் கூறப்படும் நாடாளுமன்ற எம்.பி. ஒருவர், நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் தனது தொகுதி மக்களைப் பார்வையிட வரு கிறார். அதுவும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிவாரணப் பொதி கள் வழங்குவதற்கு வருவதாக, அப் பகுதிக்குப் பொறுப் பான கிராமசேவகர் மூலம் அறிவித்தல் விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஆலடி விநாயகரின் ஆலயத்தைச் சூழவுள்ள பகுதிகளில் ஒன்று சேரத் தொடங்கினார் கள் அப்பகுதி மக்கள்.

சின்னாச்சிக்கு நாரி உளைவெடுக்கத் தொடங் கியது. நிலத்தில் குந்திக் கொண்டிருந்த அவள், நிலத்தில் நிலையாக இருந்துகொண்டு, தனது இரண்டு கால்களையும் நன்கு நீட்டி வைத்துக் கொண்டாள்: ஆச்சிக்கு அது இதமாகவும் சுகமாகவும் இருந்தது.

' எடி பிள்ளை... எம்.பி. எத்தனை மணிக்கு வாறதெண்டு விதானை சொன்னவர்...?'

பக்கத்தில் இருந்த ஒரு பெண்ணிடம் கேட்கிறாள் ஆச்சி.

' பத்து மணிக்கணை ஆச்சி. இப்ப நேரம் பத்துக்குக்கூட இருக்கும் போலக் கிடக்குது..' என்று, கூறியவாறு அந்தப் பெண் வானத்தை அண்ணாந்து பார்த்தபோது, அவளின் கண் களைச் கூசச் செய்தது சூரியஒளி.

"என்னென்ன சாமானுகளாம் குடுக்கப் போகினம்...?"

மீண்டும்... அந்தப் பெண்ணிடம் விபரம் அறி யும் ஆவலில் கேட்கிறாள் ஆச்சி.

' என்னெண்டு தெரியாதணை. இனி அவையள் வந்து... தந்து அதை வீட்டை கொண்டுபோய் பிரிச்சுப் பார்த்தால்தான் தெரியும்.'

ஆச்சிக்கு ஏமாற்றமாக இருந்தது அந்தப் பெண்கூறிய பதிலின் விதம்.

"ஏதேனும் ஐஞ்சைப் பத்தைக் காசு களஞ்சாத் தந்தினமெண்டால் நல்லது. வீட்டில மண்ணெண்ணெய், சீனி இல்லை வாங்கிறதுக்கும் காசு இல்லையடி மோனை."

ஆச்சியை அனுதாபத்தோடு பார்த்தாள் அப்பெண்.

இருந்தாற் போல்குழுமியிருந்த மக்களிடையே பரபரப்பு ஏற்பட்டது. நிலத்தில் இருந்தவர்கள் எல்லோரும் அரக்கப் பரக்க எழுந்துகொண்டார் கள். சின்னாச்சிக் கிழவியால் திடீரென எழுந்து கொள்ள முடியவில்லை. நிலத்தில் கைகளை ஊன்றிய நிலையில், ஒருவாறாக எழுந்துகொண்டு அவர்கள் பார்க்கும் திக்கை நோட்டம்விட்டாள்.

அங்கே-

அரசடி விநாயகனின் ஆலயவீதியில் 'பிக்கப் வாகனங்கள் சகிதம் வந்திறங்கிய எம்.பி., தனது பரிவாரங்கள் புடைசூழ வந்துகொண்டிருந்தார். எம்.பியை கண்டதும் குழுமிநின்ற மக்கள் அனைவரும் அவரை விநோதமாகப் பார்க்கத் தொடங்கினர். எம்.பியும் அம்மக்களைப் பார்த்து சிரித்த முகமுமாய்.. கூப்பிய கரங்களுமாய்... அவர்களை நோக்கிவந்த வண்ணமிருந்தார்.

நிவாரணப் பொதிகள் வழங்கும் நிகழ்வின் ஆரம்பக்கட்டடாக கிராமசேவகர் தலைமையில் கூட்டம் நடைபெற ஏற்பர்டுசெய்யப்பட்டிருந்தது. கூட்டத்தில் தலைமையுரையோடு.... வந்திருந் திருக்கும் எம்.பிக்கு வரவேற்புரை... வாழ்த்துரை... சிறப்புரை... ஆசியுரை.... எனப் பலவிதமான உரைகளுக்கு கிராமசேவகர் தனக்கு வேண்டப் பட்டவர்களை அழைத்து, அவர்கள்மூலம் பேசவைத்துக் கொண்டிருந்தபோது... நேரம் மதியம் ஒரு மணியைத் தாண்டிவிட்டிருந்தது.

பொறுமையை இழக்கத் தொடங்கினார்கள் பொதிவாங்க வந்த மக்கள், உச்சிப் பகலவனின் உக்கிர தாக்கம்... அவர்களுக்கு நா வறட்சியை ஏற்படுத்தியிருந்தது. அதே நாவறட்சி எம்.பி.க்கும் ஏற்பட்டிருக்கவேண்டும். அவர் தனக்கு வழங்கப் படும் குளிர்பானத்தை எதுவித மறுப்பும் தெரிவிக் காமல் அடிக்கடி குடித்துக் கொண்டிருப்பதைப் பார்வையுற்ற மக்களில் பலபேருக்கு மனதில் எழத்தொடங்கியது எரிச்சல். இறுதியாக எம்.பி. உரையாற்ற அழைக்கப்பட்டார்.

'கல்தோன்றி மண்தோற்றாக் காலத்திலே...' என் ஒலிவாங்கிக்கு முன்பாக உரையாற்றத் தொடங்கியவர், தாயக மண் விடுதலை... சுதந்திரம்.. தேசியம்... பாசிசம்.. அணுகுண்டு... ஐ.நா.சபை.... அமெரிக்கா... பான் கீ மூன்.... என ஒன்றோடு ஒன்று தொடர்பில்லாத விடயமாகப் பேசிக் கொண்டிருந்தபோது...பொதுமக்களில் பலர் எழுந்துகொள்ளத் தொடங்கினார்கள்.

"சனம் படுகிற பாட்டுக்கை உதென்ன கண்டறியாத பேச்சு.."

சற்று உரத்த குரலில் கூறியவாறு.. சின்னாச்சி யும் அக்கூட்டத்திலிருந்து எழுந்துகொண்டாள்.

குழுமியிருந்த மக்கள் பலர் எழுந்து நிற் பதையும், அவர்களிடையே ஏற்பட்ட மனமாற்றம் மற்றும் சலசலப்பையும் அவதானித்துவிட்ட எம்.பி அடுத்த நிகழ்வாக நிவாரணப் பொதிகள் வழங்கப்படும்... என அறிவித்துக் கொண்டார்.

ஏற்கனவே, தான் தயாரித்து வைத்திருந்த பெயர்ப்பட்டியலை கிராமசேவகர் வாசிக்க ஆயத்தமாகி நின்றார். முதலாவது பெயர் வாசிக்கப்பட்டபோது, அப்பெயருக்குரியவர் எம்.பி யின் அருகில் சென்றதும், எம்.பி. கமராவைப் பார்த் துச் சிரித்தபடி கொடுக்கும் நிவாரணப்பொதியைப் பெற்றுக்கொண்டு திரும்பினார்.

அதன்பின் - ஒவ்வொருவராக பொதிகளைப் பெற்றுக் கொண்டிருந்தனர். சின்னாச்சிக்கு மனம் இருப்புக் கொள்ளவில்லை. ஆவலாதிப்பட்ட நிலையில் பொதியைப் பிரித்துக் கொண்டாள். கிழவியைப் போல இன்னும் பலர்....

'அட நாசமறுப்பாரே! நாங்கள் படுகிற பாட்டுக்கை, இப்ப இது தேவையெண்டு ஆர் உங்களுக்கு சொல்லி அனுப்பியது? இருக்க வீடில்லை... குடிக்கத் தண்ணியில்லை.. ஒரு ஒழுங்கான கக்கூசு இல்லை.. அதுகளை முதல்ல செய்து தந்திட்டல்லோ இந்த ஒரே ஒரு மாப்பெட்டியைக் கொண்டுவந்து தந்திருக்க வேணும். உதென்ன கண்துடைப்பு வேலை...?

' சின்னாச்சி வாய்க்கு வந்தபடி... திட்டிக் கொண்டிருந்தாள். அவளது திட்டலை எம்.பி.யோ அன்றி கிராமசேவகரோ கவனித்ததாக இருக்க வில்லை. பொதிகள் வாங்கிய மக்களிடையே ஒலிக்கத் தொடங்கின முணுமுணுப்புக்கள். எல்லோர் கைகளிலும் லக்டோசன், அங்கர், நெஸ்பிறே போன்ற மாப்பெட்டிகள்! பொதிகளை வாங்கிய அவர்களின் முகங்களில் இழையோடி யது ஏமாற்றத்தின் உணர்வு.

சில நிமிடங்களின் பின் -

எம்.பி.யும் அவரது பரிவாரங்களும் சென்று விட்டன தத்தமது பிக்கப் வாகனங்களில்.

மறுநாள் -

அனைத்து தினசரிப் பத்திரிகைகளிலும் எம்.பி மீள்குடியேறிய மக்களுக்கு 'நிவாரணம்' வழங்கிய செய்தியும், அவரது புன்னகை நிறைந்த முகமும் நிவாரணப் பொதிகளுடன் அச்சாகியிருந்தன அசலாக!

(யாவும் கற்பனை)



# இலக்கிய நயம் 105

தருவது கே.வி. குணசேகரம்

"ஆடுமகளிரின் மஞ்ஞை அணிகொளக்
காடும் கடுக்கை கவின்
பெறப் பூத்தன
பாடு வண் டூதும் பருவம்
பணைத் தோளி
வாடும் பசலை மருந்து"

இப்பாடல் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்றான "கார்நாற்பது" என்ற நூலில் உள்ளது. இதன் ஆசிரியர் மதுரைக் கண்ணன் கூத்தனார்.

இந்நூலில் நாற்பது பாடல்கள் உள்ளன. இப் பாடல்கள் அனைத்தும் முல்லை நிலம் சார்ந்ததாகும். தலைவன் ஏதோ ஒரு காரணத்திற்காகத் தலைவியைப் பிரிந்து செல்கிறான். அவன் வரும் வரையும் தலைவி அவனை நினைத்து ஏங்குவதை இப்பாடல்கள் மிகவும் துயரத்துடன் கூறுகின்றன. தலைவன் தான் திரும்பி வரும் நாளைக் கூறிவிட்டே செல்வான். இருப்பினும், சில காரணங்களால் அவனின் வரவு தாமதமாகும். குறித்த தினத்தில் வந்து விடுவான் என எதிர்பார்த்து ஆவலோடு காத்திருக்கும் தலைவி, அவன் வராமையால் பெருந் துன்படுப்படுவாள். அதைக் காணச் சகிக்காத தோழி அவளுக்கு சமாதானம் கூறுவாள். சமாதானங்கள் அந்நேரம் அமைதியை அளித்த போதும், பின் இயற்கையின் கோலங்கள் அவளைச் சித்திரவதை செய்யும். இந்நூலைப் பாடிய புலவர் பெண்களின் உணர்வுகளை முழுமையாக உணர்ந்தவராகவும், இயற்கையின் மாறுதல்கள் பெண்களை எப்படியெல்லாம் துன்புறுத்துகின்றன என்பதை அறிந்தவராகவும் இருக்கின்றார். இயற்கையை முழுமையாக அறிந்து கொண்டால், கற்கத் தேவையில்லையென்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். இயற்கையை அவதானிப்பவர்கள் தான் வாழ்க்கையை முழுமையாக அனுபவிக்கின்றனர். இயற்கையின் மாறுதல்கள் பெண்களை மாறுபாடடைய வைக்கும். மழை, குளிர், பனி, மாலைவேளை, அட்டமி, நவமி, அமாவாசை, பௌர்ணமி போன்ற காலங்கள் மனிதனை மாறுபாடு கொள்ள வைக்கும். இக் காலத்தில் பெண்கள் உணர்வுகளுக்குக் கட்டுப்படுவர். இதை இயற்கையை உணர்ந்தவர்களால் தான்புரிந்து கொள்ள முடியும். மனைவியுடன் அன்பாக இருப்பவன் உலகைப் புரிந்தவனாவான். உலகம் பெண்ணுக்குள்ளேயே உண்டு. பூமி, ஆறு, விலை மதிக்க முடியாத பொருட்கள், கல்வி, செல்வம், வீரம் யாவும் பெண்ணுக்குள் அடக்கம் என்று சமய நூல்களும், காதல் நூல்களும் கூறுகின்றன. இவற்றையெல்லாம் அறிந்தவராகவே மதுரைக் கண்ணன் கூத்தனார் இருக்கிறார். அதனால் தான் கார் நாற்பது என்றும் நூலில் உள்ள நாற்பது பாடல்களும் மிகுந்த காதல் சுவை உடையனவாக இருக்கின்றன.

## அவையாடும் மயில்கள்



அலங்காரத்துடன் மேடையில் ஆடும் இளமகளிரைப் போல மயில்கள் அழகு பெற்று அழகாக நடனமாடுகின்றன. காடுகளில் உள்ள மரங்களெல்லாம் பூத்துக் குலுங்குகின்றன. கொன்றை மலர்கள் முழுமையாக மலர்ந்துவிட்டன. பாடுகின்ற வண்டினங்கள் யாவும் பூத்து மலர்ந்திருக்கின்ற மலர்களில் இருக்கும் தேனை உண்டு மயங்கிக் கிடக்கின்றன. ஆகையால் மூங்கிலைப் போன்ற தோள்களை உடைய என் அருமைத் தலைவியே உன்மேனியில் பூத்திருக்கும் பசலை நிறம் மாறப்போகிறது என்று தனது கணவன் வராமையால் துன்பப்படும் தனது தோழிக்குக்கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

தோழியும், தலைவியும், தலைவனும் கூறுவதாக 40 பாடல்களும் அமைந்துள்ளன. கார்காலத்தைப் பற்றி ஒவ்வொரு பாடலும் கூறுவதால் இந்நூலுக்கு கார் நாற்பது என்ற பெயர் வந்தது. அரங்கில் நடன மங்கையர் நடனமாடுவது போல மயில்கள் காலிட்டடில் நடனமாடுகின்றன. என்று புலவர் கூறுவது காமத்தை மிகைப்படுத்திக் கூறுவது போல இருப்பினும் காமத்தின் கொடுமையை அழகாகக்கூறுவுது போலத் தெரிகிறது. வள்ளுவர் காதலைக் காமம் என்றே சொல்கிறார். காதலில் புனிதம் இல்லை. காமம்தான் உள்ளது. அதை இயற்கை வளர்த்துப் பெண்களைக் கொடுமைப்படுத்துகிறதென்றும், அது இயல்பானதென்றும் புலவர் கூறுகிறார். இப்பாடல்களைப் படிக்கும்போது கார்காலம் இல்லாது விட்டாலும் கணவனுக்கு மனைவியின் எண்ணமும் மனைவிக்குக் கணவனின் எண்ணமும் தோன்றி வருத்தும்.

# கருத்துக் களம்

அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்டிருக்கின்ற உள்ளக விசாரணை அறிக்கை பல்வேறு வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

இலங்கையில் இறுதி யுத்தம் நடந்த காலப் பகுதியில் ஐ.நா பிரதிநிதிகள் இலங்கையை விட்டு வெளியேறியதே பொதுமக்கள் உயிரிழப்புக்கள் அதிகரித்தமைக்கான காரணம் என்றும் அவ்விடத்தில் ஐ.நா தவறு இழைத்து விட்டதாகவும் அந்த அறிக்கை கூறுகிறதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


அதேவேளை, யுத்தம் முழுவதையும் ஐ.நாவுடன் கருத்துப் பரிமாற்றத்துடனேயே நடாத்தியதாக இலங்கை அரசாங்கம் கூறுகிறது. அப்படியானால் இலங்கைக்கும் ஐ.நாவுக்கும் இடையிலான கருத்துப் பரிமாற்றம் "நாங்கள் மக்கள் இழப்பைப் பொருட்படுத்தாது அடிக்கப்போகின்றோம் நீங்கள் உயிர்தப்ப விரும்பினால் ஓடித்தப்புங்கள்" என்று அரசாங்கம் கூறியதற்கு இணங்கத்தான் ஐ.நா வெளியேறியதா? என்ற சந்தேகம் சாதாரண மக்கள் மத்தியில் எழுந்திருக்கிறது.

அவ்வாறு பார்க்கையில் குற்றவாளியைப் காட்டிலும் குற்றத்துக்கு துணைபோனவன் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டியவன் என்ற கருத்துக்கு அமைவாக குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்படவேண்டியது ஐ.நாவே.ஆனால்....

ஏ.குருபரன்.
மட்டக்களப்பு.

கருத்துக்களம்.
தினமுரசு. வாரமலர்.
373. பிரதான வீதி. யாழ்ப்பாணம்.


கைமேல் பலன் தரும் கண்கண்ட தெய்வம் ஸ்ரீ துர்க்கா தேவியே




# சிந்தியா பதில்

**சிந்தியா! முள்ளிவாய்க்கால் முடிவல்ல புதிய அத்தியாயத்தின் தொடக்கம் என்று ஸ்ரீதரன் எம்.பி கூறியுள்ளாரோ?**

ப.பொன்நிலவன். வவுனியா.

*வன்னியில் நடந்த அவலங்கள் - ஓலங்கள் எல்லாவற்றையும் செய்திகள் ஆக்கி ஊடகம் ஒன்றின் ஊடாக பணம் சம்பாதித்து விட்டு வவுனியாவில் சுகபோக வாழ்வு நடாத்திக் கொண்டிருக்கும் ஸ்ரீதரன் எம்.பி. போன்றவர்களுக்கு இன்றும் யுத்தத்தின் பாதிப்பிலிருந்து மீள முடியாமல் வன்னிக் காடுகளில் மரக்கிளைகளே கூரை என நம்பி வாழ்ந்துகொண்டு நுளம்புகளுடன் போராடிக் கொண்டிருக்கும் அப்பாவி மக்களின் அவலங்களைப் புரிந்துகொள்ள வாய்ப்பில்லை.*

*இவ்வாறானவர்களுக்கு தேவையானதெல்லாம் பணம். அந்தப் பணத்தை சம்பாதிப்பதற்கு முதலீடுகளாக அப்பாவி மக்களையும் அவர்களின் அவலங்களையும் பயன்படுத்தும் தரம் கெட்ட வியாபாரிகள் இவர்கள் என்றெல்லாம் வெதும்புவது நானல்ல! பாதிப்பிலிருந்து மீளமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் அப்பாவி வன்னி மகன் ஒருவன் என்பது வேதனையான விடயமே.*

**சிந்தியா! ஐ.நாவின் சுய விமர்சனம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

அ.குமாரவேல். கொழும்பு.

*எதிர்பாராமல் நடந்த மாற்றங்களாலும் கவனக்குறைவினால் ஏற்பட்ட தவறுகளுக்கும் சுயவிமர்சனம் செய்துகொள்வது எதிர்காலத்தில் அவ்வாறான தவறுகள் நடந்துகொள்ளாமல் இருப்பதற்கு உதவும். அது ஆரோக்கியமானதும்கூட. ஆனால் இறுதிப் போர் விடயத்தில் ஐ.நா நடந்து கொண்டது அந்த வரையறைக்குள் அடங்கி விடாது.*

*வன்னிப் போரின் உக்கிரத்தையும் அது தொடரும் பட்சத்தில் மக்களுக்கு நிகழப்போகும் அனர்த்தங்களையும் ஐ.நா. நன்றாகவே அறிந்திருந்தது அதை சொல்ஹெய்மும் உறுதிப்படுத்தி இருக்கிறார்.*

*உயிரைக் கையில்பிடித்திருந்த மக்கள் வழிமறித்து நின்று தங்களை விட்டுவிட்டு செல்லவேண்டாமென்று கெஞ்சிக் குளறியபோது "நீங்கள் எக்கேடு கெட்டாலும் பறவாயில்லை என்று மூட்டை முடிச்சுக்களுடன் ஓடியவர்கள் இப்போது நீலிக் கண்ணீர் வடிப்பது கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்வதற்கு ஒப்பானதாகும்.*


**சிந்தியா!ஆளும் கட்சியில் இருக்கும் போது மக்களின் பிரச்சினைகள் தெரிவதில்லை என்று றங்கா எம்.பி திருவாய் மலர்ந்துள்ளாரே?**

எஸ்.ரவிச்சந்திரன். நுவரெலியா.

*அவர் திருவாய் மலர்ந்திருப்பது இருக்கட்டும் ரவிச்சந்திரன். அவருக்கு ஓட்டுப்போட்டு நாடாளுமன்றம் அனுப்பி வைத்த உங்களின் பகுதிக்கு அவர் இறுதியாக திக் விஜயம் மேற்கொண்டது எப்போது? என்று முதலில் அறிந்து கொள்ளுங்கள்.*

*பதவிக்கு வருமுன்னர் மலையகத்தின் அரசியல்வாதிகள் கருவியால் பதில்சொல்ல மாட்டார்கள் என்ற நம்பிக்கையில் சகட்டு மேனிக்கு விமர்சித்தவரிடம் மக்கள் பதவியைக் கொடுத்தபோது "ஊருக்குத்தான் உபதேசம் தனக்கில்லை" என்று வாலைச் சுருட்டி வைத்துக் கொண்டிருக்கிறார்.*

*இவ்வாறானவர்கள் முதலில் மற்றவர்களைப் பார்த்து கருத்துக்களை உதிர்வதற்கு முன்னர் தங்களைத் தாங்கள் திருத்திக் கொள்வது நல்லது.*



**சிந்தியா! 13 ஆம் திருத்தச் சட்டத்தினை நீக்கும் முயற்சிகள் எந்தளவில் இருக்கின்றது?**

அ.பாலசுப்பிரமணியம்.
யாழ்ப்பாணம்.

*13 ஆவது திருத்தச் சட்டத்தை அழிப்பதற்கு கங்கனம் கட்டிக் கொண்டிருப்போர் அதில் தீவிரமாகவே இருக்கின்றனர்.*

*ஆனால், ஓர் ஆறுதலான விஷயம் என்னவென்றால் எதிர்ப்பு இருக்கின்ற அளவுக்கு அல்லது அதைவிடப் பலமாக ஆதரவுக் குரல்கள் அரசாங்கத் தரப்புக்குள் இருந்தே மேற்கிளம்பி வருகின்றது என்பதுதான்.*

*அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ஆறுமுகம் தொண்டமான், ரவூக்ஹக்கீம், ராஜித சேனாரட்ண, டிலான் பெரேரா, வாசுதேவ நாணயக்கார என அந்தப் பட்டியல் தொடர்கிறது.*

*"பொறுத்தார் பூமி ஆழ்வார்கள்" என்று சொல்வார்கள் நாமும் பொறுத்திருந்து பார்ப்போம்.*

**சிந்தியா! இப்போது புதுக்கவிதைகளின் தரம் வளர்கிறதா? இல்லை தேய்கிறதா?**

எம். பவதாரணி. சாவகச்சேரி.

*கவிஞர்கள் என்று பலபேரும் தரமான கவிதைகள் என்று சிலதும் இருப்பது தற்போதைய நிலவரம்.*

*பவதாரணி நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள் புதுக்கவிதைகள் வளர்கிறதா? இல்லை தேய்கிறதா? என்று.*

**சிந்தியா! காதலின் அடித்தளம் எவ்வறு அமைய வேண்டும்?**

ஏ.ஷாலினி. மட்டக்களப்பு.

*அன்பு - நம்பிக்கை- புரிந்துணர்வு என்பவைதான் சீமேந்து - மணல் - கல் போன்றவை. உரிய அளவில் சேர்த்து குழைத்து இதம் - பதம் பார்த்து போட்டு விடுங்கள் காதலின் அடித்தளத்தை.*

*காலங்கள் ஓடினாலும் சூழல்கள் மாறினாலும் ஆட்டங்காணாது.*

**சிந்தியா! காதலில் பலவிதம் அதில் சில விதம் கூறும் பார்க்கலாமே?**

ம.மயூரிகா. திருகோணமலை.

*'எங்கிருந்தாலும் வாழ்க!" என்பர் சிலர் " என்னையா ஏமாற்றிவிட்டாய்? எங்கு போனாலும் பார்க்கிறேன் ஒரு கை" என்பர் இன்னொரு சிலர் " குளத்தில் மீனுக்கா பஞ்சம் போனால் போகட்டும் என்று அடுத்து மீனுக்கு வலை வீசுவர் இன்னும் சிலர். மயூரிகா. இதில் நீர் எந்த ரகம்....?*

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## ஐ.தே.க.வின் நிழலில்...

பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்ற பேரினவாதிகளின் கோரிக்கை சிங்கள மக்கள் மத்தியிலும் அரசியல்வாதிகள் மத்தியிலும் ஓரளவாவது அங்கீகாரம் பெறும் நிலையைக் கூட்டமைப்புத் தலைவர்களே ஏற்படுத்தினார்கள். சிங்கள மக்கள் இவர்களைப் பிரிவினை வாதிகளாகப் பார்க்கும் வகையில் இவர்களின் செயற்பாடுகள் அமைந்திருந்தன. தமிழ் மக்கள் இன்று முகங்கொடுக்கும் அரசியல் நெருக்கடியைத் தோற்றுவித்தவர்கள் கூட்டமைப்பத் தலைவர்களே எனக் கூறுவது எவ்விதத்திலும் தவறாகாது.

தாங்களே தோற்றவித்த நெருக்கடியிலிருந்து தமிழ் மக்களை விடுவிக்கும் வகையில் செயற்படுகின்றார்களா என்றால் அதுவுமில்லை. ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியில் அமர்த்தும் நோக்கத்துடனேயே இப்போதும் செயற்படுகின்றார்கள். பதின்மூன்றாவது திருத்தத்தை வலுக்குறைப்புச் செய்ய வேண்டும் என்ற கருத்தை ஐக்கிய தேசியக் கட்சி பகிரங்கமாகக் கூறியிருக்கின்றது. அந்தக் கட்சியுடன் சேர்ந்து பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாக்க முயற்சிப்பது போன்ற பேய்க்காட்டு வேறெதுவும் இருக்க முடியாது.

பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாக்கும் விசுவாசமான நோக்கம் கூட்டமைப்புத் தலைவர்களுக்கு இருக்குமானால், முதலில் அவர்கள் இரண்டு விடயங்களைச் செய்ய வேண்டும். இனப் பிரச்சினையின் தீர்வுக்கான தங்கள் கொள்கையைத் தெளிவாக முன்வைக்க வேண்டும். மாகாண சபையை ஏற்று அதிலிருந்து படிப்படியாக அரசியல் தீர்வை நோக்கிச் செல்லும் அணுகுமுறையை ஏற்கவேண்டும். இரண்டாவதாகப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்குபற்ற வேண்டும். இவற்றைச் செய்யத் தயங்குவது தமிழ் மக்களைத் தொடர்ந்து ஏமாற்றுவதாகவே முடியும்.

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## அதிகாரப் பகிர்வும்....

செறிவான உதவிகளும் மேலும் மேலும் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியம் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

கடந்த முப்பது ஆண்டுகளாக நடந்த யுத்தத்தினால் இழந்த வளங்களையும், மனித வலுவையும் ஈடு செய்வதற்கு அல்லது மீளக்கட்டியெழுப்புவதற்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் கட்டப்பட வேண்டியிருக்கின்றது.யாழ்.மாவட்டத்தில் 14 ஆயிரம் வீடுகள் வரையில் தேவைப்படுகின்றது என்றெல்லாம் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதே போன்று அந்தப் பிரதேசங்களின் ஏனைய அடிப்படைத் தேவைகளும் வாழ்வாதார வசதிகளும் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதும் உண்மையே. இந்நிலையில் குறித்த வரவு செலவுத் திட்டத்தில் இப்பிரதேசங்களை மையமாகக் கொண்ட பல அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதும் கவனிக்கப்பட வேண்டியதே.

வடக்குக் – கிழக்கு மக்களைப் பொறுத்தவரையில் அபிவிருத்திப் பணிகள் எவ்வாறுதான் முடுக்கிவிடப்படுகின்றபோதிலும் அது தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு அது வெற்றிகரமான பலன்களை மக்களுக்கு வழங்குவதும் மக்கள் மனங்களில் நம்பிக்கைகளையும், நிரந்தர மகிழ்ச்சியையும் ஏற்படுத்துவதற்கு அபிவிருத்தித் திட்டங்கள் மட்டும் போதுமானதாக இருக்க முடியாது.

கடந்த காலப் போரினால் தமது வாழ்வியலை முற்றாக இழந்து அரசாங்கத்தின் மீது ஓர் எதிர்மறையான கருத்துக்கள் ஊட்டப்பட்ட நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்கள் தற்போது எதிர்பார்ப்பது எல்லாம் நிரந்தரமான அமைதியையும் கௌரவமான அரசியல் தீர்வையுமேயாகும்.

அது வழங்கப்படுவதில் காட்டப்படுகின்ற இழுத்தடிப்புக்களும், கால தாமதங்களும் மக்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கும் என்பதுடன் அவர்கள் மத்தியில் முன்வைக்கப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற வரப்பிரசாதங்களும் சந்தேகக் கண்கொண்டே பார்க்கப்படும்.

இவ்வாறான ஒரு நிலையே இப்பொழுதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. வரவு செலவுதிட்டத்தில் பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற போதிலும், அண்மைக்காலமாக அரசியல் அரங்கில் பேசப்பட்டுக்கொண்டிருக்கின்ற 13ஆவது திருத்தச்சட்ட நீக்கம் என்பதே மக்களின் மனங்களில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கின்றன.

நீண்டகாலமாக அரசியல் கோரிக்கையை வைத்துப் போராடிய மக்கள், 13ஆவது திருத்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு படிப்படியாக முன்னேறி தமது அரசியல் அபிலாசைகளை அடைந்து கொள்ள முடியும் என்ற எதிர்பார்ப்பில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

இந்நிலையில் குறித்த சட்டத்தையே நீக்குவதுதொடர்பான செய்திகள் அவநம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றது.

அது மட்டுமன்றி, தமிழ் – சிங்கள மக்கள் மத்தியில் இதுவும் இல்லாவிட்டால் இந்த நாட்டில் தங்களது நிலைமை என்ன? என்ற ரீதியில் ஒரு பதற்றத்தையும் உருவாக்கியிருக்கின்றது.

இது அரசாங்கத்தின்மீது மக்களுக்கு, குறிப்பாக சிறுபான்மை மக்கள் மத்தியில் வளர்க்கப்பட்டு வருகின்ற நல்லெண்ணத்தைப் பாதிப்படைய வைக்கும் செயல் என்று அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற சில சிறுபான்மைக் கட்சிகளே கருத்துத் தெரிவிக்கும் நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது.

உண்மையில், இந்த நாட்டில் வளமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கும், இந்த நாட்டை ஆசியாவின் அதிசயமாக மாற்றுவதற்கும் முதலில் அமைதியை நோக்கிய சிந்தனையில் மக்களை வளர்த்தெடுக்க வேண்டும். இனவாதம் என்பது துடைத்தெறியப்படும் வகையில், அடிப்படை வசதிகள் உருவாக்கப்பட வேண்டும். மக்கள் மத்தியில் நம்பிக்கைகள் ஊட்டப்பட வேண்டும். அந்த நம்பிக்கை என்பது பாரபட்சம் அற்ற ஆட்சி நடப்பதாலும், அரசியல் விடயத்தில் நியாயமான தீர்வொன்றும், சமத்துவமான உரிமைகளும் இந்த அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றன என்றும் சகல மக்களும் நம்பும் நிலையை உருவாக்குதலாகும். அதற்கு அரசாங்கம் செய்ய வேண்டியதெல்லாம் தற்போது குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற தேவையற்ற கருத்தாடல்களுக்கும், உணர்வு பூர்வ பேச்சுக்களுக்கும் கடிவாளமிட்டு, ஜனாதிபதியால் அடிக்கடி கூறப்படுவது போன்று மக்கள் பலனடையக் கூடிய வகையில் இருக்கின்ற அரசியலமைப்புக்கூடாக அதிகாரங்களை அந்த மக்களின் கைகளிலேயே ஒப்படைப்பதேயாகும். இவ்வாறு செய்வதன் மூலம் இந்த நாட்டு மக்களுக்கு நம்பிக்கையும், இந்த நாட்டின் மீதான விசுவாசமும் வளர்க்கப்படும் என்பதோடு, கிடைக்கப் பெறுகின்ற அபிவிருத்திப் பணிகளின் நன்மைகளையும் சந்தேகங்கள், அச்சங்கள் என்பன இன்றி தாங்கள் அனுபவிப்பதுடன் மட்டுமன்றி நாட்டின் வளர்ச்சியிலும் தமது பங்களிப்பை செலுத்தமுடியும்.

இது ஒருபுறமிருக்க, தங்களுடைய சர்வதேச நிகழ்ச்சி நிரலுடன் இலங்கையைப் பந்தாட நினைக்கின்ற வெளிச்சக்திகளுக்கும் இலங்கையில் களம் அமைக்க முடியாத ஒரு சூழல் தானாகவே உருவாக்கப்படும்.

ஆக. மகிந்த சிந்தனை ஊடாக ஏற்படுத்த முற்படுகின்ற அபிவிருத்தி என்பது தனது இலக்கை அடைவதற்கு, வெறுமனே வெளிநாட்டு முதலீடுகளின் உதவிகளினுடாக முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தி திட்டங்கள் மட்டுமன்றி அதிகாரப் பரவலாக்தின் ஊடான நிலையான அரசியல் தீர்வும் அவசியமாகும்.

( 08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## மட்டு.நகரின்...

இது உண்மையில் எமது தொழிற்சங்க சட்ட திட்டங்களை மீறும் செயற்பாடாகவே நாங்கள் காண்கின்றோம்.

இது தொடர்பில் நாங்கள் வைத்தியசாலையின் பணிப்பாளரின் கவனத்துக்கு கொண்டு வந்தபோதிலும், இது குறித்து எந்த நடவடிக்கையும் அவர்கள் எடுக்கவில்லை. நிர்வாகப் பிழை காரணமாகவே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இது தொடர்பில் எமக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் தொடர்ச்சியான சுகவீனப் போராட்டத்தை நடத்த தீர்மானித்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கே.முருகானந்தம், சனி, ஞாயிற்றுக்கிழமை என்ற காரணத்தினால் இது தொடர்பிலான விசாரணையை மேற்கொள்ளமுடியவில்லை. இது தொடர்பில் தாதியர்களுக்கு தெரிவித்திருந்தேன். எனினும் அதனையும் மீறி அவர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர் என்றார்.

சம்பள அதிகரிப்பு மற்றும் தமக்கான வசதி அதிகரிப்புகளுக்காக ஒவ்வொரு தரப்பினரும் போராட்டங்களை நடத்துகின்றனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறைசாரந்த வகையில் முக்கியமானவர்கள் என்பதைப் புரிந்து கொள்ளாதவர்கள் பிரச்சினைகள் வளர்வதற்குக் காரணமாக அமைந்து விடுகின்றனர்.

வைத்தியர்கள் போராட்டம் நடத்தும் போது தாதியர்களும், அவர்கள் போராடும் போது வைத்தியர்களும் ஏற்படும் பிரச்சினைகளை சமாளிக்காத வரையில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படும் என்பது மாத்திரம் நிச்சயமானதாகும்.

முடிவுகளும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் பிரச்சினைகள் நிகழ்ந்து முடிந்தபின்னர்தான் கிடைக்கும். ஆனால், அவை ஏற்படாமல் பார்த்துக் கொள்வதினால் பல்வேறு விடயங்கள் மிச்சப்பட்டு விடும் என்பதனைப் பலர் பல சந்தர்ப்பங்களில் மறந்து விடுகின்றார்கள். இதனாலேயே பல பிரச்சினைகள் தோன்றிவிடுகின்றன. தாதியர்களும் வைத்தியர்களும் இது பொதுமக்களின் உயிர் தொடர்பான விடயத்தில் முன்னுரிமை கொண்டவர்களாகும்.

நாங்கள் சமூகப் பற்றுடனும் மண் பற்றுடனும் கடமையாற்றிக் கொண்டிருக்கிறோம் என்று வெளியில் சொல்லிக் கொண்டு பலர் வெட்டையும் குத்தையும் தமக்கான அணிகலனாகக் கொண்டு திரிவதும் சாதாரணமான விடயமாகும். எப்போதும் பெரும்பாலானவர்கள் தாம் மாத்திரமே எல்லாவற்றையும் சுருட்டிக் கொள்ள வேண்டும் என்றே எண்ணம் கொண்டுள்ளனர். இதனால் ஏற்படும் எதிர்காலப்பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திப்பது மிகவும் குறைவாகும்.

மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ளது போன்று பாசாங்கு காட்டிக்கொண்டு விலையேற்றத்தையும், தேவையற்ற விடயங்களுக்கு அனுமதி வழங்குவதும் அதிகரித்தே வருவதாக பொது மக்கள் மத்தியில் குறைகள் காணப்படுகின்றன.

பொதுமக்களதும் எதிர்ப்பினையும் தாதியர்களின் எதிர்ப்பினையும் ஒரு முகப்படுத்திப் பார்க்கும் பொழுது இரண்டுமே அவர்களின் நலன் சார்ந்த போராட்டமாகும். அந்தவகையில், போராட்டங்களும் ஜனநாயக முயற்சிகளும் நடைபெற ஆரம்பித்திருக்கின்றமையானது மக்களின் விளிப்புத் தன்மையில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தினையே காட்டி நிற்கின்றது.

மக்களின் பிரச்சினைகளைக் குறைப்பதே அனைவருக்கும் தேவை என்ற வகையில், மட்டக்களப்பில் புதிய மதுபானசாலை அனுமதி உடனடியாக இரத்துச் செய்யப்படுவதே உசிதமான நடவடிக்கையாக இருக்கும். அதேபோன்று தாதியர்களும் வைத்தியர்களும் பொது மக்களின் உயிர் தொடர்பானவர்கள் என்ற வகையில் அவர்கள் அனுசரித்து சிறப்பாகச் செயற்படுவது கட்டாயம் என்றுமே கூறிக்கொள்ள முடியும்.

அந்த வகையில் மட்டக்களப்பில் நடைபெற்ற இரண்டு ஆர்ப்பாட்டங்களின் பிரதிபலிப்புக்கள் மக்களின் சிந்தனையில் விழிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்றே சொல்லிக் கொள்ளமுடியும்.

( 08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## கணக்கில்...

அப்படியாயின் வைத்தியசாலைகள், பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள், நீர் பெறும் இடங்கள், சந்தைகள், போக்குவரத்து இடங்கள், பொழுது போக்கு இடங்கள், நிர்வாக அலுவலகங்கள், பாதைகள், குடியிருக்கும் வீடுகள் என்பவை ஏன் வலது குறைந்தவர்களுக்கு சவால் நிறைந்த ஒன்றாக மாறியிருக்க வேண்டும்?

வயோதிபர்கள், இளஞ்சிறார்கள், கர்ப்பிணித் தாய்மார், சக்கர நாற்காலியும் உதவி உபகரணங்களும் பாவிப்போர், காயமடைந்தோர், புலனிழந்தோர் மற்றும் அனைவரும் விஷேட தேவையுள்ளவர்கள் என்ற வரையறைக்குள் அடங்குகிறார்கள்.

எனவே இந்த விஷேட தேவைகள் உள்ளோருக்கு விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதுதான் இங்கு கரிசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய விடயம்.

இடர்கள் ஏற்படும் போது சாதாரணமாக இயன்றவர்களை விட வலது குறைந்தோர் இன்னமும் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றார்கள். இடர் முகாமைத்துவம் மற்றும் உள்கட்டுமானம் போன்ற விடயங்களில் வலதுகுறைந்தோர் பற்றி முக்கிய கரிசனை காட்டப்படவேண்டும்.

வலது குறைந்தோருக்கான சட்ட உரிமைகளைப் பாதுகாத்தால் முழுச் சமுதாயமும் நன்மையடையும். வலது குறைந்தோரைப் பாதுகாக்கக் கூடிய நீதிமன்றத்தின் தீர்ப்புக்கள் இருக்கின்றன. சட்டத்தை அமுலாக்குவதில் பல இடைவெளிகள் காணப்படுகின்றன.

சமூகத்தில் ஒவ்வொரு சாராரும் இந்த விடயத்தில் ஒரு பாத்திரப் பங்கை வகிக்க வேண்டியிருக்கின்றது. அதற்காக வலுவுள்ளோர் தமது கண்களையும் இதயத்தையும் திறந்து வைக்க வேண்டும்.

அடிமட்டத் தீர்மானம் எடுக்கும் சந்தர்ப்பங்களில் வலது குறைந்தோர் உள்வாங்கப்பட வேண்டும். அவர்களுடைய முனைப்பான பங்கேற்பு இடம் பெறாவிட்டால் வலது குறைந்த சமுதாயத்தினர் அவர்கள் தம்மை வலுவூட்டிக் கொள்ள முடியாமல் போய்விடும்.

எவரும் ஒரு கண்ணியத்துடன் வாழ்வதற்குப் பொருளாதார சுதந்திரம் தேவை. மற்றவர்களில் கூடுதலாகத் தங்கியிருந்தால் சுயகௌரவம் என்பது கேள்விக்குறியாகி விடும். அவர்கள் தமது பொருளாதார சுதந்திரத்தைக் கட்டியெழுப்பிக் கொள்ளக் கூடிய வழிமுறை இருக்க வேண்டும்.

மனிதக் கேடுகளாயினும் இயற்கை இடர்களாயினும் எளிதில் பாதிக்கப்படக் கூடிய முதலாவது தரப்பினர் இந்த வலுவிழந்தோர்தான்.

சமூகம் இன்னமும் வலது குறைந்தவர்களை எவ்வாறு அபிவிருத்தியில் உள்வாங்கிக் கொள்வது என்று தெரியாமலிருக்கின்றது. இந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஒட்டு மொத்த சமூகமுமே முக்கிய பாத்திரத்தை வகிக்க வேண்டியிருக்கின்றது.

உள்ளூர் மட்டத்தில், சமூக மட்டக்குழுக்களில் தொடங்கி அரசியல் வாதிகள் வரை இந்த விழிப்புணர்வின் தாக்கம் உணரப்பட வேண்டும்.

கட்டடங்களுக்கு அனுமதி வழங்குகின்ற பொழுது நிபுணத்துவ அறிவில்லாத நிலைமையினால் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. உள்ளூர் மட்டத்தில் நிபுணத்துவம் இல்லை. சாதாரண நிலையிலுள்ள ஒருவர் மலசல கூடத்தைப் பாவிப்பதற்கும் வலது குறைந்த ஒருவர் அந்த அணுகும் வசதியைக் கொண்டிருப்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. தற்போதுள்ள வீதிகளிலும் பொதுக் கட்டடங்களிலும் வலுவிழந்தோர் நன்மையடைய முடியாத நிலையுள்ளது.

நம்மில் எவருமே முதுமையிலிருந்து தப்பிக்க முடியாது. 2020 ஆம் ஆண்டாகும் போது நாலுபேருக்கு ஒருவர் அதாவது மொத்த சனத்தொகையில் கால்வாசியினர் வயது முதிர்ந்தோராக இருப்பர். அந்த ஆண்டை நாம் அடையும் போது இப்போதுள்ள வசதிகள் வலுவிழந்தோருக்குப் போதுமானதாக இருக்காது. சமூகத்தில் பெருந்தொகையானோர் இவ்வாறு ஒரு பிரச்சினையை எதிர்கொள்வது ஒரு சவாலாகவும் வாய்ப்பாகவும் இருக்கும்.

கல்வி, நிர்வாகம், போக்குவரத்து, சமூக சேவைகள், வாழ்வாதாரத் திட்டங்கள் என அரசு வழங்கும் சேவைகளில் வலது குறைந்தவர்கள் கூடுதலாக வைத்திய சேவையைத்தான் நாடியிருக்கின்றார்கள் என்பது ஒரு ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

கல்வி, தொழில் வாய்ப்பு, வாழ்வாதாரம், வருமானம் ஈட்டும் முயற்சிகள், அரச சேவைகள், தொழினுட்பப் பயிற்சிகள் என்பனவற்றில் வலது குறைந்தவர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதும் கண்டறியப்பட்டிருக்கின்றது.

பல்வேறு பாரபட்சமான சமூக ஓரங்காட்டல்கள் காரணமாக வலது குறைந்த மக்களிடம் சமூக உளவியல் தாக்கம் உள்ளது. அவர்களது பரிந்துரைகள், பாதுகாப்பு, அவர்களுக்கான அணுகும் வசதிகள், உள்வாங்கும் வசதிகள், மேலதிகத் தேவைகள், பங்கேற்கும் ஆற்றலை அதிகரித்தல், சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் உரிமை, அனுபவங்களைப் பகிரும் வாய்புக்கள் என்பன அதிகரிக்கப்பட வேண்டும்.

இவற்றுக்கெல்லாம் மேலதிகமாக வலது குறைந்தோருக்காக அமுலாக்கும் செயல் திட்டங்களில் கொள்கை, நடைமுறை, அறிவு, அர்ப்பணிப்பு எல்லாம் ஒன்றிணைய வேண்டும்.

ஒட்டு மொத்தத்தில் சமூக மாற்றம் வரவேண்டுமாக இருந்தால் நீண்டகால நோக்கில் பரப்புரை செய்து மக்களின் மனநிலையை மாற்ற வேண்டும்.

# காதிலைப்பூ கந்தசாமி




**வணக்கமுங்கோ! 13ஆவது திருத்தச் சட்டநீக்கம், கூட்டமைப்பை பதிவதில் தொடரும் சிக்கல், தெரிவுக்குழுவில் பங்கேற்பதில் காட்டப்படும் அசட்டை என்று பல்வேறு சிக்கல்களுக்குள் திக்குமுக் காடிக் கொண்டிருக்கும் 'கூத்தமைப்பு' உண்மை நிலவரங்களை அறியவேண்டு மாயின் கூத்தமைப்புத் தலைவர்கள், அரை உறக்கத்தில் மதிமயங்கிய நிலையில் இருக்கும்போது'லபக்'பண்ண வேண்டு மென்று தீர்மானித்துவிட்டார் கந்தசாமி யார். மாட்டிக்கொண்டார் தன்மானக் கட்சியின் தலைவர் ஒருவர்.**

**கா.பூ :** பல்வேறு அரசியல் சிக்கல்களுக் குள் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு முதலில் கூத்தமைப்பை கட்சி யாகப் பதிவுசெய்வதில் தொடரும் இழுபறி பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்.

**த.க.த:** கூத்தமைப்பில் ஐந்து கட்சிகள் இருக்கின்றோம். நாம் அனைவரும் ஒரே சின்னத்தில் வாக்குவேட்டை நடத்தினால் வாக்குகள் சிதறடிக்கப்படாமல் கணிசமான ஆசனங்களை வெற்றி கொள்ளமுடியும் என்ற நம்பிக்கையில் - எதிர்பார்ப்பில்தான் இந்தக் கூத்தமைப்பு தொடர்ந்து இழுபட்டுக் கொண்டு செல்கிறது.

எனினும், இதில் இருக்கின்ற மூத்த கட்சிக்காரர்கள் தங்களை போன் பண்ணி ஏனையவர்களை அபேஸ் பண்ணுவதில் கரிசனையோடு செயற்படுகின்றார்கள் என்பதில் சந்தேகம் இருக்கின்றது. அதனால் தான் பதியவேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்கின்றோம்.

**கா.பூ :** அந்த மூத்தகட்சியை நீக்கி விட்டு ஏனையவர்கள் பொதுக்கட்சியில் பதியலாம்தானே?

**த.க.த:** உண்மையில் அவ்வாறு பதிவதை விட பேசாமல் இருந்துவிட்டுப் போகலாம் என்பதுதான் யதார்த்தம். மூத்தகட்சியை மையமாகக்கொண்ட கூத்தமைப்புக்கே மக்கள் வாக்களித்துப் பழகிவிட்டனர்.

அதைவிட கடந்த காலங் களில் நாங்கள் நடத்திய காட்டுத் தர்ப்பார்கள் இன்றும் மக்கள் மத்தியில் நிழலாக நடமாடிக் கொண்டிருக்கின்றது. இதுவே நாம் அனைவரும் ஒருமித்திருப்பதற்கும் பொறுமை காப்பதற்கும் ஒரே காரணமாகும்.

**கா.பூ:** பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டல்லவா?

**த.க.த:** நாம் பொங்கி எழுந்தால், மங்கிப் போவதும் நாம் என்பதை நாங்கள் நன்றாக அறிந்து வைத்திருக்கின்றோம்.

**கா.பூ:** அது கிடக்கட்டும் - தெரிவுக் குழுவில் பங்கேற்கலாமே?

**த.க.த:** தெரிவுக்குழுவில் பங்கேற்பதன் மூலம் உருப்படியான ஏதேனும் கிடைத்து விடும் என்று சில சந்தேகங்கள்இருக்கின்றது. அவ்வாறு கிடைத்துவிட்டால் எமது எதிர் காலத்திற்கு சில சங்கடங்கள் ஏற்படும் வாய்ப்பும் இருக்கின்றது. அதனால்தான் கொஞ்சம் தாமதப்படுத்திக் கொண்டிருக் கின்றோம்.

**கா.பூ:** அதற்கிடையில் 13ஆவது திருத்தத்தை நீக்கவேண்டும் என்ற கோரிக்கைகள் மேற்கிளம்ப ஆரம்பித்திருக் கின்றது?

**த.க.த:** ஆம். எம்மைப் பொறுத்தவரையில் இது ஒரு அருமையான வாய்ப்பு. தெரிவுக் குழுவில் பங்குபற்றாமல் எமது கட்சி காட்டிய சாணக்கியத்துக்கு கிடைத்த வெற்றி அண்மைக் காலமாக திவிநெகும எதிர்ப்பு தெரிவுக்குழுவில் பங்குபற்றாமை என்று எமது அரசியல் விவேகங்களின் பலனாகவே 13ஆவது திருத்த ஒழிப்பு மேற்கிளம்பியிருக்கின்றது.

இதுதொடர்ந்தும் வலுப்பெற்று இல்லாதொழிக்கப்படுமாயின் இன்னும் ஒரு சில வருடங்களுக்கு எமக்கான அரசியல் கோஷங்களுக்கும் உணர்வுபூர்வ பேச்சுக் களுக்கும் பஞ்சம் இருக்காது.

சிங்கள அரசாங்கம் எதையும் தராது தந்ததையும் பறித்துவிடும் என்று கூறியே மக்களை தமிழினவாதத்துக்குள் மூழ்கடித்துவிடுவோம். அரசியலில் நாங்கள் ஜெயிப்பதற்கும் சுகபோகங்களை சுவைப்பதற்கும் தமிழ் மக்கள் இந்த தமிழினவாதத்துக்குள் மூழ்கிக் கிடக்க வேண்டும் என்பதே எமது அடிப்படை இலக்கு என்பதனால் குறித்த விடயத்தில் நாங்கள் ஜெயித்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை எமது அரசியல் சாணக்கியம் பலனளித்துக் கொண்டிருக்கின்றது என்பதையும் அண்மைக்கால பத்திரிகைச் செய்திகள் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

( திடீரென அலாரம் அடிக்க, திடுக்கிட்டு எழும்புகிறார்... தன்மானக் கட்சித் தலைவர். ஓடித் தப்புகிறார் காதிலபூ கந்தசாமி.)

**யாவும் கலப்படமற்ற பொய்**

# அச்சுக் கலையின் தந்தை






ஒருவழியாக, எழுத்தை வார்க்கும் இறுதியான வகையைக் கண்டுபிடித்து விட்டார் ஜோன். தன் முடிவைப் பெருமை யுடன் தன் கூட்டாளிகளிடம் காட்டி விளக்கினார். ஒரு இரும்புத் துண்டு. அதன் முனையில் கச்சிதமாக ஒரு எழுத்தைச் செதுக்கி உருவாக்கி இருந்தார். 'S' என்ற எழுத்து துல்லிய மாக கம்பீரமாக உயர்ந்துநின்றது.

"இந்த இரும்புத்துண்டுக்குப் பஞ்ச்" என்று பெயர். இது எப்படி வேலை செய்கிறது பாருங்கள்" என்று கூறி அந்த 'S' முகமுடைய எழுத்தை கெட்டியான சிறியதோர் தாமிரத் துண்டின்மீது குப்புறப் பதிய வைத்தார். பிறகு அந்த இரும்புத்துண்டின் மீது ஒரு சம்மட்டி கொண்டு பலமாக, ஆனால் சீராக ஓங்கியடித்தார். அப்போது நடந்தது என்ன? இரும்புத்துண்டின் முனையிலிருந்த 'S' என்ற எழுத்து மிருதுவான தாமிரத் துண்டில் அதே வடிவத்துக்கு. ஆனால் இடம்வலமாக 'S' எழுத்தின் அமைப்பைக் குழிவாக உருவாக்கிப் பதித்திருந்தது.

"இந்தத்தாமிர அச்சிலிருந்த நான் ஒரு நாளைக்கு ஆயிரம்... எழுத்துக்களை உருவாக்குவேன்" என்றார் பூரிப்புடன் கட்டன் பார்க். " இப்படியே ஒவ்வொரு எழுத்துக்கும் மோல்டு அச்சுத்தயாரித்துக் கொண்டு எழுத்துக்களை ஏராளமாக வார்த்து பிறகு புத்தகம் தயாரிக்க வேண்டியதுதான்!"

அச்சு அழுத்தும் இயந்திரமும் தயாராகிக்கொண்டு இருந்தது. இரண்டு கம்பங்கள் அதை இணைக்க மேலே உறுதியானதோர் உத்தரம். இந்த உத்தரத் தின் நடுவில் ஒரு பெரிய ஸ்குரூ இதைஇயக்க அதன்மேல் ஒரு கைப்பிடி. ஸ்குரூவின் கீழ், ஓர் உறுதியான வழவழப்பான பலகை இணைக்கப்பட்டிருந்தது. கைப்பிடியைச் சுற்றுவதன்மூலம் ஸ்குரூவை இயக்கி, இந்தப் பலகையை ஏற்றலாம். இறக்கலாம். இரு கம்பங்களுக்கும் இடையே கீழே பெஞ்ச் போன்ற தோர் அமைப்பு அதை நகர்த்தவும்., இழுக்கவுமாக மரச்சட்டத்தில் எழுத்துக்கள் அடுக்கிக் கட்டிவைக்கப்பபட்டன.

(தொடரும்...)

# இந்தவாரம் உங்கள் பலன்

(22.11.2012 தொடக்கம் 28.11.2012 வரை)

## மேடம்

முன்கோபம் தவிர்த்தல் உகந்ததாகும். உத்தியோகத்துறையினர்களுக்கு பதவி உயர்வுகளுடன் கூடிய பணி இடமாற்றம் ஏற் படக்கூடும். எதிர்பாராத விருந்தினர்கள் வரவால் சில ஆதாயங்களை அடையலாம். குலதெய்வ வழிபாடு செய்துவருவது நல்லது. புதிய தொழில்களை ஆரம்பம் செய்ய முயற்சிகள் செய்வீர்கள். தீராத பிரச்சினைகளுக்கு பெரிய மனிதர்கள் உதவி யால் தீர்வு கிடைக்கும். உடம்பில் சளி போன்ற நோய்கள் வந்துபோகும். திடீர் அதிர்ஷ்டம் மூலம் தனவரவு உண்டாகும். வராத கடன் கொடுத்துள்ள பணம் திரும்பக் கைவந்து சேரும். தென்திசையில் இருந்து பெண்களால் ஆதாயம் உண்டாகும். தாய், தந்தை உறவு-களில் வந்துள்ள பிரச்சினைகள் தீரும்.

## இடபம்

செய்தொழிலில் பங்காளிகளுடன் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவும். காதல் விசயங்களில் வெற்றி தேடித் தரக்கூடிய காலமாகும். உடம்பில் வயிறுமூலம் சம்பந்த மான உபாதைகள் வந்துநீங்கும். இதுநாள் வரையில் இருந்துவந்த கருத்து வேறுபாடு கள் தீர்ந்து கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். குடும்ப நன்மைகளுக்காகச் சகோதரர்களால் அனுகூலம் ஏற்படும். வெகு காலமாக மறைமுகமாக இருந்து வந்துள்ள எதிரிகளின் தொல்லைகள்தீரும். பழம் போன்ற வியாபாரிகள், வக்கீல்கள், நீதிபதிகள் பேராசிரியர்கள் மற்றும் நறுமணப் பொருட்க ளின் வியாபாரிகள், தங்கம் - வெள்ளி போன்ற நகைக் கடைகள் நடத்துபவர்கள், நற்பலன் உண்டாகும்.

## மிதுனம்

புதிய வீடு, நிலம் வாங்க எடுத்துக் கொண்ட நீண்ட கால முயற்சிகளில் நல்ல பலன் உண்டாகும். பக்கத்து வீடுகளில் பக்குவமாகப் பேசிப் பழகுவதால் பிரச்சினைகள் குறையும். விட்டுப்போன பழைய பிரச்சினைகள் மீண்டும் தொடரும். வெளிநாடு சென்று வருவதற்கான முயற்சிகளைச் சற்று தள்ளிப் போடவும். ஆலய வழிபாடுகளால் மனநிம்மதி அடைவீர்கள். புதிய கடன் வாங்கிப் பழைய கடனை அடைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர வாய்ப்பு உள்ளது. பிரிந்துபோன பழைய உறவுகள் மீண்டும் ஒன்றுசேரும் காலமாகும். தந்தை, மகன் உறவுகள் சுமாராகக் காணப்படும்.

## கடகம்

புதிய நண்பர்களின் சேர்க்கையால் பொருள் இழப்பும், வீண் பிரச்சினைகளும் ஏற்படும். நீண்ட தூரப் பயணங்களைத் தள்ளிப் போடவும். மூத்த சகோதரர்களால் குடும்பத்தில் சிற்சில பிரச்சினைகளைச் சந்தித்து மனநிம்மதி குறையலாம். வங்கி களில் இருந்து எதிர்பார்த்த கடன்கள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பூமி, நிலம் வாங்குதல் போன்ற நீண்டகால முயற்சிகளில் தற்போது வெற்றி அடைவீர்கள். பெண்களால் தூரத்தில் நற்செய்திகளைக் கேட்பீர்கள். திருட்டுப்போன பொருட்கள் திரும்ப வீடு வந்துசேரும். உடல்நலத்தில் மூலம் வயிறு சம்பந்தமாகிய தொல்லைகள் வந்துபோகும்.

## சிங்கம்

உடம்பில் கண், காதுகளில் கவனமுடன் இருக்கவும். பூர்வீகச் சொத்து சம்பந்தமான பிரச்சினைகளில் இருந்துவந்த தொல்லைகள் மேலும் தொடரும் என்பதால் க்வனமுடன் செயற்படுவது நல்லது. புதிய வீடு, நிலம் வாங்குவது போன்ற விஷயங்களைச் சற்றுக் காலதாமதமாக செய்வது உகந்ததாகும். நண்பர்களிடம் காரணமற்ற மனக்கசப்புகள் ஏற்பட்டு பிரச்சினைகள் உருவாகலாம். உத்தியோகம் செய்பவர்களுக்கு இடையூறு கள் வந்துபோகும். விருந்தினர்களின் வரவால் பொருட்செலவுகள் உண்டாகும். உறவினர்கள் மற்றும் நண்பர்களின் திடீர் வரவுகளால் பொருட்செலவுகள் வந்து சேரும்.

## கன்னி

பிள்ளைகளின் உடல்நிலையில் பாதிப்பு கள் ஏற்பட்டு பொருட்செலவுகள் உண்டு. காதல் சம்பந்தமான பெண்கள் விசயத்தில் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவும். பங்குத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு நஷ்டத்தை அடைய வாய்ப்பு இருப்பதால் மிகவும் எச்சரிக்கையுடன் ஈடுபடுவது நல்லது. புதிய தொழில்களை ஆரம்பம் செய்வதற்கான முயற்சிகளைச் சிறிதுகாலம் தள்ளிப்போடுதல் நல்லது. உடம்பில் வாயு மற்றும் வயிறு சம்பந்தமான உபாதைகள் வந்து நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பணப்புழக்கம் நன்றாக இருக்கும். கொடுக்கல் - வாங்கலில் நாணயம் காப்பாற்ற இயலாதநிலை இருப்ப தால் புதிய கடன் வாங்குவதைத் தவிர்க்கவும்.

## துலாம்

பிள்ளைகளால் எதிர்பாராத தனவரவு கள் உண்டாகுவதோடு அவர்களால் பொருட் செலவும் உண்டாகும். குடும்பச் சொத்துக் கள் பிரிவினை போன்ற விசயத்தில் நல்ல முடிவுகள் கிடைக்கும். உத்தியோகத்துறை யினர்களுக்குப் பணி இடமாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. வேலையில்லாத படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் தேடி வரும் காலமாகும். வரவேண்டிய சொத்துக் கள் திரும்பக் கை வந்துசேரும் காலமாகும். நண்பர்களால் வீண் பொருட்செலவுகளும் மனநிம்மதிக் குறைவும் ஏற்படலாம். திரு மணம் போன்ற சுபகாரிய விசயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## விருச்சிகம்

குடும்பத்தில் இதுநாள் வரையில் தடைப்பட்டு வந்த திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். குலதெய்வ ஆலய வழிபாடுசெய்து வருவதற்காக. முயற்சி செய்வீர்கள். வராத கடன் கொடுத்து இருந்த பணம் திரும்பக் கைக்கு வந்துசேரும் கால மாகும். கலைத்துறையினர்களும் அரசியல் வாதிகளும் மிகவும் கவனமுடன் நடந்துகொள் வது நல்லது. பொருளாதாரத்தில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் மாறி சற்று முன்னேற்றம் காணப்படும். காதலர்கள் சந்தோசமாக இருப்பர். காரணமற்ற சிறிய விசயங்களுக்காக குடும்பத்தில் சிற்சில பிரச்சினைகள் வந்துவிலகும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## தனுசு

செய்தொழிலில் இருந்து வந்த பிரச்சினைகளில் மேலும் சற்று பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அண்டை, அயல் வீட்டுக்காரர்களுடன் மிகவும் கவன-மாகப் பேசிப்பழகுதல் நல்லது. யாத்திரையில் குழந்தைகளை எச்சரிக்கையுடன் பார்த்துக் கொள்ளவும். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைக்க வாய்ப்பு உள்ளது. வீடுகளில் கவனமுடன் இருந்தால் திருட்டுப் போவதை தடுக்கலாம். புதிய ஆடை, அணிகலன், ஆபரணங்களை வாங்குவீர்கள். நண்பர்கள் மற்றும் உறவுகளின்மூலமாக எதிர்பாராத பொருட்செலவுகள் வரக்கூடும். இதுவரை விடை காணமுடியாத நோய் களுக்கு விடைகாணும் காலமாகும்.

## மகரம்

நீண்டகாலமாக வராத கடன்கொடுத்த பணம் திரும்பிக் கை வந்துசேரும். காதல் விசயத்தில் நல்ல தகவல்கள் வந்துசேரும். உடல்நிலையில் கண், காதுகளில் கவன முடன் இருக்கவும். பங்காளிகளுடன் சேர்ந்து புதிய தொழில்கள் ஆரம்பம் செய்ய போட்ட திட்டங்கள் நிறைவேறும். குலதெய்வ வழி-பாடு செய்து வருவதற்கான முயற்சிகள் தடை யின்றி நிறைவேறும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் மனமகிழ்ச்சி உண்டாகும். பழைய வாகனங்களை விற்றுப் புதிய வாகனங் களை வாங்கும் முயற்சிகள் நிறைவேறும் காலமாகும். கணவன் - மனைவிக்கிடையில் ஒற்றுமை மேலோங்கும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## கும்பம்

பொருளாதாரத்தில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் மாறிப் பொருளாதாரம் சீராக இருக்கும். பூர்வீகச் சொத்துக்களில் வெகு காலமாக இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து மனமகிழ்ச்சி அடைவீர்கள். ஒரு சிலருக்கு சொத்துக்களை விற்பதில் பணம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. வெளிநாடு சென்றுவருதல் போன்ற புதிய முயற்சிகளில் மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் குறைந்து மனஅமைதி ஏற்படும். புதிய வீடு, நிலம், கார் போன்றவை வாங்குவீர்கள். நண்பர்கள் மற்றும் பங்காளி களால் ஆதாயம் உண்டாகும்.

## மீனம்

புதிய கடன் வாங்கிப் பழைய கடன் களை அடைப்பீர்கள். தொலைதூரப் பயணங்களில் மிகவும் கவனமுடன் சென்று வரவும். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவி களும் மற்றும் நற்பெயர் புகழும் உண்டாகும் காலமாகும். பிள்ளைகளுக்கு இதுவரையில் தடைப்பட்டு வந்த திருமண போன்ற சுபகாரி யங்கள் நிறைவேறும். தாய், தந்தைகளுக்கு உடல்நிலையில் சிற்சில பாதிப்புகள் வந்து விலகும். நண்பர்களால் சிற்சில பிரச்சினைகள் வந்துவிலகும். உத்தியோகம் பார்ப்பவர்கள் மேலதிகாரிகளிடம் முன்கோபத்தை தவிர்த்து மிகவும் எச்சரிக்கையுடன் பணி ஆற்றுதல் நல்லது. கண் மற்றும் காதுகளில் கவனம் தேவை. தனப்புழக்கம் நன்றாக இருக்கும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

